நான்மணிக்கடிகை

அம்சவேணி பெரியண்ணன் உரை

நான்மணிக்கடிகை

அம்சவேணி பெரியண்ணன் உரை

(மூலமும் - எளிய உரையும்)

அம்சவேணி பெரியண்ணன் M.A.,

வனிதா பதிப்பகம்

11, நானா தெரு, தியாகராய நகர்,
சென்னை-600 017. ☎ 044-42070663

நான்மணிக்கடிகை அம்சவேணி பெரியண்ணன் உரை ❑ அம்சவேணி பெரியண்ணன் ❑ பதிப்பு 2019 ❑ பக்கங்கள்: 136 ❑ வெளியீடு: வனிதா பதிப்பகம், எண். 11, நானா தெரு, தி.நகர், சென்னை-17. ❑ தொலைபேசி: 42070663 ❑ ஒளி அச்சு: லதா கம்பியூட்டர், சென்னை. ❑ அச்சிட்டோர்: பத்மாவதி ஆப்செட், சென்னை.

விலை: ரூ.120.00

பதிப்பாளர்: **டாக்டர்.பெ.மயிலவேலன்,**

M.Sc.,M.Ed.,M.Phil.,Ph.D.

எச்சரிக்கை

காப்பிரைட் சட்டத்தின்கீழ் பதிவு பெற்றுள்ள இந்நூலில் இருந்து எப்பகுதியையும் முன் அனுமதியின்றிப் பிரசுரிக்கக்கூடாது; தவறினால் சிவில், கிரிமினல் சட்டங்களின்படி நடவடிக்கை எடுக்கப்படும்.

டாக்டர்.பெ.மயிலவேலன், M.Sc.,M.Ed.,M.Phil.,Ph.D.

Copyright Warning: No part of this book may be reproduce or transmitted in any form or by any means electronic or mechanical including photocopying or recording or by any information storage and retrieval system without permission in writing from **Dr.P.MAILAVELAN,** M.Sc.,M.Ed.,M.Phil.,Ph.D. Chennai.

Any violations of these conditions, legal action will be initiated in civil and criminal proceedings under the Copyright Act 1957.

NANMANIKADIGAI HAMSAVENI PERIANNAN URAI ❑ HAMSAVENI PERIANNAN ❑ Edition: 2019 ❑ Pages: 136 ❑ Published by: Vanitha Pathippagam, No.11, Nana Street, Pondy Bazaar, T.Nagar, Chennai-17 ❑ Phone: 42070663 ❑ Typeset: Latha Computer, Chennai ❑ Printed at: Padmavathi Offset, Chennai.

Price: **Rs. 120.00**

Publisher: Dr.P.MAILAVELAN,

M.Sc.,M.Ed.,M.Phil.,Ph.D.

பதிப்புரை

இரண்டு அடிகள் முதல் எட்டு அடிகள் வரை பாடப் பெற்றவை கீழ்க்கணக்கு நூல்களாகும்.

கீழ்க்கணக்கு நூல்கள் அனைத்துமே வெண்பாக்கள். குறள் வெண்பா, சிந்தியல் வெண்பா; நேரிசை வெண்பா; இன்னிசை வெண்பா, பஃறொடை வெண்பா ஆகிய வெண்பாக்களால் யாக்கப் பெற்றவை.

"நாலடி நான்மணி நால்நாற்ப தைந்திணைமுப்
பால்கடுகம் கோவை பழமொழி மாமூலம்
இன்னிலைசொல் காஞ்சியோ டேலாதி என்பவே
கைந்நிலைய வாம்கீழ்க் கணக்கு."

கீழ்க்கணக்கு நூல்கள் பதினெட்டு

1. நாலடியார், 2. நான்மணிக்கடிகை, 3. இன்னா நாற்பது, 4. இனியவை நாற்பது, 5. கார்நாற்பது, 6. களவழி நாற்பது, 7. அய்ந்திணை அய்ம்பது, 8. அந்திணை எழுபது, 9. திணைமொழி அய்ம்பது, 10. திணைமாலை நூற்றைம்பது, 11. கைந்நிலை (இன்னிலை), 12. திருக்குறள், 13. திரிகடுகம், 14. ஆசாரக்கோவை, 15. பழமொழி நானூறு, 16. சிறுபஞ்சமூலம், 17. முதுமொழிக் காஞ்சி, 18. ஏலாதி ஆகியவை.

பதினெண் கீழ்க்கணக்கு நூல்கள் கி.பி. எட்டாம் நூற்றாண்டைச் சேர்ந்தவர்கள். இதில் திருக்குறள் முதல் நூற்றாண்டைச் சேர்ந்தவையாகும். திருக்குறளுக்கு முப்பால் என்ற பெயர்தான் அப்பொழுது வழங்கப் பெற்றன.

பதினெண்கீழ்க்கணக்கு நூல்களில் நான்மணிக்கடிகை என்னும் நூல் மிகவும் எளிமையாகவும், இனிமையாகவும் அம்சவேணி பெரியண்ணன் அவர்கள் உரை எழுதி யுள்ளார். இவர் தமிழகத்தின் முதல் பெண் பதிப்பாளராக 3000க்கும் மேற்பட்ட நூல்களை பதிப்பித்துள்ளார்.

இந்நூல் கடல் நீரை வடிக்கட்டி குவளையில் கொடுக்கப் பெற்றுள்ளது. கரும்பைக் கசக்கிப் பிழிந்து வெல்லக் கட்டியாக்கித் தரப்பெற்றுள்ளது. சுவைப்பீர்! பயன் பெறுவீர்!!

❒ ❒ ❒

விளம்பி நாகனார் இயற்றிய

நான்மணிக்கடிகை

விளக்கவுரை

1. கடவுள் வாழ்த்து

மதிமன்னும் மாயவன் வாள்முகம் ஒக்கும்
கதிர் சேர்ந்த ஞாயிறு சக்கரமும் ஒக்கும்
முதுநீர் பழனத்துத் தாமரைத் தாளின்
எதிர்மலர் மற்றவன் கண்ஒக்கும் பூவைப்
புதுமலர் ஒக்கும் நிறம். *1*

விளக்கவுரை

திருமாலின் முகம் சந்திரனைப் போன்றது; சூரியன் போன்றது சக்கரம்; செந்தாமரை போன்றது அவரது கண். காயாம்பூப் போன்றது அவரது நிறம். திருமாலின் எழில் முதல் பாடலில் கூறப்படுகிறது. நான்மணிக்கடிகையை இயற்றிய ஆசிரியர் திருமாலைப் புகழ்ந்து கடவுள் வாழ்த்துத் தருகிறார். திருமாலின் முகம் சந்திரனைப் போல் குளிர்ச்சியுடையது. அவர் தரித்திருக்கும் சுதர்சனச் சக்கரம் சூரியனைப் போல் பிரகாசம் உடையது என்று ஆசிரியர் கூறுகிறார். தன்னைப் பணிந்து வணங்குகிறவர்களுக்குக் குளிர்ச்சி பொருந்திய திவ்ய முகம் தரிசனம் தருபவர் திருமால். அதேசமயம் தீயவர்களைச் சக்கரப் படை கொண்டு அழிப்பவரும் அவரே! அமைதியின் திருமுகம் ஒருபுறம்; தீமையை அழிக்கும் வேகம் ஒருபுறம். அப்படிப்பட்ட இறைவனை ஆசிரியர் நினைவு கூர்ந்து இந்நீதி இலக்கியத்தைத் தொடங்குகிறார். எந்தக் காரியத்தை நாம் தொடங்கினாலும் இறைவனை பூஜித்து தொடங்க வேண்டும். பெரியோர்களின் அனுமதி பெற்றுச் செய்ய வேண்டும் என்ற பாரம்பரியத்தின்படி நான்மணிக்கடிகை ஆசிரியரும் திருமாலைப் போற்றுகிறார். திருமாலின்

கண்கள் செந்தாமரை மலர் போன்றது. அவரது நிறம் காயாம்பூ நிறம் என்றெல்லாம் கூறுப்படுகிறது. இறைவன் எழில் மிகுந்தவர். தருமத்தின் பக்கம் இருப்பவர். தீமைகளை அழிக்கும் வல்லமை பெற்றவர். அவரின்றி எச்செயலும் நடப்பதில்லை. அவர் திருவுளமின்றி எவரும் செயல்பட முடியாது. இந்த உண்மைத் தத்துவத்தை உணர்ந்த ஆசிரியர் தன் படைப்பு உலகுக்குப் பயன்பட வேண்டும் என்று கருதி இக்கடவுள் வாழ்த்தினை பாடியிருக்கிறார்.

அ.பொ.

மன்னும் மாயவன்-அழியாத் திருமால். கதிர் சேர்ந்த ஞாயிறு-ஒளி பொருந்திய சூரியன். எதிர்மலர்-தோன்றிய செந்தாமரை மலர். பூவைப்புதுமலர்-காயாவின் புதிய பூ.

> படியை மடி அகத்து இட்டான், அடியினால்
> முக்கால் கடந்தான் முழுநிலம், அக்காலத்து
> ஆப்பனித் தாங்கிய குன்றெடுத்தான், சோவின்
> அருமை அழித்த மகன். 2

விளக்கவுரை

உலகத்தைத் தன் வயிற்றினுள் வைத்தான். தன் பாதத்தால் உலகம் முழுமையும் மூன்று முறைகளில் அளந்தான். பசு மந்தைகளின் நடுக்கத்தை நீக்க கோவர்த்தன மலையைக் குடையாகப் பிடித்தான் பாணா சுரனின் நெருப்பு மதிலை அழித்த பெருமையுள்ளவன் திருமால். இப்பொருளில் இப் பாடல் அமைந்துள்ளது. ஆயர்பாடியில் கண்ணனாகத் திருமால் வளர்ந்தார். அப்போது வளர்ப்புத் தாயாகிய யசோதை கண்ணன் மீது அளவு கடந்த அன்பினைக் கொண்டிருந்தாள். ஒருசமயம் கண்ணன் மண்ணைத் தின்றான் என அறிந்து அவனைக் கண்டிக்க வாயை திறக்கச் சொன்னாள். கண்ணன் வாயைத் திறந்தாள். உலகம் முழுவதும் அவனுக்குள் அடக்கமா யிருப்பதைக் கண்டு பிரமித்தாள். உலகத்தைத் தனக்குள் வைத் தவன் என்று ஆசிரியர் கூறுவது இப்பொருளில்தான். அசுர சக்தி பலம் பெறக்கூடாது என்பதற்காக வாமன வடிவம் கொண்டு திருமால் மூன்று உலகங்களையும் அளந்தார். ஓர்

அடியால் பூமியையையும், மறுஅடியால் ஆகாயத்தையும், மூன்றாம் அடியை அசுரன் தலைமீது வைத்து அவனைப் பாதாளத்திற்குள் அழுத்தினார். இதையே மூன்று முறைகளில் உலகத்தை அளந்தவன் என்று ஆசிரியர் கூறுகிறார். ஒருசமயம் யாதவர்கள் இந்திரனுக்கு விழா எடுப்பதை விட்டு கோவர்த்தன மலைக்கும், பசுக்களுக்கும் விழா எடுத்தார்கள். அதனால் கோபம் கொண்ட இந்திரன் வருணனை அழைத்துக் கடும் மழையை பொழியச் செய்தான். ஆயர்களும், பசுக்களும் இத னால் துன்பம் அடைந்தனர். அப்போது கண்ணன் கோவர்த்தன கிரியைக் குடையாகத் தூக்கிப்பிடித்தார். பசுக்களும், ஆயர்களும் பாதுகாப்பாக அக்குடையின்கீழ் வந்தார்கள். இந்திரன் தோல்வி யடைந்து வருணனை திருப்பி அழைத்துக் கொண்டான். இதையே கோவர்த்தனகிரியைக் குடையாகப் பிடித்தான் என்று ஆசிரியர் கூறுகிறார். அதர்மச் செயல்கள் செய்த பாணாகரனின் நெருப்பு மதிலைத் திருமால் அழித்துத் தருமத்தை நிலைநிறுத் தினார். இதையும் கடவுள் வாழ்த்தில் ஆசிரியர் நினைவுபடுத்து கிறார். அதர்மம் அழித்து தருமத்தை நிலைநிறுத்தும் திருமாலைத் துதித்து தன் நீதி நூலான நான்மணிக்கடிகையை அவர் எழுதியிருக்கிறார் என்பது இதன்மூலம் அறியப்படுகிறது.

அ.பொ.

படியை-உலகத்தை; மடியகத்து இட்டான்-தன்வயிற்றினில் வைத்தான். அடியினால்-தன் பாதத்தினால். முக்கால் கடந்தான்-மூன்று முறைகளில் அளந்தான்.

நூல்

எள்ளற்க என்றும் எளியார் என்று, என்பெறினும்
கொள்ளற்க கொள்ளார்கை மேலவர், உன்கடினும்
சீறற்க சிற்றில் பிறந்தாரைக், கூறற்க
கூறல்லவற்றை விரைந்து. *1*

விளக்கவுரை

எந்தக் காலத்திலும் எளியார் என்று பிறரை இகழக் கூடாது. எவ்வளவு சிறந்த பொருளாக இருந்தாலும் தகுதி

அற்றவர்களிடம் வாய்க்கக்கூடாது. தன்மனம் துன்பம் அடைந்தாலும் ஏழைக் குடியில் பிறந்தவரைக் கோபிக்கக் கூடாது. சொல்லத்தகாத சொற்களை அவசரப்பட்டுச் சொல்லக்கூடாது. இப்பொருளில் இப்பாடல் உள்ளது.

துரோணரும், துருபதனும் சிறுவயதில் நண்பர்களாக இருந்தார்கள். அப்போது துருபதன், நான் அரசன் ஆனால் உனக்கு பாதிராஜ்ஜியம் கொடுப்பேன் என்று கூறினான். காலச்சக்கரம் சுழன்றது. துருபதன் வாலிபப் பருவத்தை அடைந்து மன்னன் ஆனான். துரோணர் சகலகலைகளிலும் தேர்ச்சி பெற்றும் வறுமையில் வாடினார். அந்தச் சமயம் தன் நண்பன் துருபதனின் நினைவு அவருக்கு வந்தது. அவனிடம் சென்றால் தன் வறுமை தீரும் என்று அவர் நினைத்தார். அதனால் அவன் அரண்மனையை அடைந்தார். துரோணரைக் கண்ட துருபதன் அவரை மரியாதையாக நடத்தவில்லை. வந்த நோக்கம் என்ன? என்று கேட்டான். சிறுவயதில் நண்பர் களாகப் பழகியதையும், அவன் கூறிய உறுதி மொழியையும் துரோணர் நினைவுபடுத்தினார். அதைக் கேட்ட துருபதனின் முகம் மாறியது. சிறுவயது பேச்சுக்களை ஒரு பொருட்டாக யாராவது கருதுவார்களா? ஏழ்மையில் வாடும் ஒருவனுக்கும், ஐஸ்வர்யம் நிறைந்த ஒருவனுக்கும் நட்பு ஏற்படுமா? என்று இகழ்ச்சியாக அவன் பேசினான். அந்தச் சபையில் அவமானத் தால் கூனி குறுகி நின்றார். துரோணர் தகுதியற்ற அவனிடம் எப்பொருளையும் பெற அவர் விரும்பவில்லை. அரண் மனையை விட்டு வெளியேறினார். பாண்டவர்களுக்கும், கௌரவர்களுக்கும் வில் வித்தை கற்றுத் தரும் வாய்ப்பு அவருக்குப் பின்னாளில் கிடைத்தது. அப்போது அவ்விரு தாத்தாரும் குருதட்சணை தர முன்வந்தார். துருபதனைப் போரில் தோற்கடித்து என் முன் நிறுத்தவேண்டும். அதுவே நான் விரும்பும் குருதட்சணை என்று அவர் கூறினார். முதலில் சென்ற கௌரவர்கள் துருபனிடம் போரிட்டுத் தோல்வி யடைந்து திரும்பினர். பிறகு பாண்டவர்கள் சென்று போர் செய்தனர். துருபதனைச் சங்கிலியால் பிணித்துத் தன்குருநாதர் துரோணர் முன் நிறுத்தினான் அருச்சுனன். துருபதன்

அங்கே தலை கவிழ்ந்து நின்றான். துரோணரை எளிமை யானவர் என்று எண்ணி இகழ்ச்சியாகப் பேசியதால் துருபத னுக்கு இந்த நிலை வந்தது.

எவரையும் கோபிக்கக் கூடாது. 'தகாத சொற்களை அவசரப்பட்டுச் சொல்லக்கூடாது என்ற நான்மணிக்கடிகை வாசகங்கள் இந்தச் சம்பவத்திற்கு விளக்கவுரையாக இருப் பதை நினைவுபடுத்துகிறோம். தகுதியற்றவர்களிடம் எப் பொருளையும் வாங்கக் கூடாது என்று நான்மணிக்கடிகை கூறுகிறது. துரோணர், தகுதியற்ற துருபதனிடம் எப்பொருளை யும் வாங்காமல் வெளியேறியதையும் நினைவில் கொள்ள வேண்டும்.

அ.பொ.

என்றும்-எக்காலத்திலும். என்பெறினும்-என்னதான் ஒன்றைச் சிறந்ததாகப் பெற்றாலும். இல்பிறந்தாரை-ஏழைக்குடியில் பிறந்தவரை.

பறைபட வாழ அசுணமா, உள்ளம்
குறைபட வாழார் உரவோர், நிறை வனத்து
நெல்பட்ட கண்ணே வெதிர் சாம், தனக்கு ஒவ்வாச்
சொல்பட வாழாதாம் சால்பு. 2

விளக்கவுரை

கேகயம் என்னும் பறவைகள் பறைச் சத்தத்தைக் கேட் டால் வாழாது. அறிவுடைய சான்றோர் தம் பெருமைக்குக் குறைவு வந்து விட்டது என்று தோன்றினால் உயிர் வாழமாட் டார்கள். காட்டில் உள்ள மூங்கில் தாம் பூத்து நெல்லை பிறப்பிக்கும்போது பட்டுப்போகும்; பண்புள்ளவர்கள் தன் பண்புக்குப் பொருந்தாத பழிச்சொல் வந்தால் உயிர் வாழ மாட்டார்கள். இப்பொருளில் இப்பாடல் உள்ளது. மானம் போனால் நல்லவர்கள் உயிர் வாழமாட்டார்கள் என்று இப்பாடல் கூறுகிறது. சேரன் கணைக்கால் இடும்பொறை என்ற மன்னனுக்கும், சோழனுக்கும் போர் நடந்தது. அதில் சேரன் தோல்வியுற்றான். பாண்டியன் அவனைச் சிறையில் அடைத்தான். சிறையில் வாடிய சேரனுக்கு தாகம் ஏற்பட்டது. காவலனை நோக்கித் தண்ணீர் தருக என்றான். ஆனால்

அக்காவலாளி சிறிது நேரம் அலட்சியமாக இருந்தான். பிறகு காலம் கழித்து இடக்கையால் நீர் பாத்திரத்தை நீட்டினான். ஆனால் சேரன் அதை வாங்க வில்லை. தன் மானம் அவனைத் தடுத்து நிறுத்தியது. மன்னனான தன்னை ஒரு காவலன் அவமதிக்கும் நிலை வந்ததே என்று வருந்தினான். நா வறண்டது. ஆனால் காவலாளி கொடுத்த நீரை அவன் வாங்கவில்லை. மயக்கம் வந்தது. அப்போதும் அவன் நீரைப் பருகவில்லை. சிறையிலேயே அவன் உயிர் பிரிந்தது. செய்தி கேட்டுச் சோழன் கோச்செங்கணனான் ஓடோடி வந்தான். உன்னை நான் போரில் வென்றேன். தன் மானத்தில் நீ என்னை வென்று விட்டாய் என்று கண்கலங்கினான். அறிவுடைய சான்றோர் தம் பெருமைக்குக் குறைவு வந்து விட்டது என்று அறிந்தால் உயிர் வாழமாட்டார்கள் என்று நான்மணிக்கடிகை கூறுகிறது. அதற்குச் சான்றாகச் சேரமன்னன் வரலாறு இருப்பதால் நினைவுபடுத்தி இருக்கிறோம். தன்மானம், பழிச்சொற்களைத் தாங்காமல் இவை அனைத்தும் தூயவர்களின் குணம் என்பதைப் புரிந்து கொள்ள வேண்டும. மனிதர்களில் மூன்றுவிதப் பிரிவுகள் குணத்தால் உண்டு. முதல் தர மனிதன் உயிரை விட மானத்தையே பெரிதாக நினைப்பான் என்பதை இப்பாடல் உணர்த்துகிறது.

அ.பொ.

அசுணமா-கேகயம் என்னும் பறவைகள். பறைபட-பறைச் சத்தத்தைக் கேட்டால். உரவோர்-அறிவுடையோர். சாம்-பட்டுப்போகும். சால்பு-நிறைந்த பண்புள்ளவர்.

மண்ணி அறிப மணிநலம்; பண் அமைத்து
ஏறியபின் அறிப மாநலம்; மாசறச்
சுட்டு அறிப பொன்னின் நலம் காண்பார்; கெட்டறிப
கேளிரால் ஆய பயன். 3

விளக்கவுரை

மாணிக்கத்தின் நல்லதன்மையைக் கழுவிக் காண்பார்கள். குதிரையின் நல்ல தன்மையை அதன்மேல் சேணத்தை வைத்து ஏறியபின் அறிவார்கள். பொன்னின் மாற்றை அறிய விரும்புபவர்கள் அதில் உள்ள குற்றம் கெடும்படிச் சுட்டு

உருக்கியபின் காண்பார்கள். வறுமை யடைந்தவர்கள் தான் உறவினரால் ஆகும் பலனை அறிவார்கள். இப்பொருளில் இப்பாடல் உள்ளது.

வறுமை வந்தபோதுதான் உண்மையான உறவினர்கள் யார் என்பதை அறியமுடியும். செல்வம் இருக்கும்போது காக்கைகள்போல் உறவினர்கள் கூட்டம் ஒருவனைச் சூழ்ந்து கொள்ளும். வறுமை வந்தால் மிக நெருங்கிப்போனால்கூட ஏதேனும் சாக்குபோக்குகளைக் கூறி விலகிக் கொள்வார்கள். ஆகவே உறவினர்களை முழுவதுமாக நம்பக்கூடாது. இன்பத் தில் பங்கு கொள்ளும் உறவினர்கள் துன்பத்தில் பங்குகொள்ள மாட்டார்கள். ஆகவே கற்பனைக் கோட்டைகளைக் கட்டிக் கொண்டு நாம் இவ்வுலகில் வாழக்கூடாது. உதவி செய்தவர் களை மறந்து துரோகம் இழைக்கும் தீயவர்கள் உண்டு. ஆகவே உதவி செய்து விட்டு அவர்களிடம் கைம்மாறு கிடைக்கும் என்று நம்பக்கூடாது. எல்லாவற்றையும் சந்திக்கும் துணிவு இருந்தால்தான் இந்த உலகில் வாழ முடியும். குதிரையின் மேல் ஏறிய பிறகு தான் அதன் குணத்தை அறியமுடியும் தன்னைக் கீழே தள்ளி விடுமா? அல்லது ஒழுங்காகக் குறிப்பிட்ட இடத் திற்கு அழைத்துச் செல்லுமா? என்பதை அனுபவத்தில் அறிய முடியும். அதேபோல் தங்கத்தை நெருப்பில்இட்டு உருக்கினால் தான் அதன்தரத்தைச் சரியாகக் கணிக்கமுடியும். மாணிக்கத்தைக் கழுவிய பிறகு தான் அதன் தன்மை தெரியவரும். இந்த உலக வாழ்க்கை என்பது அவரவரின் கர்மவினைகளுக்குத் தகுந்த வாறு அமைகிறது. இந்த உலகம் என்பது பயிற்சிக்களம். நம்மைத் தயார்படுத்திக் கொள்வதற்காகவே நாம் வந்திருக் கிறோம். ஆகவே அனைத்துத் தர மக்களின் குணநலன்களை எதிர்கொண்டு வாழவேண்டும் என்பதற்காகவே நான்மணிக் கடிகை இந்த நீதியை கூறுகிறது. இந்த உலகத்தில் நமக்கு விதிக்கப்பட்ட கடமைகளை நாம் செய்து கொண்டே போக வேண்டும்.

அ.பொ.

மணிநலம்-மாணிக்கத்தின் நல்ல தன்மை. மண்ணி அறிப- கழுவிக் காண்பார்கள். மாசுஅற-அதில் உள்ளம் குற்றம் கெடும்படி. கேளிரால்-சுற்றத்தாரால்.

கள்ளி வயிற்றில் அகில்பிறக்கும், மான்வயிற்றில்
ஒள்அரி தாரம் பிறக்கும்-பெரும்கடலுள்
பல்விலைய முத்தம் பிறக்கும், அறிவார்யார்?
நல்ஆள் பிறக்கும் குடி. *4*

விளக்கவுரை

கள்ளி மரத்தின் நடுவில் அகில் பிறக்கும் மான் வயிற்றிலே ஒளி பொருந்திய அரிதாரம் பிறக்கும். உப்பு சுவையுள்ள பெரிய கடலிலே மிகுந்த விலையை உடைய முத்துக்கள் உண்டாகும். நல்ல மனிதன் பிறக்கும் குடி இதுதான் என்று அறிந்தவர் எவருமில்லை. இப்பொருளில் இப்பாடல் அமைந்துள்ளது.

ஒரு நல்ல மனிதன் எங்குப் பிறப்பான் என்பதை எவரும் அறிய இயலாது என்று நான்மணிக்கடிகை கூறுகிறது.

இரணியன் என்ற அசுரன் கடுமையான தவம் புரிந்து பல அரிய வரங் களைப் பெற்றான். வரம் பெற்ற ஆணவத்தில் தன் பெயரையே எல்லோரும் துதிக்க வேண்டும். இறைவன் பெயரைத் துதிக்கக் கூடாது என்று கட்டளையிட்டான். ஆனால் அவன் மனைவி யின் கர்ப்பத்திலிருந்து பிரகலாதன் பிறந்தான். அவன் நாராயணனிடம் பெரும்பக்தி கொண்டான். மற்றவர்களைத் தன் பெயரை உச்சரிக்கும்படிச் செய்த இரணியனால் தன் பிள்ளையை அவ்வாறு உச்சரிக்கச் செய்ய இயலவில்லை. இதுதான் இறைவன் நீதி. எந்த மனிதன் எங்குப் பிறப்பான் என்று எவராலும் அறிய முடியாது. அது தெய்வ ரகசியம். ஆண்டவனை மதிக்கத்தவறிய இரணியனுக்கு அவன் மகன் மூலமாகவே மரணம் வந்தது. உன் நாராயணன் எங்கே இருக்கிறான்? என்று இரணியன் கேட்க, அவர் தூணிலும் இருப்பார்; துரும்பிலும் இருப்பார் என்று பிரகலாதன் கூறினார். இந்தத் தூணிலே காட்டுப் பார்க்கலாம் என்று தன் கதையால் அருகில் இருந்த தூணைப் பிளந்தான் இரணியன். ஸ்ரீமந் நாராயணனே நரசிங்க மூர்த்தியாகத் தூணிலிருந்து வெளிப்பட்டு இரணியனை அழித்து முடித்தார். தருமத்தை வெற்றி பெறச் செய்ய யார் வயிற்றில் யார் பிறப்பார்கள் என்று எவராலும் கணிக்க முடியாது என்று இப்பாடல் கூறுவது இப்பொருள்தான்.

கள்ளி மரத்திலும் அகில் பிறக்கும். உப்பு நிறைந்த கடலிலும் முத்துப் பிறக்கும். கொடிய அசுரனுக்கு மகனாக நல்ல குணமும், தெய்வ பக்தியும் கொண்ட மகன் பிறப்பான் என்பதைச் சூசகமாக இந்நான்மணிக்கடிகைப் பாடல் உணர்த்துகிறது.

அ.பொ.

கள்ளி வயிற்றில்-கள்ளி மரத்தின் நடுவில். அகில் பிறக்கும்-வாசனைத் திரவியமான அகில் கட்டை உண்டாகும். அரிதாரம்-அரிதாரம் என்னும் பொருள். முத்தம்-முத்து.

கல்லில் பிறக்கும் கதிர்மணி; காதலி
சொல்லில் பிறக்கும் உயர்மதம்; மைல்என்
அருளில் பிறக்கும் அறநெறி; எல்லாம்
பொருளில் பிறந்து விடும். 5

விளக்கவுரை

ஒளியுள்ள இரத்தினங்கள் மலையில் பிறக்கும். அன்புள்ள மனைவியின் சொல்லில் ஆனந்தம் பிறக்கும். மென்மையான அருளில் அறக் கருத்துக்கள் பிறக்கும். அறம், இன்பம் முதலியவை செல்வத்தால் உண்டாகி விடும். இபொருளில் இப் பாடல் அமைந்துள்ளது.

மென்மையான அருளில் ஒழுக்கம் பிறக்கும் என்று இப்பாடல் கூறுகிறது. தீய மனிதன் ஒருவன் மேல் ஒரு மகனுக்கு இரக்கம் ஏற்பட்டால் அவனும் ஒழுக்கமுடைய மகனாக மாறிவிடுவான். அதாவது தெய்வ ஒளி என்பது எத்தகைய கீழோரையும் உயர்ந்தவர்களாக்கி விடும். காட்டில் செல்லும் வழிப்போக்கர்களைக் கொள்ளையடித்து ஒரு திருடன் வாழ்ந்து வந்தான். ஒரு சமயம் நாரதர் அந்த வழியே வந்தபோது அவரை வழிமறித்துத் தடுத்தான் திருடன். நீ யாருக்காகத் திருடுகிறாய்? என்று நாரதர் கேட்டார். என் குடும்பத்தைக் காப்பாற்ற திருடுகிறேன் என்று அவன் சொன்னான். சரி என்னை இங்கேயே கட்டி விட்டுப்போ. உன் வீட்டுக்குச் சென்று நீ செய்யும் பாவத்தில் உன் குடும்பத்தார் பங்கு ஏற்பார்களா? கேள் என்று கூறி திருடனை அவர் அனுப்பி வைத்தார் அதன்படி வீட்டுக்கு வந்த அவன் தன்

தாய், மனைவி ஆகியோரிடம் தான் செய்யும் திருட்டுத் தொழிலைக்கூறி இந்தப் பாவத்தில் நீங்கள் பங்கு ஏற்பீர்களா? என்று கேட்டான். ஆனால் எவரும் அவன் பாவத்தில் பங் கேற்க ஒப்புக்கொள்ளவில்லை. எங்களைக் காப்பாற்ற வேண் டியது என்கடமை. நல்லவழிகள் எத்தனையோ இருக்கின்றன. அதை விட்டு, விட்டு நீயாகத் திருடுவது என்று முடிவுக்கு வந் திருக்கிறாய். அப்படியிருக்க நாங்கள் எப்படி உன் பாவத்தில் பங்கேற்க முடியும் என்று கூறினார்கள். அப்போதுதான் அந்தத் திருடனின் மனம் தெளிந்தது. கடும் தவத்தில் அவன் ஈடுபட்டான். அவனைச் சுற்றிக் கரையான் புற்றுக் கட்டியது. அப்போதும் அவன் தவத்திலேயே மூழ்கியிருந்தான். அப்போது ஒருகுரல்ஒலித்தது. முனிவனே எழுந்திரு என்று அதுகூறியது. நானா முனிவன்? நான் திருடன் ஆயிற்றே என்றான் அவன். புற்றிலிருந்து தோன்றியதால் நீ வால்மீகி என்று மீண்டும் அக்குரல் ஒலித்தது. இதைத்தான் அருள் என்று நான்மணிக் கடிகை கூறுகிறது. நாரதரின் அருள் ஒரு திருடனையும் மகானாகி விட்டது என்பது கருத்து.

அ.பொ.

கதிர்மணி-ஒளியுள்ள இரத்தினங்கள். உயர் மதம்-மிகுந்த களிப்பு. காதலி-அன்புள்ள மனைவி. சொல்லால் உண்டாகும் அறநெறி-அறநெறியில் ஒழுகும் தன்மை.

திருஒக்கும் தீதுஇல் ஒழுக்கம்; பெரிய
அறன்ஒக்கும் ஆற்றின் ஒழுகல்; பிறனைக்
கொலைஒக்கும் கொண்டு கண்மாறல்; புலைஒக்கும்
போற்றாதார் முன்னர்ச் செலவு. 6

விளக்கவுரை

குற்றமற்ற ஒழுக்கம் செல்வம் பெற்றிருப்பதைப் போன்றது. இல்லறத்துக்குரிய வழியிலே நடப்பது பெரிய அறம் செய்தலைப் போன்றது. அதாவது துறவறத்தைப் போன்றது. ஒருவனை முதலில் நட்பாகக் கொண்டு பின்பு அவனைக் கைவிடுதல், கொலை செய்வது போன்றது. தன்னை மதிக்காதவர் முன் நின்று ஒரு பொருளைப் பெற விரும்புவது அற்பத்தனமாகும். அத்தகையவன் அற்பமானவன்

என்பது பொருள் இப்பொருளில் இப்பாடல் அமைந்துள்ளது.

மிகப் பெரிய செல்வம் படைத்திருப்பவனைக் காட்டிலும் குற்றமில்லாத ஒழுக்கம் உடையவன்தான் பெரும் செல்வந்தன் என்று இப்பாடல் கூறுகிறது. ஏனெனில் ஒழுக்கம் உடையவன் செய்யும் செயல்களெல்லாம் நல்ல செயல்களாகவே இருக்கும். அந்த நல்ல கர்மவினைகள் காரணமாக அவன் விதியே மாறிவிடும்.

புகழ், செல்வம், பட்டம், பதவி அனைத்தும் தாமாக அவனைத் தேடி வரும். ஆனால் ஒழுக்கமில்லாத செல்வந்தன் எந்த நேரத்திலும் பாதாளத்தில் விழுவான். அவனுடைய புண்ணியம் தீர்ந்ததும் செல்வமும் விலகி விடும். ஆகவே ஒழுக்கத்துடன் வாழ்வதுதான் நிலையான செல்வம் போன்றது என்பது கருத்து. இல்லறத்தை நல்லறமாகச் செய்தால் அதுவே துறவறத்திற்கு நிகரானது என்று இப்பாடல் கூறுகிறது.

ஒரு பெண் என்பவள் கணவனைத் தெய்வமாகப் போற்றிக் கற்பு நெறி காக்க வேண்டும். மாமன்-மாமி. மற்றும் கணவன் வீட்டு உறுப்பினர்களை அன்போடு நடத்தவேண்டும். வருவாய்க்குத் தகுந்தபடி குடும்பத்தை நடத்த வேண்டும. எளியவர்களுக்கு முடிந்த அளவு அன்னம் இடவேண்டும். அதேபோல் ஆண் என்பவன் மனைவி, தாய், தந்தை, சகோதரன், சகோதரி ஆகியோரைச் சமமாக பாவித்து வாழ்க்கை நடத்த வேண்டும். தெய்வத்திற்குப் பயந்து நேரிய வழியில் பொருள் ஈட்டவேண்டும். எவருக்கும் தீமை செய்யக்கூடாது. சரண் அடைந்தவர்களைக் காக்க வேண்டும். இவ்வாறு இல்லற தருமத்தை ஆண், பெண் ஆகியோர் கடைப்பிடித்தால் அது துறவறத்தைப் போல் எல்லாச் சக்திகளையும் அளிக்கும் என்பது பொருளாகும். நட்பு கொண்ட பிறகு ஒருவன் கைவிடக்கூடாது; தன்னை மதிக்காத வர்களிடம் பொருள் பெறக்கூடாது. இதுவே இல்லறத்தைச் சார்ந்தது ஆகும்.

அ.பொ.

தீதுஇல்-குற்றமற்ற ஒழுக்கம். ஆற்றின் ஒழுகல்-இல்லத்திற்குரிய வழியில். சிறந்த அறன் ஒக்கும்-துறவறத்தைப் போன்றது.

கள்வம் என்பார்க்கும்துயில் இல்லை; காதலிமாட்டு
உள்ளம் வைப்பார்க்கும் துயில் இல்லை; ஒண்பொருள்
செய்வம் என்பார்க்கும் துயில்இல்லை; அப்பொருள்
காப்பார்க்கும் இல்லை துயில். 7

விளக்கவுரை

திருடுவதற்கு காலத்தை எதிர்பார்த்துக் காத்திருப்பவர்களுக்குத் தூக்கம் வருவதில்லை. மனைவியின் நினைவிலேயே இருப்பவர்களுக்குத் தூக்கம் வராது. செல்வத்தைச் சேர்த்து வைக்க விரும்புகிறவர்களுக்கும் தூக்கம் வருவதில்லை. சேர்த்த செல்வத்தைக் காக்க வேண்டும் என்று சதா நினைப்பவர்களுக்கும், தூக்கம் வராது. இப்பொருளில் இப்பாடல் அமைந்துள்ளது.

தூக்கம் என்பது உடலுக்கு ஓய்வு தரக் கூடியது. மனத்திற்கும் தூக்கம் ஓய்வைத் தருகிறது. இந்த ஓய்வு எல்லோருக்கும் அவசியமாகிறது. ஓய்வு இல்லை யென்றால் எந்தக் காரியத்தையும் திறம்படச் செய்ய இயலாது. அத்தகைய ஓய்வைக் கெடுக்கக் கூடிய விஷயங்களை இப்பாடல் நமக்கு உணர்த்துகிறது. திருடன்கூட அதைச் செய்வதற்குக் காலத்தை எதிர்பார்த்துத் தூங்காமல் இருக்கிறான். காவலர்களிடம் மாட்டிக் கொள்வோமா? வேறு ஏதேனும் இடையூறு ஏற்படுமோ என்று அவன் அஞ்சுகிறான். ஆகவே அவனுக்குத் தூக்கம் வருவதில்லை. நேர்வழியில் பொருளை ஈட்டுபவனுக்கு இந்தப் பயம் இல்லை. ஆகவே திருட்டுத் தொழிலைவிட வேண்டும் என்பது உட்கருத்தாகும்.

மனைவியின் நினைவி லேயே இருப்பவன் காமுகன் என்று அழைக்கப்படுவான். எதிலும் ஒரு அளவு வேண்டும்; அளவு அதிகமானால் துன்பம்தான். மனைவியின் நினைவிலேயே இருந்தால் மற்ற வேலைகளைச் செய்ய இயலாது. அதனால் பொருள் ஈட்டவும் முடியாது. அவன் வறுமையில் சிக்கி மற்றவர்கள் கேவலமாகப் பேசும் நிலைக்கு ஆளாவான்; தூக்கத்தையும் இழந்து துன்புறுவான். ஆகவே எதிலும் வரம்புவேண்டும் என்பது கருத்து. இந்த உலகில் செல்வத்தைச்

சேர்த்து விட்டால் துன்பத்திலிருந்து விடுபட்டு விடலாம் என்று பலர் நினைக்கிறார்கள். அதுமுற்றிலும்தவறு. திடீரென மரணம் குறுக்கிட்டுவிட்டால் அந்தச் செல்வத்தை மற்றவர்கள் தான் அனுபவிப்பார்கள். அறச் செயல்களைச் செய்வதுதான் செல்வம் சேர்ப்பது போன்றது என்பதை அறியவேண்டும். பலர் சேர்த்த செல்வத்தைக் காப்பாற்றுவதிலேயே காலம் கழித்துத் தூக்கத்தை இழக்கின்றனர். செல்வத்தை காப்பாற்று வதால் மரணத்தைத் தடுக்கமுடியாது. நோய் முதலிய துன்பங் களிலிருந்து தப்பமுடியாது. ஆகவே செல்வத்தை அறச் செயல் களுக்குப் பயன்படுத்தி வாழ்நாளைக் கழிக்க வேண்டும் என்பது பொருள்.

அ.பொ.

கள்வம் என்பார்க்கும்-திருடுவோம் என்று காலம் பார்த்து இருப்பவர்க்கும். துயில் இல்லை-தூக்கம் இல்லை. ஒண்பொருள்-சிறந்த செல்வம்.

கற்றார்முன் தோன்றா கழிவு இரக்கம்; காதலித்து ஒன்று
உற்றார்முன் தோன்றா உருமுதல்; தெற்றென
அல்ல புரிந்தார்க்கு அறம் தோன்றா; எல்லாம்
வெகுண்டார் முன்தோன்றாக் கெடும். 8

விளக்கவுரை

கல்வி கற்றவர்களுக்கு இழந்த பொருளுக்காக வருந்தும் தன்மை உண்டாகாது. ஒரு காரியத்தைத் தொடங்கி ஊக்கமுடன் செய்வோரிடம் காரியம் கை கூடாவிட்டாலும் அந்தக் காரியம் முடிய முயற்சி தொடருமேயன்றி தளர்ச்சி உண்டாகாது. கோபப்படுகிறவர்களிடம் எல்லா நன்மை களும் தோன்றாமல் மறைந்து விடும். இப்பொருளில் இப் பாடல் அமைந்துள்ளது.

கல்வி கற்றவர்கள் இழந்த பொருள் களைப் பற்றி வருந்தமாட்டார்கள். ஏனெனில் கல்வி அறிவு என்பது இழந்த பொருள்களைக் காட்டிலும் மேலான பொருள்களைப் பெறுவதற்கு வழிகள் கூறும் வலிமையைத் தருவது. ஆகவே,

கல்வி கற்றவர்கள் பொருள் இழப்பிற்காக வருந்தாமல் முயற்சியால் அதனை மீண்டும் பெறுவார்கள் முயற்சி என்ற அஸ்திரத்தை உறுதியாகப் பெற்றிருப்பவர்கள் தங்கள் காரியத்தில் தோல்வி ஏற்பட்டாலும் கலங்கமாட்டார்கள். தொடர்ந்து முயன்று வெற்றி வாகை சூடுவார்கள். முயற்சி என்பதற்கு எதிர்த்தல் என்பது பொருள். எங்கே எதிர்ப்பு இருக்கிறதோ அங்கேதான் உயிரோட்டமும் இருக்கிறது. ஒரு சிற்றெரும்பைக் கொல்ல முயன்றால் அதுகூட உயிரைக் காக்க எதிர்த்து நிற்கிறது. எதிர்ப்பும், தடைகளும் இல்லாத வாழ்க்கை வாழ்க்கையே இல்லை. எதிர்ப்புகள் எதுவும் இல்லாத பாதை என்பது அழிவுக்கு அழைத்துச் செல்லும் பாதையாகவே இருக்க வேண்டும். தடைகள் வரவேண்டும். அதை எதிர்த்து முன்னேறிச் செல்லவேண்டும். அதுவே உயிரோட்டம் இருப்பதற்குச் சான்று. ஆக,வே முயற்சியைப் பெற்றிருப்பவர்கள் தோல்விகளையும், தடைகளையும் உடைத்துக் கொண்டு செல்வார்கள் என்பது கருத்து. ஆனால் கோபம் உடையவர்கள் தளர்ந்து போவார்கள். முயற்சி எனும் நற்பண்பு அவர்களிடம் இருக்காது. நன்மைகளைப் பற்றி அவர்களால் சிந்திக்கமுடியாது. ஆகவே அவர்கள் அழிவை நோக்கியே செல்வார்கள். துரியோதனனிடம் கோபமும், பொறாமையும் இருந்ததால் எல்லாவற்றையும் இழந்து யுத்த களத்தில் மாண்டான். ஆகவே, கோபம் என்பது எல்லாச் செல்வங்களையும் அழித்து விடும் என்று நான்மணிக்கடிகை கூறுகிறது.

அ.பொ.

கற்றார்முன்-கல்வி கற்றவர்கள் முன். கழிவு இரக்கம்-இழந்த பொருளுக்காக வருந்தும் தன்மை. தோன்றாக் கெடும்-தோன்றாமல் மறைந்து விடும்.

நிலத்துக்கு அணிஎன்ப நெல்லும் கரும்பும்;
குளத்துக்கு அணிஎன்ப தாமரை; பெண்மை
நலத்துக்கு அணிஎன்ப நாணம்; தனக்கு அணியாம்
தான்செல் உலகத்து அறம். 9

விளக்கவுரை

நெல்லும், கரும்பும் வயலுக்கு அழகு. தாமரை பூத்திருப்பது குளத்திற்கு அழகு. கற்பு கலந்த நாணம் பெண்ணுக்கு அழகு. தான் இறந்த பிறகும் உலகம் நன்மை பெறுவதற்கான செயல் செய்வது ஒருவன் தனக்குத் தானே செய்து கொள்ளும் அழகாகும். இப்பொருளில் இப்பாடல் உள்ளது.

அழகு என்பதற்கு இலக்கணம் கூறும் விதத்தில் இப்பாடல் உள்ளது. நெல்லும் கரும்பும் வயலுக்கு அழகு. விளையாமல் இருக்கும் தரிசு நிலம் அழகற்றது. விளையும் வயலே அழகு. ஏனெனில் விளைச்சலால்தான் உயிர்கள் வாழ்கின்றன. உயிர்கள் வாழ வயல் உதவுவதால் அது அழகு பெறுகிறது. கற்பு கலந்த நாணம் பெண்ணுக்கு அழகு. ஏனெனில் கற்புதான் எல்லாச் சக்திகளையும்விட மாபெரும் சக்தி. தன் கற்புச் சக்தியால் அநீதியைக் கண்ணகி தீக்கிரையாக்கினாள். ஆகவே, கற்பு தான் பெண்ணுக்கு அழகு. நிறமோ, முகவெட்டோ, ஆபரணங்களோ பெண்களுக்கு அழகு இல்லை என்பது கருத்தாகும். அதேபோல் குளத்தில் தாமரை பூத்திருப்பது அழகு. பெண்களுக்கு நெற்றியில் குங்குமத் திலகம் ஜொலிப்பது போல குளத்தில் தாமரை பூத்திருப்பது மனத்திற்கும், கண்களுக்கும் மகிழ்ச்சியைத் தருவதாகும். மனம் மகிழ்ந்தால் நல்ல சிந்தனைகளும், செயல்களும் உருவாகும் என்பது உட்கருத்து. ஒருவன் தனக்குத்தானே அழகு செய்து கொள்வது அழகு சாதனங்களோ, ஆடை அணிகளோ அல்ல. அவன் உடல் மறைந்த பிறகும் புகழக் கூடிய நல்ல செயல்களைச் செய்வது தான். பிறருக்கு நன்மை பயக்கக்கூடிய செயல்களைச் செய்வதுதான். நம் தேசத்திற்கு மகாத்மா காந்தி சுதந்திரம் வாங்கித் தந்தார். அதனால் எழுத்துரிமை, பேச்சுரிமை மற்றும் பல உரிமைகளைப் பெற்று நாம் சுதந்திரமாக வாழ்கிறோம். மகாத்மா காந்தி மறைந்தாலும் அவரை உலகமே போற்றுகிறது. இதுதான் இறந்தபிறகும் உலகம் நன்மை பெறும் வகையில் செய்த செயலுக்கு உதாரணமாகும்.

அ.பொ.

அணிஎன்ப-அழகு என்பார்கள். பெண்மை நலத்துக்கு-பெண் தன்மையான கற்பு என்னும் தன்மைக்கு

கந்தில் பிணிப்பர் களிற்றை; கதம்தவிர
மந்திரத் தால்பிணிப்பர் மாநாகம்; கொந்தி
இரும்பில் பிணிப்பர் கயத்தைச்; சான்றோரை
நயத்தின் பிணித்து விடல். *10*

விளக்கவுரை

யானையைச் சங்கிலியால் கட்டுவார்கள் பெரிய நல்ல பாம்பை மந்திரத்தால் பிணிப்பர். தீயவர்களை இரும்பால் ஆன விலங்குகளால் பிணிப்பர். அறிவு நிறைந்த சான்றோரை இன்சொல் முதலிய தன்மைகளால்தான் வசப்படுத்த முடியும். இப்பொருளில் இப்பாடல் அமைந்துள்ளது.

யானையை அடக்கச் சங்கிலியால் கட்டுவார்கள். நல்ல பாம்பை அதற்கான மந்திரத்தைக் கொண்டு அடக்குவார்கள். தீயவர்களை இரும்புச் சங்கிலியால் பிணித்து அடக்குவார்கள். ஆனால், சான்றோர்களை வசப்படுத்த இனிமையான சொற் களாலும், நல்ல செயல்களாலும்தான் முடியும் என்று நான்மணிக்கடிகைக் கூறுகிறது.

பகீரதனின் முன்னோர்கள் அசுவமேதயாகம் நடத்த முயன்றபோது யாகக் குதிரையை இந்திரன் பாதாள லோகத் தில் ஒளித்தான். யாகக் குதிரை இல்லாமல் யாகம் செய்ய முடியாது என்பதால், அவர்கள் தேடினார்கள். அஸ்வமேத யாகம் செய்கிறவர்கள் இந்திர பதவியை அடைவார்கள் என்பதால் இந்திரன் சூழ்ச்சி செய்து குதிரையை ஒளித்தான் என்பதை அவர்கள் அறியவில்லை. பூமி யெங்கும் தேடியும் அக்குதிரை கிடைக்காததால் பாதாள லோகம் சென்றனர். அங்கே ஒரு முனிவர் தவத்தில் மூழ்கியிருந்தார். அவருக்கு பக்கத்தில் யாக குதிரை கட்டப்பட்டிருந்தது. பகீரதனின் முன்னோர்கள் அந்த முனிவர்தான் குதிரையைக் களவாடியவர் என்று தவறாகக் கருதி அவருக்குத் துன்பம் செய்தனர். அம்

முனிவர் தன் விழித் தீயால் அவர்களைச் சாம்பலாக்கி விட்டார். காவலர்கள் அரசனிடம் சென்று இதனை முறையிட் டார்கள். அந்த அரசன் தன் மற்றொரு மகனான அம்சுமான் என்பவனை அழைத்து யாகக் குதிரையைக் கொண்டுவரும் படி கட்டளை யிட்டான். பாதாளம் வந்த அம்சுமான் தன் சகோதரர்கள் 60 ஆயிரம் பேரும் சாம்பலாகியிருப்பதைக் கண்டு அஞ்சினான். முனிவரிடம் அவள் பணிவாகப் பேசினான். என் சகோதரர்கள் அறியாமையால் செய்த பிழையைப் பொறுத்தருளவேண்டும். யாகக் குதிரையை நான் அழைத்துச் செல்ல அனுமதிக்க வேண்டும் என்று வேண்டினான். அவன் மீது இரக்கம் கொண்ட முனிவர் யாகக் குதிரையை அவனிடம் ஒப்படைத்தார். இனிய சொற்களால் முனிவரை வசப்படுத் தினான் அம்சுமான். சான்றோர்கள் இனிய சொற்களுக்கு வசப்படுவர் என்று இப்பாடல் கூறுவது இந்த அடிப்படை யில்தான்.

அ.பொ.

களிற்றை-யானையை. கந்தில்-கட்டுத்தறியில். மாநாகம்-பெரிய நல்பாம்பு. பிணித்து விடல்-வசப்படுத்த வேண்டும்.

கன்றாமை வேண்டும் கடிய; பிறர்செய்த
நன்றியை நன்றாக் கொளல்வேண்டும்-என்றும்
விடல்வேண்டும் தம்கண் வெகுளி; அடல்வேண்டும்
ஆக்கம் சிதைக்கும் வினை. *11*

விளக்கவுரை

பிறர் செய்த தீமையை நினைத்துக் கோபம் கொள்ளாது இருக்க வேண்டும். பிறர் செய்த நன்றியை மறவாமல் மனதில் பதிய வைக்க வேண்டும். தம்மிடம் தோன்றும் கோபத்தை எப்போதும் கைவிடவேண்டும். செல்வத்தை அழிக்கும் செயலைச் செய்யாமல் அழித்துவிடவேண்டும். இப்பொருளில் இப்பாடல் அமைந்துள்ளது. பிறர்செய்த தீமையை நினைத்துக் கோபம் கொள்ளக்கூடாது. ஏனெனில் கோபம்தான் மனிதனின்

சத்வ குணத்தை அழிக்கிறது. சத்வ குணம்தான் தெய்வத்தை அருகில் நெருங்கும் அரிய வாய்ப்பைத் தருகிறது. செல்வம் நிலைக்காது. பதவி, புகழ் எதுவும் நிலையானவை அல்ல. சொந்த பந்தங்கள் நீர்க்குமிழி போல மறையக் கூடியது. ஏன் மனித வாழ்வுகூட கணநேரத்தில் மறைந்து விடும். நமக்கு என்றும் நிரந்தரமான உறவு இறைவனே. அந்த இறைவனைத் தரிசித்த பிறகு வேறு கடமைகள் இல்லை; அழியாத பேரின்பம் கிட்டுகிறது. அதுவே நம்இலட்சியம். அதற்காகவே இப்பூமிக்கு வந்திருக்கிறோம். ஆகவே, இங்கு வாழும் போது எத்தகைய ஆத்திரமூட்டும் செயல்களைத் தீயவர்கள் செய்தாலும் நாம் கோபம் கொள்ளக்கூடாது. கோபம்தான் நமக்கு முக்கிய எதிரி. இதை நினைவில்கொள்ளவேண்டும். கோபத்தின் காரணமாகப் பலமுனிவர்கள்கூட தங்கள் வலிமையை இழந்திருக்கிறார்கள். அதேபோல், ஒருவர் செய்த உதவியை மறக்காத உயர் குணம் வேண்டும். ஒருவர் செய்த நன்றியை மறந்தவர்க்குப் பிராயச் சித்தம் இல்லை. நம் உயர்வுக்குக் காரணமான பெரியோர் களை மதித்துப் போற்ற வேண்டும். பெற்றோரை வயதான காலத்தில் பாதுகாக்கவேண்டும். நம்மிடம் இருக்கும் செல்வம் அழியும்படிச் செயல்கள் இருக்கக் கூடாது. பகைவர்களின் ஆணவத்தை அறுக்கும் கூர்வாள் என்பது நாம் பெற்றிருக்கும் செல்வமே. செல்வம் இல்லாதவன் எவ்வளவு அறிவாற்றல் பெற்றிருந்தாலும் இந்த உலகம் மதிக்காது. ஆகவே, போது மான செல்வம் நம்மிடம் இருக்க வேண்டும். அச்செல்வம் அழியும்படியாக நம் செயல்கள் இருக்கக் கூடாது என்று இப்பாடல் கூறுவது இந்த அடிப்படையில்தான்.

அ.பொ.

கன்றாமை வேண்டும்-நினைத்துக் கோபப்படாமல் இருக்க வேண்டும். தமகண் வெகுளி-தம்மிடம் தோன்றும் கோபம். ஆக்கம் சிதைக்கும்-செல்வத்தை அழிக்கும்.

பல்லினால் நோய்செய்யும் பாம்பெல்லாம்; கொல்லேறு
கோட்டால்நோய் செய்யும் குறித்தாரை; ஊடி
முகத்தால்நோய் செய்வர் மகளிர்; முனிவர்
தவத்தால் தருகுவர் நோய். 12

விளக்கவுரை

எல்லாப் பாம்புகளும் பல்லினால் கடித்துத் துன்பத்தை உண்டாக்கும். கொல்லப் பழகிய காளை தன் கொம்பினால் துன்பம் செய்யும். பெண்கள் ஊடல் செய்து பிணங்கி முகத்திலே காட்டித் துன்பம் செய்வர். முனிவர்கள் தங்கள் தவ வலிமையால் துன்பத்தைத் தருவார்கள். இப்பொருளில் இப் பாடல் அமைந்துள்ளது.

பாம்புகள் பல்லை ஆயுதமாகக் கொண்டு துன்புறுத்தும். காளை கொம்புகளைப் பயன்படுத்தி எதிரிகளை அழிக்கும். பெண்கள் ஊடலால் துன்பம் செய்வார்கள். முனிவர்கள் தவ வலிமையால் துன்பம் தருவார்கள். தவ வலிமை என்பது சுட்டெரிக்கும் நெருப்புப் போன்றது. பாம்பு, காளை, பெண்கள் ஆகியவற்றிடம் இருந்து தப்பித்துவிடலாம். ஆனால், முனிவர்கள் சினத்திலிருந்து எவரும் தப்ப முடியாது. தவத்தின் ஆற்றல் அத்தகையது. மாமன்னர்கள் கூட தவசி களைக் கண்டு அஞ்சுவார்கள். மன்னனின் படைகள் தவசிகளை எதுவும் செய்ய முடியாது. தவத்தின் பெருமையை உணராத காரணத் தால்தான் மனிதர்கள் பல்வேறு துன்பங்களில் சிக்கி தவித்துக் கொண்டிருக்கிறார்கள். இந்த உலகில் வெற்றி பெறுகிறவர்கள் குறைவாகவும், தோல்வியைப் பெறுகிறவர்கள் மிக அதிகமாக இருப்பதற்குக் காரணம் என்ன? தவம் செய்கிற வர்கள் மிகக் குறைவு. தவம் செய்யாதவர்கள் மிக அதிகம். ஆகவே, வெற்றிக்கு மூலகாரணம் தவமே என்பதை அறிய வேண்டும். தவத்தினால் முடியாத காரியம் எதுவும் இல்லை. ஆனால் அந்தத் தவத்தைக் கூட நமக்குள்ளே ஒளிரும் ஆத்ம தரிசனத் தைப் பெறுவதற்கு மட்டுமே பயன்படுத்த வேண்டும். அதுவே விவேகம். தவத்தின் மூலம் நிலையற்ற அற்பப் பொருள் களை எளிதில் பெறமுடியும். ஆனால் அவை பிறப்புக்கு வழிவகுக்கும். பிறவா நிலைதான் மிக உயர்ந்த நிலை; தவத்தினால் இப்பேறு பெறலாம். தவம் செய்கிறவர்களை எவராலும் வெல்ல முடியாது. ஆகவே, தவத்தை உறுதிப் பொருளாகப் பற்ற வேண்டும். இச்சிந்தனைகளைத் தூண்டும் விதத்தில் இப்பாடல் உள்ளது.

அ.பொ.

கொல்ஏறு-கொல்லப் பழகிய காளை. குறித்தாரை-தான் குறி வைத்தவரை. தவத்தால்-தவ வலிமையால்.

பறை நன்று பண்அமையாயாழின்; நிறைநின்ற
பெண்நன்று பீடுஇலா மாந்தரின்; பண்அழிந்து
ஆர்தலின் நன்று பசித்தல்; பசைந்தாரின்
தீர்தலின் தீப்புகுதல் நன்று. 13

விளக்கவுரை

சுதி அமையாத யாழின் ஓசையைவிடப் பறை ஓசை நல்லது. பெருந்தன்மை இல்லாத ஆண்களைவிடக் கற்புள்ள பெண்கள் சிறந்தவர்கள். பதம்கெட்ட உணவை உண்பதைவிடப் பசியால் வருந்துவது நல்லது. தம்மை விரும்பியவரைப் பிரிவதைவிடத் தீயில் விழுந்து உயிரை விடுவது நல்லது. இப்பொருளில் இப்பாடல் அமைந்துள்ளது.

சுதி இல்லாத யாழ் ஓசையில் இனிமை இருக்காது. ஆகவே, அந்த யாழ் ஓசையை விட பறை ஓசை மேலானது என்று சொல்லப் பட்டது. பெருந்தன்மை இல்லாத பெரிய மனிதர்களைவிட சாதாரண நிலையில் இருக்கும் கற்புள்ள பெண்கள் சிறந்த வர்கள் என்று கூறப்பட்டது. பதம் கெட்ட உணவை உண்பதைவிடப் பசியால் வருந்துவது நல்லது என்று இப்பாடல் கூறுகிறது. பதம்கெட்ட உணவை உண்பதால் நோய் உண்டாகும். பல துன்பங்கள் வரும். ஆகவே, அத்தகைய உணவை விலக்க வேண்டும். பட்டினி கிடந்தால்கூடப் பரவா யில்லை என்பது கருத்து. தம்மை விரும்பும் நண்பரைப் பிரிவதைவிட உயிரை விடுவது நல்லது என்று நான்மணிக் கடிகை கூறுகிறது. நட்பு என்பது உறவினர்களைக் காட்டிலும் மேலானது என்பது இங்கே உணரப்படுகிறது. கர்ணன், பாண்டவர்களின் சகோதரனாக இருந்தும் நன்றி மறவா நிலையில் துரியோதனனுக்காக உயிரைக் கொடுத்தான். அவனுடைய தாய் குந்தி தேவி எவ்வளவோ வற்புறுத்திக் கூறியும்கூட அவன் பாண்டவர்கள் பக்கம் வரவில்லை. அவன் நட்புக்கே முதலிடம் கொடுத்தான். அதனால்தான் கர்ணனை எல்லோரும் புகழ்கிறார்கள். ஆகவே, கூடிய பிறகு

குற்றம் கண்டு விலகும். இழிவான செயலைச் செய்வதைவிட வேண்டும். நட்புக் கொள்வதற்கு முன்பு நன்கு ஆராய்ந்து நட்பு கொள்ளவேண்டும். அப்படி ஆராய்ந்து நட்புக் கொண்ட பிறகு அந்த நண்பர் தவறு செய்தாலும் பிரியக்கூடாது. மனைவி, தாய், தந்தை, பிள்ளைகள் ஆகியோர் தவறு செய் தாலும் நாம் அவர்களைக் கைவிடுவதில்லை. அதேபோல் நண்பர்களையும் கைவிடக்கூடாது என்பது கருத்து.

அ.பொ.

பண் அமையா-சுதிஅமையாத. பறை நன்று-பறை ஓசை நல்லது. நிறைநின்ற-கற்பு நெறியில் நின்ற.

வளப்பாதி உள்வளரும் வண்மை; கிளைக்குழாம்
இன்சொல் குழியுள் இனிது எழூஉம்; வன்சொல்
கரவு எழூஉம் கண்இல் குழியில்; இரவு எழூஉம்
இன்மைக் குழியுள் விரைந்து. 14

விளக்கவுரை

பொருள் வழங்கும் வலிமை செல்வம் என்னும் பாத்தி யிலே வளரும். உறவினர் கூட்டம் இன்சொல்லாகிய பாத்தி யிலே வளரும். இரக்கம் இல்லாமை என்ற பாத்தியிலே கடுஞ் சொல்லும், வஞ்சனையும் எழும். வறுமை என்னும் பாத்தியிலே இரத்தல் என்னும் பயிர் வளரும். இப்பொருளில் இப்பாடல் உள்ளது.

பொருள் வழங்கும் வலிமை என்பது செல்வம் என்ற பாத்தியிலே வளரும் என்று இப்பாடல் கூறுகிறது. செல்வம் பெருகிக் கொண்டே இருந்தால்தான் ஒருவர் பிறருக்குப் பொருளை வழங்க முடியும். அவ்வாறு வழங்குவதால் அவருடைய நல்வினைகள் பெருகும். நல்வினைகள் பெருகப் பெருகத் துன்பங்கள் மறையும். ஆகவே, பிறருக்குக் கொடுக்கும் கொடைத் தன்மை என்பது செல்வத்தைப் பெருகச் செய்யும் முயற்சியிலே அடங்கியிருக்கிறது என்பது பொருளாகும். உறவினர்கள் கூட்டம் இன்சொல்லாகிய பாத்தியிலே வளரும் என்று கூறப்பட்டது. உறவினர்களிடம் இனிமையாக பேச வேண்டும். அவர்களை அரவணைத்துச் செல்லவேண்டும்.

உறவினர்களின் துன்பங்களை நீக்கமுயலவேண்டும். அப்போது தான் உறவினர்களின் உறவு பலப்படும். உறவினர்கள் இல்லாத ஒருவனை எதிரிகள் சுலபமாக வீழ்த்தி விடுவார்கள். உறவினர் களின் பலம் என்பது ஒரு மனிதனைக் கவசம் போல் காக்கும் வலிமையுடையது. உறவினர்களால் நமக்குச் செல்வம் வர வேண்டியதில்லை. ஆனால் உறவு முறை நல்ல விதத்தில் இருக் கும்படி பார்த்துக் கொள்ள வேண்டும் என்பது கருத்து. இரக்கம் இல்லாத உள்ளத்திலே கடுமையான சொற்களும் வஞ்சனையும் எழும் என்று கூறப்பட்டது. இரக்கம் இல்லாத மனிதன் விலங்குகளைப் போன்றவன். மனிதப் பிறவியை அருகதையற்றவன் என்றே கூறவேண்டும். இரக்கமில்லாதவன் எத்தகைய கொடிய செயல்களையும் செய்வான்; வஞ்சனை செய்வான். அதனால், சமுதாயத்திற்குக் கேடுதான் வரும். அதோடு பாவமூட்டைகளை அவன் கூடுதலாக்கிக் கொண்டே போவதால் துன்பத்திலிருந்து மீளமுடியாத சூழலுக்கு அவன் தள்ளப்படுகிறான். ஆகவே, இரக்கமில்லாத வாழ்க்கையை மாற்ற வேண்டும் என்பது உட்பொருளாகும்.

அ.பொ.

வளம் பாத்தியுள்-செல்வம் என்னும் பாத்தியில். கிளைக்குழாம்-உறவினர் கூட்டம். இன்சொல் குழியுள்-இனிய சொல்லாகிய பாத்தியில். கரவு-வஞ்சனை.

இன்னாமை வேண்டின் இரவெழுக; இந்நிலத்து
மன்னுதல் வேண்டின் இசைநடுக; தன்னொடு
செல்வது வேண்டின் அறம்செய்க; வெல்வது
வேண்டின் வெகுளி விடல். *15*

விளக்கவுரை

ஒருவன் துன்பத்தை விரும்பினால் அதை ஏற்பதற்குப் புறப்படுக. இம்மண்ணுலகில் நிலைத்து நிற்க விரும்பினால் புகழை நிலைநாட்டுக. தனக்குத் துணையாக ஒன்றை விரும் பினால் அறச் செயல்களைச் செய்க. பிறரை ஜெயிக்க விரும் பினால் கோபத்தை விடுக. இப்பொருளில் இப்பாடல் உள்ளது.

ஒருவன் துன்பத்தை விரும்பினால் அதை ஏற்க புறப்படுக என்று இப்பாடல் கூறுகிறது.

தீயசெயல்களைச் செய்தால் துன்பம்தான் வரும். அந்தத் துன்பங்களை ஏற்கத் தயாராய் இருப்பவன் தீயசெயல்களைச் செய்வான். விதை எப்படியோ பயிரும் அப்படியே. அதனால், வினை விதைத்தவன் வினையை அறுப்பான் என்று சொல்லியிருக்கிறார்கள். நல்ல செயல் செய்வதும், தீய செயல் செய்வதும் நமது கரங்களிலேதான் இருக்கிறது. எவரும் துன்பத்தை விரும்புவதில்லை. ஆகவே, துன்பத்தைத் தவிர்க்க தீய செயல்களை விடவேண்டும் என்பதாகும்.

இம்மண்ணுலகில் நிலைத்து நிற்க விரும்பினால் புகழை நாடுக என்று கூறப்பட்டது. மனித உடல் ஒரு நாள் அழிந்து போகும். ஆனால், சமுதாயத்திற்காக நல்ல செயல்களைச் செய்து, புகழ் பெற்றவர்கள் இம்மண்ணுலகில் நிலைத்து நிற்பார்கள். அவர்களுடைய பூத உடல் மறைந்தாலும், புகழ் உடல் என்றைக்கும் அழியாது என்பது கருத்து. தனக்குத் துணை வேண்டும் என்றால் அறச் செயல்களைச் செய்க என்று கூறப்பட்டது. ஒரு மனிதனுக்குத் துணை செல்வம் இல்லை. உற்றார், உறவினர் இல்லை. நண்பர்கள் இல்லை. பெற்ற பிள்ளைகளும் இல்லை. மரணம் வந்தால் மேலே கூறப்பட்டவை நம்முடன் வாரா. ஆனால், நாம் செய்த அறச் செயல்கள் மரணத்திற்குப் பிறகும் நம்முடன் துணையாக வரும். அடுத்து வரும் பிறவி தூய பிறவியாக அமையும்; பக்தி நிறைந்த பிறவியாக அமையும்; அன்பு நிறைந்த பிறவியாக அமையும்; ஞானம் நிறைந்த பிறவியாக அமையும். ஆகவே, நமக்கு உண்மையான துணை என்பது அறச் செயல்களே என்று நான்மணிக்கடிகை கூறுகிறது.

அ.பொ.

இன்னாமை வேண்டின்-ஒருவன் துன்பத்தை விரும்பினால். இரவு எமுக-ஏற்பதற்கு புறப்படுக. இசைநடுக-புகழை நிலை நாட்டுக. தன்னொடு-தான் இருக்கும்போது; வெகுளிவிடல்-கோபத்தை விடுக.

கடல்குட்டம் போழ்வர் கலவர்; படைக்குட்டம்
பாய்மா உடையான் உடைக்கிற்கும்; தோம்இல்
தவக்குட்டம் தன்உடையான் நீந்தும்; அவைக்குட்டம்
கற்றான் கடந்து விடும். *16*

விளக்கவுரை

கப்பல் ஓட்டிகள் கடலின் ஆழத்தைப் பிளந்து செல்வார்கள். பாய்ந்து செல்லும் குதிரையைப் பெற்றவன் பகைவரின் படைக் கூட்டத்தைச் சிதறடிப்பான். தவம் என்னும் ஆழத்தை உடையவன் தன் மனத்தை அடக்கி ஆளும் திறம் பெறுவான். கற்றவர்கள் நிரம்பிய சபை என்னும் கடலைக் கற்றறிந்தவன் தாண்டி விடுவான். இப்பொருளின் இந் நான்மணிக்கடிகை பாடல் உள்ளது.

கப்பலைச் செலுத்தும் மாலுமிகள் கடலின் ஆழத்தைக் கடந்து செல்வார்கள். அதாவது எத்துணை ஆழம் மிக்கதாக கடல் இருந்தாலும் அந்த ஆழம் கப்பலை நிறுத்த முடியாது. அது தன் பிரயாணத்தைத் தொடர்ந்து கொண்டேதான் இருக்கும். அதேபோல் பாய்ந்து செல்லும் குதிரையைப் பெற்றவன் போர்க் காலத்திலே படைகளைச் சிதறடிப்பான். வேகமற்ற மந்தமான குதிரைகள் இதனைச் செய்ய இயலாது என்பது கருத்து. தவம் என்னும் ஆழத்தை உடையவன், தன் மனதை அடக்கும் வலிமை பெற்றவன் என்று கூறப்பட்டது. சாதாரண மனிதர்கள் மனதை அடக்கமுடியாமல் மனம்போன போக்கில் சென்று கடுமையான துன்பங்களை அனுபவிப்பார்கள். அதோடுமட்டுமல்லாது எதிர்காலத்திலே பல பிறவிகளை எடுத்து அல்லல்படுவார்கள். ஆனால் தவத்தின் மூலம் மனதைக் கட்டுப்படுத்தியவன் தனக்குள்ளே ஒளிரும் இறை ஜோதியைத் தரிசிக்கிறான். அவன் இலட்சியம் அதோடு நிறைவேறி விடுகிறது. அதற்கு மேல் அவன் பெறவேண்டிய பேறு எதுவும் இல்லை. ஆகவே, தவத்தின் மூலம் மனதை அடக்கும் திறத்தைப் பெறவேண்டும் என்பது உட்பொருளாகும். கற்றவர்கள் நிரம்பிய சபை என்னும் கடலைக் கற்றறிந்தான் தாண்டி விடுவான் என்று கூறப்பட்டது. கற்றவர்கள் சபையிலே புகழ்க் கொடியை நாட்ட வேண்டுமானால்

ஒருவன் நன்கு கற்றிருக்கவேண்டும். கற்றதை உறுதியுடன் கூறும் திறம்பெற வேண்டும். தான் கற்றதைப் பிறருக்குப் புரியவைக்க முடியாதவன் நன்கு பூத்திருந்தும் மணமில்லாத மலருக்குச் சமமாவான். அவன் கற்றவர் சபையில் புகழ் பெறமுடியாது. இச்சிந்தனைகளைத் தூண்டும் விதத்தில் இந் நான்மணிக்கடிகை அமைந்துள்ளது.

அ.பொ.

கலவர்-கப்பல் ஓட்டிகள். கடல் குட்டம்-கடலின் ஆழம். படைக் குட்டம்-பகைவர் பகை வெள்ளத்தின் ஆழம். தோம்இல்-குற்றமற்ற. தவக்குட்டம்-தவம் என்னும் ஆழத்தை.

பொய்த்தல் இறுவாய நட்புகள்; மெய்த்தாக
மூத்தல் இறுவாய்த்து இளநலம்; தூக்கில்
மிகுதி இறுவாய செல்வங்கள்; தத்தம்
தகுதி இறுவாய்த்து உயிர். 17

விளக்கவுரை

நட்புகள் அனைத்தும் நிலையற்று முடிவை அடையக் கூடியவை. இளமை என்பது அழகுபோல் தோன்றி (இளமைக் காலத்தில்) இறுதியில் முதுமை என்னும் இறுதியை அடையக் கூடியது. செல்வப் பொருட்கள் தகுதியற்ற செயல்களை இறுதியாகக் கொண்டவை. மக்களின் உயிர் என்பது தங்கள் ஆயுள் காலத்தை இறுதியாகக் கொண்டது. இப்பொருளில் இந்நான்மணிக்கடிகைப் பாடல் அமைந்துள்ளது.

நட்புகள் நிலையற்று முடியக்கூடியவை என்று கூறப்பட்டது. எவ்வளவு உறுதியான நட்பையும் மரணம் பிரித்து விடும். ஆகவே, அது நிலையற்றது என்பதாகும். அதேபோல் அழகும் ஒருமுடிவினை உடையது. இளமைக்காலத்தில் மகிழ்ச்சியைத் தரும் அழகு, முதுமையில் நோயின் பிடியில் சிக்கி வாடி வதங்கிப் போகிறது. முகத்தில் சுருக்கமும், உடலில் தளர்ச்சியும் தோன்றி இளமை அழிந்து போகிறது. செல்வம் தகுதியற்ற செயல்களை இறுதியாகக் கொண்டவை என்று கூறப்பட்டது. செல்வம் படைத்தவன் ஆணவம் மேலிட்டுத் தகுதியற்ற செயல்களைச் செய்வான். அந்தத் தகுதியற்ற செயல்களே

ஒருகட்டத்தில் செல்வம் முழுவதையும் அழித்து விடும். சூதாட்டத்தின் மூலம் செல்வம் அழியும். சமூக விரோதச் செயல்களில் சிக்கி செல்வம் அழியும்; செய்யக்கூடாத தொழில்களில் இறங்குவதால் செல்வம் அழியும். ஆகவே, செல்வப் பொருட்களும் நிலையற்றவை என்று கூறப்பட்டது. அதேபோல் மக்களின் உயிர் என்பது ஆயுள் காலத்தை இறுதி யாகக் கொண்டவை என்று கூறப்பட்டது. ஐந்திலும் சாவு வரலாம்; நூறிலும் சாவு வரலாம். யார் எப்போது இறப்பார் என்பதை எவராலும் கூறமுடியாது. அவரவரின் ஆயுள்காலம் முடியும்போது மனிதனின் உயிர் போய் விடுகிறது. இதனை யெல்லாம் நான்மணிக்கடிகை ஏன் கூறுகிறது? செல்வம், இளமை, நட்பு, உயிர் ஆகியவை எதுவும் நிலைக்காது. அறச் செயல்களே நிலைக்கும். அதுவே நம் விடுதலைக்கு வழிவகுக் கும்; விடுதலை என்பது ஆத்ம தரிசனத்தைப் பெறுவதாகும். இததனை உணர்ந்து வாழ்நாளில் அறச் செயல்களையே செய்ய வேண்டும்.

அ.பொ.

நட்புகள்-சினேகங்கள். இறுவாய்-இறுதியை உடையவை. மூத்தல்-மூப்பு. தம், தம் தகுதி-தங்கள், தங்கள் ஆயுள் அளவு.

மனைக்கு ஆக்கம் மாண்ட மகளிர்; ஒருவன்
வினைக்கு ஆக்கம் செவ்வியன் ஆதல்; சினச்செவ்வேல்
நாட்டு ஆக்கம் நல்லன் இல்லேந்து என்றல்; கேட்டு ஆக்கம்
கேளிர் ஒரீஇ விடல். *18*

விளக்கவுரை

இல்வாழ்வுக்குச் செல்வம் என்பது பண்புள்ள பெண் களைக் கொண்டதாகும். வேற்படையைக் கொண்ட ஒரு வீரனின் செயலுக்குச் சிறப்பு தருவது படைப் பயிற்சியில் தேர்ச்சி பெற்றிருப்பதாகும். நாட்டுக்குச் சிறப்பு எதுவென்றால் இந்த அரசன் செல்வன் என்று குடிமக்களால் பாராட்டப் படுவதாகும். சுற்றத்தாரை நீக்கி விடுவது கேட்டுக்கு ஆக்க மாகும்; அதாவது, தீமையை உண்டாக்குவதாகும். இப் பொருளில் இப்பாடல் உள்ளது.

இல்வாழ்வுக்குச் செல்வம் என்பது பணம் என்ற செல்வம் இல்லை; பண்புள்ள பெண்களே ஆகும். பண்புள்ள பெண்கள் வாழும் வீட்டில் மகாலட்சுமி குடியேறுகிறாள். அதன் காரணமாக அந்த வீடு ஐசுவர்யம் நிறைந்ததாக மாறும். ஆகவே, இல்வாழ்க்கைக்குச் செல்வம் பண்புள்ள பெண்கள் என்று கூறப்பட்டது. வேற்படையைக் கொண்ட வீரனுக்குச் சிறப்பு பயிற்சி என்று கூறப்பட்டது. பயிற்சியால் முடியாத காரியம் இவ்வுலகில் எதுவும் இல்லை. எத்தகைய திறமை பெற்றவனும் பயிற்சியைக் கைவிட்டால் அவன் திறமை மழுங்கி விடும். ஆகவே, நமக்குப் பயிற்சியும், முயற்சியும் இன்றியமையாதது என்பது கருத்து. நாட்டுக்குச் சிறப்பு என்பது குடிமக்கள் அரசனை நல்லவன் என்று பாராட்டுதல் ஆகும். குடிமக்களின் பாராட்டைப் பெற என்ன செய்ய வேண்டும்? வரிகளை அதிகமாக மக்கள் மீது சுமத்தக் கூடாது. திருடர் பயம் இன்றி மககள் வாழ வழிவகைகள் செய்யவேண்டும். திறமையால் கருவூலத்தை நிரப்பி மக்களுக்கு நன்மைகளைச் செய்ய வேண்டும். ஏழை, பணக்காரன் என்று வேறுபாடு பார்க்காமல் பிரச்சனைகளைச் சமநீதியுடன் தீர்க்க வேண்டும். ஒவ்வொரு குடிமகனுக்கும் பாதுகாப்புக்கு உத்தரவாதம் இருக்க வேண்டும். மக்கள் வறுமையில் வாடும்போது அரசன் உடனே உதவிகள் செய்து அதை நீக்க வேண்டும். சுயநலத்தை விட்டு எப்போதும் நாட்டின் நலனி லேயே அரசன் கவனம் செலுத்த வேண்டும். சுற்றத்தாரை நீக்குவது கேட்டினை உருவாக்கும் என்று கூறப்பட்டது. சுற்றத்தாரை ஒருவன் இழந்து விட்டான் என்று அறிந்தால் எதிரிகள் அவனுக்குத் தீமை செய்யத் தூண்டி விடுவார்கள். அவனை எது செய்தாலும் கேட்பதற்கு ஆள் இல்லை என்று எண்ணி நகையாடுவார்கள். காரணம் எதுவுமின்றி தாக்கவும் செய்வார்கள். ஆகவே, சுற்றத்தினரை எப்போதும் அர வணைத்துச் செல்ல வேண்டும். அற்ப விஷயங்களைப் பெரிதுபடுத்தி உறவினர்களை இழப்பது ஒருவன் தன் பாதுகாப்புக் கவசத்தை தானே உடைத்து எறிவது போன்றது. இச்சிந்தனைகளைத் தூண்டும் விதத்தில் இந்நான்மணிக் கடிகைப் பாடல் அமைந்துள்ளது.

அ.பொ.

மனைக்கு-இல்வாழ்விற்கு. ஆக்கம்-செல்வம். மாண்ட-சிறந்த பண்புள்ள. ஓரீவிடல்-நீக்கி விடுவது. கேட்டு ஆக்கம்-தீமையை உண்டாக்கும்.

பெற்றான் அதிர்ப்பின் பிணை அன்னாள்தான் அதிர்க்கும்;
கற்றான் அதிர்ப்பின் பொருள் அதிர்க்கும்-பற்றிய
மண்அதிர்ப்பின் மன்னவன்கோல் அதிர்க்கும்; பண்அதிர்ப்பின்
பாடல் அதிர்ந்து விடும். 19

விளக்கவுரை

கணவன் தயங்குவான் எனில் மான் போன்ற மனைவியும் கடமையில் தவறுவாள். கல்வி கற்றவன் குழப்பம் அடைவான் எனில் அவன் கற்ற விஷயங்களிலும் குழப்பம் உண்டாகும். நாட்டு மக்கள் கலக்க மடைந்தால் ஆட்சியே கலக்கமடையும். யாழின் சுதி குலைந்தால் பாட்டுக்களும் இசை குலைந்து விடும். இப்பொருளில் இப்பாடல் அமைந்துள்ளது.

கணவன் தடுமாற்றம் கொண்டு தயங்கினால் மனைவி கடமை தவறுவாள் என்று கூறப்பட்டது. ஆகவே, எத்தகைய துன்பம் நேர்ந்தாலும் அதை வெளிக்காட்டாது, துன்பங்களை எதிர்த்து சமாளித்து முறியடிக்க வேண்டும் என்பது பொருளாகும்.

கல்வி கற்றவன் குழப்பம் அடைந்தால் அவன் கற்ற விஷயங் களிலும் குழப்பம் உண்டாகும் என்று கூறப்பட்டது. அதாவது, உண்மையான கல்வி கற்றவன் எந்தநிலையிலும் குழப்பம் அடையக் கூடாது. எது நேர்ந்தாலும் கலங்கக் கூடாது. ஏனெனில் உண்மையான கல்வி என்பது நாம் அழிவற்றவர்கள் என்பதே. இறைவனின் கூறுகள் நாம்; நம்மை எதுவும் அச்சுறுத்த முடியாது. நாம் அழியாத ஆத்ம ஜோதிகள் அப்படியிருக்க கற்றவன் குழப்பம் அடைந்தால் அவன் கற்ற விஷயங்களிலும் சந்தேகம் போன்ற குழப்பங்கள் நேரும். கற்ற கல்வியை வாழ்க்கையில் உறுதியாகக் கடைப்பிடிக்காத வர்கள் தான். குழப்பம் அடைவார்கள். ஆகவே, நாம் அழியாத ஆத்மா என்ற உண்மைக் கல்வியில் உறுதியுடன் நிற்க வேண்டும் என்பது பொருளாகும். நாட்டு மக்கள் கலக்கமடைந்தால்

ஆட்சியும் கலக்கம் அடையும் என்று கூறப்பட்டது. நாட்டு மக்கள் கலக்க மடைகிறார்கள் என்றால் ஆட்சி சரியில்லை என்றுதான் அர்த்தம். ஆட்சி சரியில்லை என்றால் அது எந்த வினாடியிலும் கவிழ்ந்து போகும். குடிமக்களின் ஒத்துழைப்பு இல்லாவிட்டால் படை பலமும் சீரழியும். ஆகவே, நாட்டு மக்கள் கலக்கமடையாமல் கவனித்துக் கொள்ளும் பொறுப்பு அரசை ஆளுபவர்களின் கடமை என்பது உணர்த்தப் பெறுகிறது. யாழின் சுதி குலைந்தால் இசை கெடும்; அதனால் பாட்டும் கெடும். ஆகவே, அது மிகவும் முக்கியம். இசையால் இறைவனை வரவழைக்க முடியும். அப்படிப்பட்ட இசை சுதி மாறாமல் இருக்க வேண்டும் என்று கூறப்பட்டது.

அ.பொ.

பெற்றான்-கணவன். அதிர்ப்பின்-தயங்குவான் என்றால். வினைக்கு ஆக்கம்-செயலுக்குச் சிறப்புத் தருவது. மண் அதிர்ப்பின்-நாட்டு மக்கள் கலக்கமடைந்தால்.

மனைக்குப்பாழ் வாள்நுதல் இன்மை; தான் செல்லும்
திசைக்குப்பாழ் நட்டோரை இன்மை; இருந்த
அவைக்குப்பாழ் மூத்தோரை இன்மை; தனக்குப்பாழ்
கற்றறிவு இல்லா உடம்பு. *20*

விளக்கவுரை

வீட்டுக்குப் பாழாவது ஒளிபொருந்திய இல்லத்தரசி இல்லாதிருத்தல் ஆகும். தான் போகின்ற திசைக்குப் பாழ் செல்லும் இடங்களிலெல்லாம் நண்பர்களைப் பெறாதிருத்தல். பலரும் கூடியிருக்கும் அவைக்குப்பாழ் கல்வி கேள்விகளில் சிறந்த பெரியோர்கள் இல்லாதிருத்தல். தனக்குப் பாழாவது கல்வி அறிவில்லாத வெற்றுடம்பாகும். இப்பொருளில் இப்பாடல் உள்ளது.

வீட்டுக்குப் பாழ் என்பது ஒளி பொருந்திய இல்லத்தரசி இல்லாதிருத்தல் என்று கூறப்பட்டது. ஒளி பொருந்திய இல்லத்தரசி என்பவள் யார்? கணவனைத் தெய்வமாக போற்றுபவள். கணவரின் உறவினர்களை அன்போடு நடத்து பவள், வாழ்வுக்குத் தகுந்தவாறு செலவு செய்பவள்; தெய்வத் தைப் போற்றுபவள், கற்புநெறி தவறாதவள் ஆகிய நற்குணங் களைக் கொண்டவளே ஒளி பொருந்திய இல்லத்தரசி ஆகும்.

இத்தகைய நற்குணங்கள் அமையப் பெறாத இல்லத்தரசி இல்லை என்றால் வீட்டுக்கு பாழ். அதாவது, வீடு கேட்டினை அடைவதற்கு அவள் காரணமாவாள் என்பது கருத்து. தான் போகின்ற திசைகளிலெல்லாம் நண்பர்களைப் பெறாதிருத்தல் பாழ் என்று சொல்லப்பட்டது. அதாவது நம் எந்தத் திசையை நோக்கிப் பயணம் செய்தாலும் அங்கு நண்பர்களைப் பெற வேண்டும். அதன் மூலம் மக்களுக்கு நன்மைகளைச் செய்ய வேண்டும். அவ்வாறு பயன் தராத பயணம் பாழ் என்பது கருத்து. பலரும் கூடியிருக்கும் அவையில் கல்வி, கேள்விகளில் சிறந்த பெரியோர் இல்லாமலிருத்தல் பாழ் என்று சொல்லப் பட்டது. கல்வி கேள்வி உரையாடலால்தான் அறிவு தளத்திற்கு நாம் செல்கிறோம். அற்ப ஆசைகளில் உழன்று கொண்டிருப் பது கீழ்தளம். அதைத்தாண்டிச் செல்லவேண்டியது அறிவுத் தளம்; அதன்பிறகு தாண்டவேண்டிய அடுத்ததளம் ஆன்மிகத் தளம் தான் நம் இலட்சியத் தளமாகும். அறிவுத் தளத்தைக் காட்டிலும் மிக அதிகமான பேரானந்தத்தைத் தரக்கூடியது ஆன்மிகத் தளமே ஆகும். அந்த ஆன்மீக தளத்திற்குச் செல்ல அறிவுத்தளம் முதலில் வழிகாட்டுகிறது. ஆகவே, கல்வி, கேள்வி களில் ஆற்றல் இல்லாத சபை பாழ் என்று கூறப்பட்டது.

அ.பொ.

மனைக்குப்பாழ்-வீட்டுக்கு பாழாவது. வாள்நுதல் இன்மை-ஒளி பொருந்திய நெற்றியை உடைய மனையாள் இன்மை. தான் செல்லும்-தான் போகின்ற. நட்டோரை இன்மை-சினேகிதர்களைப் பெறாதிருத்தல்.

மொய்சிதைக்கும் ஒற்றுமை இன்மை; ஒருவனைப்
பொய்சிதைக்கும் பொன்போலும் மேனியை-பெய்த
கலம் சிதைக்கும் பாலின்சுவையை; குலம்சிதைக்கும்
கூடார்கண் கூடி விடின். *21*

விளக்கவுரை

பிறருடன் ஒற்றுமையின்றி யிருந்தால் அது அவன் வலிமையை அழித்துவிடும். ஒருவன் சொல்லும் பொய் அவன் உடலை வாடும்படி செய்து விடும். ஊற்றி வைக்கப்பட்ட பாத்திரம் பாலின் ருசியைச் சிதைத்து விடும். சேரத்தகாதவ

ருடன் நட்பாகச் சேர்ந்தால் குலப்பெருமையைக் குலைத்து விடும். இப்பொருளில் இப்பாடல் அமைந்துள்ளது. ஒற்றுமை தான் வலிமை.

நான்கு எருதுகள் கதை உங்களுக்கு நினைவிருக்கலாம். அதை நினைவுபடுத்துகிறோம். ஒருவயலில் நான்கு எருதுகள் ஒற்றுமையாக மேய்வதை வழக்கமாக்கக் கொண்டிருந்தன. அப்போது ஒரு கொடிய புலி எருதுகளை அடித்துத் தின்ன வந்தது. அப்போது நான்கு எருதுகளும் ஒற்றுமையுடன் புலியை எதிர்த்தன. அதனால் புலி பின்வாங்கி ஓடியது. காலங்கள் சென்றன. ஒரு கட்டத்தில் அந்த எருதுகளுக்குள் பிணக்கு ஏற்பட்டுத் தனித்தனியாகப் பிரிந்தன. மீண்டும் அதே புலி எருதுகளைத் தாக்க வந்தது. வெகுசுலபமாக எருதுகளை அது வீழ்த்தியது. சிறு பருவத்துக் கதை என்றாலும் நாம் ஒவ்வொருவரும் மனதில் பதியவைக்க வேண்டிய கதை. நாம் ஒற்றுமையுடன் வாழாவிட்டால் வலிமை இழந்து எதிரிகளால் வெல்லப்பட்டு விடுவோம். இதையே நான்மணிக்கடிகை பிறருடன் ஒற்றுமையின்றி இருந்தால் வலிமை அழிந்து விடும் என்று கூறுகிறது. அடுத்து ஒருவன் சொல்லும் பொய் அவன் உடம்பை வாடச் செய்து விடும் என்று கூறப்பட்டது. எவ்வளவு சாமர்த்தியமாகப் பொய் பேசினாலும் அது விரைவில் வெளிப்பட்டு விடும். அப்படி வெளிப்படும் போது பொய் பேசியவன் நாணம் அடைவான். மற்றவர்களால் ஏசப்படுவான். அது அவர் உடலையும், மனதையும் வாடச் செய்து விடும் என்பது உட்கருத்தாகும். ஒரு பாத்திரத்தில் ஊற்றி வைக்கப் படும் பாலின் சுவை சிதைந்து விடும் என்று கூறப்பட்டது. அதாவது பால் ஒரு இடத்தில் தேங்கக் கூடாது. தேங்கினால் சுவை சிதையும். அதேபோல மனிதன் தேங்கி ஜடம் போல் இருக்கக் கூடாது. எவ்வளவு திறமைகள் இருந்தாலும் ஒருவன் செயலற்றுச் சோம்பி இருந்தால் அவனுடைய அறிவாற்றல் மழுங்கிவிடும். அவன் சிறப்புக்களும் தேய்ந்து விடும் என்பது கருத்து. ஒற்றுமையுடன் வாழவேண்டும்; பொய் பேசக்கூடாது. சேரத்தகாத நட்புக் கொண்டால் ஏற்கனவே இருந்த குடிப் பெருமை கெடும். பொய்களை இது

போன்ற தீயநடத்தையுள்ளவர்களிடம் நட்புக்கொண்டால் நம் குடும்ப கௌரவம் அழியும் என்பதாகும். இச்சிந்தனைகளைத் தூண்டும் விதத்தில் இந்நான்மணிக் கடிகைப் பாடல் உள்ளது.

அ.பொ.

பொன்போலும் மேனி-பொன்போல நிறமுள்ள உடல். பெய்த கலம்-ஊற்றி வைக்கப்பட்ட பாத்திரம். கூடார்கண்-சேரக் கூடாதவரிடத்து.

புகழ்செய்யும் பொய்யா விளக்கம்; இகழ்ந்துஒருவர்ப்
பேணாது செய்வது பேதைமை; காணாக்
குருடனாச் செய்வது மம்மர்; இருள்தீர்ந்த
கண்ணராச் செய்வது கற்பு. 22

விளக்கவுரை

பொய் சொல்லாதிருத்தல் புகழைத் தரும். ஒருவரையும் மதிக்காமல் செய்வது (தீமை செய்வது) அறியாமை ஆகும். நன்மை, தீமைகளைக் காணாதவாறு குருடனாக்குவது கல்வி யின்மையாகும். குருடு நீங்கிய கண்களை உடையவராகச் செய்வது கல்வி அறிவாகும். இப்பொருளில் இந்நான்மணிக் கடிகைப் பாடல் அமைந்துள்ளது.

பொய் சொல்லாதிருத்தல் புகழைத் தரும் என்று சொல்லப்பட்டது. அரிச்சந்திரன் இறுதிவரை சத்தியத்தையே பேசினான். இராஜ்ஜியத்தை இழந்தான்; செல்வங்களை இழந்தான். மனைவி, மகனைக் கடனுக்காக விற்றான்; சுடலை காத்தான். ஆனால், சத்தியத்தை அவன் இழக்கவில்லை. ஒரே ஒருபொய் கூறினால் போதும் இழந்த அத்தனையும் பெறலாம் என்று ஆசை வார்த்தை அவனுக்குக் கூறப்பட்டது. ஆனால் அரிச்சந்திரன் எதற்கும் அசைந்து கொடுக்கவில்லை. என்ன நேர்ந்தாலும் சரி. சத்தியமே பேசுவேன் என்று உறுதியாக நின்றான். அதனால், இன்றும் அவன் புகழ் நிலைத்து நிற்கிறது. ஆகவே, பொய் சொல்லாதிருத்தல் புகழை நிலைநிறுத்தும் என்பது கருத்து. ஒருவரையும் மதிக்காமல் செய்வது அறியாமை என்று கூறப்பட்டது. தீய செயல்கள் புரிகிறவர்கள். அதர்ம வழியில் செல்பவர்கள் ஆணாக இருந்தாலும்சரி, பெண்ணாக

இருந்தாலும்சரி அறியாமை காரணமாகவே செய்கிறார்கள். அறிவாற்றல் உள்ளவர்கள் தீமையின் வசப்படுவதில்லை. ஏனெனில் தீய செயல்களால் துன்பம் வரும் என்பது அவர் களுக்குத் தெரியும். அத்தகைய விவேகம் உள்ளவர்களே புத்திசாலிகள். இதை அறியாமல் தீமைகளில் சிக்கிக் கொள் கிறவர்கள் அறியாமை மிக்கவர்கள் என்பது பொருளாகும். நன்மை தீமைகளை அறியாதவாறு ஒருவரைக் குருடாக்குவது கல்வியில்லாமை என்று கூறப்பட்டது. கல்விதான் நன்மை, தீமைகளை ஆராய்ந்து நல்வழி செலுத்தும் மாபெரும் அஸ்திர மாகும். அத்தகைய கல்வியறிவைப் பெறாதவர்கள் கண்கள் இருந்தும் குருடர்களே ஆகும். கல்வி அறிவு ஒன்றுதான் கண் களைப் பெற்றிருப்பதற்கு உண்மையான அடையாளமாகும். திருதரராட்டிரன் குருடனாம். இருந்தாலும், பாண்டவர்களின் வலிமையை அறிந்து தன் மகன் துரியோதனனுக்கு அறிவுரை கூறினான். ஆனால், புறக் கண்களைப் பெற்றிருந்த துரியோ தனன் அறிவுக் கண்களைப் பெறாததால் அழிந்தான். ஆகவே, கல்வியே உண்மையான கண்கள் ஆகும்.

அ.பொ.

பொய்யா விளக்கம்-பொய் சொல்லாமை. இகழ்ந்து-வரம்பு கடந்து. மம்மர்-கல்வியின்மை.

மலைப்பினும் வாரணம் தாங்கும்; அலைப்பினும்
அன்னேயென்று ஓடும்; குழவி சிலைப்பினும்
நட்டார் நடுங்கும் வினைசெய்யார்; ஒட்டார்
உடன் உறையும் காலமும்இல். 23

விளக்கவுரை

பாகன் தன்னிடம் சண்டையிட்டாலும் யானை அவனைச் சுமக்கும். தாய் அடித்தாலும் குழந்தை அம்மா என்று அலறிக் கொண்டு அவளிடமே ஓடும். தன்மீது கோபம் கொண்டாலும், நண்பர் நடுங்கும்படியான செயலைச் செய்யமாட்டார். பகை வர்கள் ஒற்றுமையாக எக்காலத்திலும் கூடி வாழமாட் டார்கள். இப்பொருளில் இப்பாடல் அமைந்துள்ளது.

பாகன் அங்குசத்தால் குத்தி வழிநடத்தினாலும் யானை அவனை சுமந்து செல்லுமே ஒழியே கீழே தள்ளாது. ஏனெனில் அங்குசத்தால் துன்புறுத்தும் பாகனே யானைக்கு உணவு, நீர் முதலானவற்றைத் தந்து பராமரிக்கிறான். ஆகவே, யானை அவனைச் சுமக்கிறது. அதேபோல் தாய் அடித்தாலும் குழந்தை அம்மா, அம்மா என்று கூறியபடி தாயையே சரண் அடைகிறது. தாய்தான் மாறாத அன்பைப் பொழிபவள். குழந்தைகளின் குற்றங்களைப் பொருட்படுத்தாதவள் தாய் ஒருத்திதான். மிகவும் அட்டகாசம் செய்யும் குழந்தை மீது தாய் பொய்க் கோபம் கொள்கிறாள். ஆனால் அந்தக் கோபத் தைப் பொருட் படுத்தாது குழந்தை அவளிடமே ஓடுகிறது. அன்பின் மகத் துவத்தால் தான் இவை நிகழ்கின்றன. நண்பர்கள் நடுங்கும் படியான செயல்களைச் செய்ய மாட் டார்கள் என்று கூறப் பட்டது. ஏனெனில் நட்பு என்பது முன்பு மகிழ்ந்திருந்த நினைவுகளைக் கொண்டது. கருத்து வேறுபாட்டால் நண்பர் களிடம் பிணக்கு ஏற்பட்டாலும் முன்பு நடந்த நிகழ்வுகளில் நண்பர்கள் காட்டிய அன்பினை நினைத்துப் பார்ப்பார்கள். ஆகவே, கொடிய செயல்களை நண்பர்களுக்குச் செய்யும் எண்ணம் வராது என்பது பொரு ளாகும். பகைவர்கள் எக்காலத்திலும் கூடி வாழ மாட்டார்கள் என்று கூறப் பட்டது. பகைமை ஏற்பட்டு விட்ட பிறகு அப் பகைவர்கள் உண்மையான அன்புடன் ஒன்றுசேர்ந்து வாழ மாட்டார்கள். உள்ளத்தில் பகைமை இருந்து கொண்டே இருக்கும். வெளியில் நட்புக் காட்டுவது போல் காட்டித் தீமைகளையே அவர்கள் செய்ய முயல்வார்கள் என்பது கருத்து. நண்பர்கள் கருத்து வேறுபாடு ஏற்பட்டாலும் தீமை செய்யமாட்டார்கள். ஆனால், பகைவர்கள் ஒன்று சேர்ந்து வாழமாட்டார்கள். ஆகவே, பகைமை கொண்டு விலகிய வர்கள் திரும்பவும் ஒன்று சேர வரும்போது மிகவும் எச்சரிச்சையுடன் இருக்க வேண்டும் என்பதை இப்பாடல் உணர்த்துகிறது.

அ.பொ.

மலைப்பினும்-பாகன் தன்னிடம் சண்டை யிட்டாலும். குழவி-குழந்தை. சிலைப்பினும்-கோபம் கொண்டாலும். ஒட்டார்-பகைவர்கள்.

நகை நலம் நட்டார்கண் நந்தும்; சிறந்த
அவைநலம் அன்பின் விளங்கும்; விசைமாண்ட
தேர்நலம் பாகனால் பாடுஎய்தும்; ஊர்நலம்
உள்ளானால் உள்ளப் படும். *24*

விளக்கவுரை

முக மலர்ச்சியாகிய நன்மை நண்பர்களிடம் சிறப் படையும். ஒருசபையின் நன்மை என்பது அன்பினால் சிறப்புப் பெறும். வேகத்தில் சிறந்த தேரின் நன்மை அதை ஓட்டுகின்ற பாகனால் சிறப்படையும். ஊரில் வாழும் குடிமக்களின் நன்மை அவ்வூரில் உள்ள அரசனைக் கொண்டு மதிக்கப் படும். இப்பொருளில் இப்பாடல் அமைந்துள்ளது.

முகமலர்ச்சிதான் நண்பர்களிடம் சிறப்பை ஏற்படுத்தும் என்று கூறப்பட்டது. முகமலர்ச்சிதான் எல்லாச் சிறப்புகளுக் கும் காரணம். ஆன்மீகத்தின் முதல்படி என்பது முகமலர்ச் சியே எல்லா நல்ல செயல்களுக்கும் முதல்படி முனுமுணுத்தல் இன்றி முகமலர்ச்சியுடன் செயல்படுதலே ஆகும். ஒருவர் முகம் மாறுபடவேண்டுமானால் அது உடல் உபாதையால் மட்டுமே இருக்கவேண்டும். நாம் விதைத்ததைத்தான் அறுவடை செய்கிறோம். ஆகவே, முணு, முணுத்தல் தேவை யில்லை. எப்போதும் முகமலர்ச்சியுடன் இருப்பதே சிறப்பு என்பது இங்கே உணர்த்தப்படுகிறது. ஒரு சபையின் நன்மை என்பது அன்பால் சிறப்புப் பெறும் என்று கூறப்பட்டது. சபையில் மாறுபட்ட கருத்துடையவர்கள் இருக்கலாம். ஆனால், அன்பு மாறக்கூடாது; பெருந்தன்மை மாறக்கூடாது. அதுவே, அவைக்குச் சிறப்பு. வேகத்தில் சிறந்த தேரின் நன்மை அதை ஓட்டுகிற பாகனால் சிறப்படையும் என்று கூறப்பட்டது. குருட்சேத்திரத்தில் பகவான் கிருஷ்ணர், அருச்சுனனுக் காக தேர் ஓட்டினார். அவருடைய சாகசமான தேரோட்டம் அதர்மத்தை அழித்துத் தருமத்தை நிலைநிறுத் தியது. அந்தத் தேர் கிருஷ்ண பகவானால் சிறப்புப் பெற்றது. ஊரில் வாழும் குடிமக்களின் நன்மை என்பது அவ்வூரில் உள்ள அரசனைக் கண்டு மதிக்கப்படும் என்று கூறப்பட்டது. அதாவது, அரசன் சமநீதி கொண்டவனாக குடிமக்களின்

நலனில் எப்போதும் அக்கறையுள்ளவனாக இருந்தால் மட்டுமே குடிமக்கள் நன்மை அடைவார்கள். ஆகவே, அரசனைக் கொண்டே குடிமக்களின் நன்மை அறியப்படும் என்று இப்பாடல் கூறுகிறது. முகமலர்ச்சி, அன்பு, சமநீதி ஆகிய உயர் பண்புகளே எல்லாச் சிறப்புக்களுக்கும் காரணம் என்பதை இப்பாடல் அறிவுறுத்துகிறது.

அ.பொ.

நகைநலம்-முகமலர்ச்சியாகிய நன்மை. அவைநலம்-சபைநலம். ஊர்நலம்-ஊரில் வாழும் குடிகளின் நன்மை.

அஞ்சாமை அஞ்சுதி; ஒன்றின் தனக்கு ஒத்த
எஞ்சாமை எஞ்சல் அளவெல்லாம்-நெஞ்சறியக்
கோடாமைகோடி; பொருள் பெறினும் நாடாதி
நாட்டார்கண் விட்ட வினை. 25

விளக்கவுரை

அஞ்சாமல் செய்யும் பாவங்களைச் செய்யப் பயப்படு வாயாக. தனக்கு ஏற்ற அளவில் பிறருக்கு உதவி செய்வதை விட்டு விடாதே. கோடி செல்வம் கிடைப்பதாக இருந்தாலும் நடுவு நிலைமையிலிருந்து தவறாதே. நண்பர்களிடம் ஒரு காரியத்தைச் செய்யும்படி ஒப்படைத்த பிறகு அதைப் பற்றி ஆராய்ச்சி செய்யாதே. இப்பொருளில் இப்பாடல் உள்ளது.

அஞ்சாமல் செய்யும் பாவங்களைச் செய்ய அஞ்ச வேண்டும். கொலை, கொள்ளை மற்றும் பல பஞ்சமா பாதகங்கள் செய்யப் பயப்படவேண்டும். அவ்வாறு பயம் கொள்ளாவிட்டால் அழிய நேரும் என்பது கருத்து. தன்னால் முடிந்த அளவுக்குப் பிறருக்கு உதவி செய்ய வேண்டும். அதை விடக் கூடாது. பிறருக்கு உதவி செய்ய செய்ய மனிதன் தெய்வச் சாயலை அடைகிறான். சுயநலத்துடன் வாழ்பவன் மிருக நிலைக்குத் தாழ்ந்து கொண்டே போகிறான். ஆகவே, தெய்வ நிலைக்கு நாம் செல்ல வேண்டும் என்பது கருத்து. கோடி செல்வம் கிடைப்பதாக இருந்தாலும் நடுவு நிலையிலிருந்து தவறாதே என்று சொல்லப்பட்டது. கடவுளுக்கு இருக்கும் ஆற்றல் அனைத்தும் சாத்தான்களுக்கும் உண்டு. ஒரே ஒரு வேறுபாடுதான். கடவுளிடம் சுயநலம் இல்லை;

ஆனால், சாத்தான் சுயநலத்தின் மொத்த வடிவம். அதனால் தான், அது எப்போதும் சாத்தானாகவே இருக்கிறது. நாம் தெய்வத் தன்மையைப் பெறவேண்டும். அதற்காகவே நாம் இந்தப் பூமிக்கு வந்திருக்கிறோம். இந்தப் பூமி என்பது பயிற்சிக் களம். பிறருக்கு உதவிகள் செய்து நம்மைத் தூய்மைப் படுத்திக் கொள்ள வேண்டும். தூய்மை தான் இரும்பாலான சுவர்களையும் பிளந்து செல்லக்கூடியது. ஆகவே, தூய்மை யைப் பெற பிறருக்கு உதவிகள் செய்து கொண்டே இருக்க வேண்டும். கோடி செல்வம் கிடைப்பதாக இருந்தாலும் நடுவு நிலைமை யிலிருந்து தவறக் கூடாது. நண்பர்களிடம் ஒரு காரியத்தை ஒப்படைத்த பிறகு ஆராய்ச்சி செய்யக் கூடாது; அதனால் நட்பு முறியும். இதனை உணர்த்தும் பாடல் இது.

அ.பொ.

அஞ்சுதி-பயப்படுவாயாக. நெஞ்சு அறிய-மனம் அறிய. விட்டவினை-செய்யும்படி விட்ட காரியம். நாடாதி-ஆராயாதே.

அலைப்பான் பிறஉயிரை ஆக்கலும் குற்றம்;
விலைப்பாலில் கொண்டுஊன் மிசைதலும் குற்றம்;
சொலற்பால அல்லாத சொல்லுதலும் குற்றம்;
கொலைப்பாலும் குற்றமே ஆம். 26

விளக்கவுரை

கொல்வதற்காகப் பிராணிகளை வளர்ப்பது குற்றம். விலை கொடுத்து மாமிசத்தை வாங்கி உண்பது குற்றம். சொல்லத் தகாத சொற்களைச் சொல்வது குற்றமாகும். கொலை செய்வது குற்றமாகும். இப்பொருளில் இப்பாடல் உள்ளது.

கொல்வதற்காகப் பிராணிகளை வளர்ப்பது குற்றம் என்று சொல்லப்பட்டது. பிள்ளைகளை வளர்ப்பது போன்றது தான் பிராணிகள், பறவைகள் ஆகியவற்றை வளர்ப்பது. ஆகவே, கொல்வதற்காக வளர்ப்பது அவமானத்திற்குரியது. மாமிசம் உண்பவர்களை விட இவர்கள் தீயவர்கள் என்பது கருத்து. சொல்லத்தகாத சொற்களைச் சொல்வது குற்ற மாகும். விதுரர் துரியோதனன் சித்தப்பா; தருமத்தையே பேசுபவர். அவர் துரியோதனனுக்கு பல அறிவுரைகளைக்

கூறினார். பாண்டவர்களைப் பகைத்தால் இராஜ்ஜியத்தை இழந்து அழிவாய் என்று அவர் கூறினார். அதனால் கோபம் கொண்ட துரியோதனன் அடிமைப் பெண்ணாகிய தாசிக்குப் பிறந்ததால் உமக்கு அடிமை புத்தியிருக்கிறது. இந்தத் துரியோதனன் பாண்டவர்களுக்குப் பயப்படும் கோழையல்ல என்று கூறினான். இத்தகாதவார்த்தை களைக் கேட்ட விதுரர் தன் வலிமை வாய்ந்த வில்லை முறித்துப் போட்டார். யுத்த களத்தில் இந்த வில் உனக்குப் பயன் படாது என்று கூறினார். விதுரர் கூறியபடி பாண்டவர்களால் துரியோதனன் கொல்லப் பட்டான். தகாத சொற்களைப் பேசியதாலும், பங்காளிகளின் இராஜ்ஜியத்தை அதர்மமாக அபகரித்ததாலும் அவனுக்கு இந்த நிலை ஏற்பட்டது. ஆகவே, நம் வாழ்க்கையில் தகாத சொற்களைக் கூறக்கூடாது என்பது கருத்து. கொலை செய்வது குற்றம் எனக் கூறப்பட்டது. கொலை என்பது பஞ்சமாபாத கங்களில் ஒன்று. இத் தீவினை பிறவிதோறும் தொடரும். இதன் காரணமாக ஒவ் வொரு பிறவியிலும் கடுமையான துன்பங்களை எதிர்கொள்ள நேரும். மனிதனின் தெய்வீகத் தன்மை என்பது மிருகத்தைவிட கீழான நிலைக்குத் தள்ளப் படும். கொலை செய்தவர்கள் எந்தப் பிறவியிலும் நிம்மதியாக வாழஇயலாது. பயஉணர்ச்சி என்பது எப்போதும் தொடர்ந்து கொண்டே இருக்கும். அச்சம் கொண்டு வாழ்பவன் நரகத்தில் உழல்கிறான். அவனை எவரும் மதிக்கமாட்டார்கள். சான் றோர்களாலும், மக்களாலும் அவன் பழிக்கப்படுவான். ஆகவே, கொலை செய்வது குற்றம் எனக் கூறப்பட்டது.

அ.பொ.

அலைப்பான்-கொல்லும் பொருட்டு. ஊன்மிசைதலும்-அந்த மாமிசத்தை உண்பதும். சொலற்பால அல்லாத-சொல்லும் தன்மை இல்லாத சொற்களை.

கோல்நோக்கி வாழும் குடியெல்லாம்; தாய்முலைப்
பால்நோக்கி வாழும் குழவிகள்; வானத்
துளிநோக்கி வாழும் உலகம்; உலகின்
விளிநோக்கி இன்புறூஉம் கூற்று. 27

விளக்கவுரை

குடிமக்கள் யாவரும் அரசனது அரசாட்சியை எதிர் பார்த்து வாழும் (உயிர் வாழ்வார்கள்). குழந்தைகள் அனைவரும் தாயின் முலைப்பாலை நோக்கி வாழும். உலகத்தில் உள்ள உயிர்கள் வானில் மழைத் துளியை எதிர்பார்த்து வாழும். உலகத்து உயிர்களின் சாவை எதிர்பார்த்து யமன் மகிழ்ச்சி அடைவான். இப்பொருளில் இந்நான்மணிக்கடிகையின் பாடல் உள்ளது.

குடிமக்கள் அனைவரும் அரசனின் அரசாட்சியை எதிர் பார்த்து உயிர் வாழ்வார்கள் என்று கூறப்பட்டது. அரசன் நீதிமானாக இருக்க வேண்டும். பகை அரசர்களால் வெல்லப் படாத ஆற்றல் பெற்றவனாக விளங்கவேண்டும். குடிமக்களின் துன்பங்களை நீக்கும் வலிமை பெற்றிருக்க வேண்டும். தீயவர் களைத் தண்டிக்கும் துணிவு பெற்றிருக்க வேண்டும். நாட்டில் வறுமை சூழும் காலத்தில் பொக்கிஷத்தைப் பயன்படுத்திப் பஞ்சத்தை உடனடியாக நீக்கவேண்டும். இத்தகைய தகுதி களைப் பெற்ற அரசனின் அரசாட்சியை எதிர்பார்த்தே குடிமக்கள் வாழ்வார்கள் என்பது பொருளாகும். குழந்தைகள் அனைவரும் தாய்ப் பாலை எதிர்பார்த்தே வாழும் என்று கூறப்பட்டது. குழந்தைப் பருவத்தில் தாய்ப் பாலைப் போல் சிறந்த உணவு வேறுஎதுவும் இல்லை. தாய்ப்பால் கொடுக்காத காரணத்தால்தான் பல பிள்ளைகள் வலிமை இழந்து நடைப் பிணங்களாகத் திரிவதைப் பார்க்கிறோம். இக்காலத்திலும் நான்மணிக்கடிகையின் வாசகங்கள் பொருந்துவதை வாசகர் களுக்கு நினைவுபடுத்து கிறோம். உலகத்தில் உள்ள உயிர்கள் வான்மழையை எதிர்பார்த்து வாழும் என்று சொல்லப்பட்டது. மழை பெய்யாவிடில் பூமியில் ஒருபுல்கூட முளைக்காது. உணவுப் பொருள்கள் விளைய மழைநீர் தேவை. மனிதனின் அடிப்படை வாழ்வாதாரம் நீர். அந்த நீர் இல்லாமல் எந்த உயிரும் உலகில் வாழ இயலாது. ஆகவே, உயிர்கள் மழைத் துளிகளை நம்பிவாழும் என்பது கருத்து. உலகத்து உயிர்களின் சாவைப் பார்த்து எமன் மகிழ்ச்சி அடைவான் என்று கூறப் பட்டது. எமன் என்பவன் பூமியின் பாரத்தைக் குறைத்துப்

புதுப்புது உயிர்கள் தங்கள் கர்ம வினைகளைப் போக்கிக் கொள்ள சந்தர்ப்பம் தரும் இறைவனின் சேவகன் ஆகும். ஆகவே, சாவு என்பது உடல் பரிமாற்றம்தான் - ஆத்மாவை எதுவும் அழிக்கமுடியாது. என்பது அவனுக்குத் தெரியும். ஆகவே, உலகத்து உயிர்களின் சாவு என்பது அவனுக்கு விளையாட்டுப் போன்றது என்பது கருத்து.

அ.பொ.

குடிஎல்லாம்-குடிமக்கள் அனைவரும். கோல்நோக்கி-அரசனது ஆட்சியை எதிர்பார்த்து. உலகின் விளிநோக்கி-உலகத்து உயிர்களின் சாவை எதிர்பார்த்து.

கற்பக் கழிமடம் அஃகும்; மடம்அஃகப்
புற்கம்தீர்ந்த இவ்வுலகின் கோள்உணரும்; கோள்உணர்ந்தான்
தத்துவ மான நெறிபடரும்; அந்நெறி
இப்பால் உலகின் இசைநிறீஇ உப்பால்
உயர்ந்த உலகம் புகும். *28*

விளக்கவுரை

கல்வி கற்பதால் அறியாமை குறையும். அறியாமை குறைவதால் அற்ப அறிவு அகன்று இவ்வுலக இயற்கையை அறிவான். அவ்வாறு இயற்கை அறிவைப் பெறுவதால் நேர் வழியில் அவன் செல்வான். அவ்வாறு நேர்வழி வாழ்க்கை நடத்தினால் புகழை நிலைநாட்டி இறுதியில் மோட்ச உலகை அடைவான். இப்பொருளில் இப்பாடல் அமைந்துள் ளது.

கல்வி என்பது அறிவைக் கூர்மைப்படுத்தும் சக்தியை உடையது. அறியாமை இருளை நீக்கி அறிவொளியை ஏற்றுவ தால் மனிதன் துன்பங்களை வென்று விடுகிறான். கல்வி கற்காதவர்கள் சிறிய, சிறிய விஷயங்களுக்குக் கூட துன்பம் அடைவார்கள். ஆகவே, கல்வி கற்பது அறியாமையைக் குறைக்கும் என்று கூறப்பட்டது. அறியாமை நீங்குவதால் அற்பத்தனமான செயல்கள் நீங்கித் தெய்வத் தன்மையை மனிதன் அடை கிறான். அற்பத்தனமான செயல்கள் என்பது சுயநலத்திற்காக பிறரை வஞ்சித்தல், அளவுக்கு அதிகமான

சுகபோகம், சோம்பல், குடி, சூது போன்ற அற்பச் செயல்களில் ஈடுபடுவது போன்றவைகளாகும். அறியாமை நீங்கினால் இந்த அற்பச் செயல்கள் நீங்கும். அதன் பிறகு அவன் நேர்வழி யிலேயே வாழ்க்கைப் பயணத்தைத் தொடர்வான். நேர்வழிப் பாதை என்பது இறைவனை நெருங்கும் பாதை என்றே சொல்லலாம். நேர்வழியில் நடப்பவர்கள் அனைவரும் இறை வனின் ஆசீர்வாதத்தைப் பெற்றவர்கள் என்று அடையாளம் காணலாம். அப்படிப்பட்டவர்கள் உடல் நீங்கியதும் மோட்ச உலகை அடைவார்கள் என்று நான்மணிக்கடிகை கூறுகிறது. மோட்ச உலகம் என்பதுபோகங்களை அனுபவிக்கும் இடம் என்று கருதக்கூடாது. பிறப்பு, பிறப்பு நீங்கிய நிலையான பேரானந்தப் பெருவாழ்வைத் தருவதே மோட்ச உலகம். அதாவது, தனக்குள்ளே இருக்கும் தெய்வ சக்தியை ஆத்ம ஜோதியைத் தரிசிப்பதே மோட்சம். தூய்மையும், ஒழுக்கமும், தியானமும் உடையவர்கள் உடல் இருக்கும்போதே வீடு பேற்றை அடைய முடியும். இதுவே ஜீவன் முக்தி என்று சொல்லப்படுகிறது. ஆகவே, உண்மையான கல்வி பயின்று நாம் நேர்வழியில் வாழ்க்கையை நடத்தினால் மோட்ச உலகம் கிட்டும் என்பது பொருளாகும்.

அ.பொ.

கற்ப-கல்வி கற்பதனால். கழிமடம்-மிகுந்த அறியாமை. அஃகும்-குறையும். புற்கம் தீர்ந்து-அற்ப அறிவு நீங்கி.

குழித்துழி நிற்பது நீர்தன்னைப் பல்லோர்
பழித்துழி நிற்பது பாவம்; அழித்துச்
செறிவுழி நிற்பது காமம்; தனக்கு ஒன்று
உறுவுழி நிற்பது அறிவு. *29*

விளக்கவுரை

குழித்த இடத்திலே நிற்பது நீர். தன்னை அறிவுடை யோர் பலரும் பழிக்கும் இடத்தில் இருப்பது பாவம். தீய வழியில் செல்லும்போது நிற்பது காமம். தனக்குத் துன்பம் வந்தபோது துணையாக நிற்பது அறிவு ஒன்றுதான் இப் பொருளில் இந்நான்மணிக்கடிகை பாடல் உள்ளது.

பள்ளத்தில் நிற்பது நீர். அறிவுடையோர் ஒருவரைப் பழித்தால் அந்த அறிவுடைய ஒருவர் அடங்கி நிற்பது பாவம் என்று கூறப்பட்டது. அறிவுடையோர் யாரைப் பழிப்பார்கள்? தீயவர்களைத்தான் பழிப்பார்கள். அத்தகைய அறிவுடையோர் இருக்கும் இடத்தில் தீயவர்கள் தொல்லை தருவார்கள். அது மேலும் அவர்களை பாவியாக்கும் என்பது பொருளாகும். காமம் என்பது ஆசை என்ற பொருளைத் தரும். தீயவழிகளில் செல்பவர்கள் இந்த ஆசைக்கு அடிமையானவர்கள். செல்வத்தில் ஆசை. பெண்கள் மோகம், பிறர் பொருளை அபகரிக்க பிரயத்தனம் செய்தல் போன்ற தீயசெயல்கள்தான் காமம் என்ற ஒரு சொல்லி கூறப்படுகிறது. தனக்குத் துன்பம் வந்தபோது துணையாக இருப்பது அறிவு ஒன்றுதான் என்று கூறப்பட்டது. ஏனெனில் துன்பம் சூழும்போது உறவினர்கள் விலகிக்கொள்வார்கள்; நண்பர்களும் விலகுவார்கள்; எவரும் கை கொடுக்க மாட்டார்கள். அந்த நிலையில் ஒரு மனிதனின் துணை அறிவு ஒன்றுதான். அறிவாற்றல் உள்ளவன் எத்தகைய துன்பத்தையும் வெற்றி காண்பான். அறிவு என்பது ஒரு மனிதனைப் பாதுகாக்கும் கவசம் போன்றது. சாவித்திரி அறிவாற்றலால் எமனையே வென்று தன் கணவனின் உயிரை எமனிடமிருந்து மீட்டு வந்தாள். பதினாறு வயதே ஆயுள் விதிக்கப்பட்ட மார்க்கண் டேயர் தன் அறிவுக் கூர்மையால் எமனை வென்று என்றும் பதினாறு என்றும் சீரஞ்சீவி என்ற சிறப்பைப் பெற்றார். ஆகவே, துன்பம் வந்து சூழும்போது அச்சம் கொள்ளாமல் அறிவாற்றலைப் பயன்படுத்தி அதை வெல்லவேண்டும். மனமிருந்தால் மார்க்கம் உண்டு. எத்தகைய துன்பத்திற்கும் முடிவு உண்டு. அறிவின் துணையால் துன்பங்களைத் துணிவுடன் எதிர்கொள்ள வேண்டும் என்பது பொருளாகும்.

அ.பொ.

குழித்துழி-குழிந்த இடத்திலே. பழித்துழி-பழிக்கும் இடத்தில். செறிவுழி-தீய நெறியை அடையும்போது.

திருவின் திறல் உடையது இல்லை; ஒருவற்குக்
கற்றலின் வாய்த்த பிறவியில்லை; எற்றுள்ளும்
இன்மையின் இன்னாதது இல்லை; இல்என்னாத
வன்மையின் வன்பாட்டது இல். *30*

விளக்கவுரை

செல்வத்தைவிட வலிமையுள்ளது இல்லை. ஒருவனுக்குத் கற்பதைவிட வாய்த்த வேறுதுணை இல்லை. வறுமையைவிடத் துன்பம் தருவது வேறுஇல்லை. இரப்போர்க்கு இல்லை என்று கூறாமல் வழங்குகின்ற உறுதி வேறுஇல்லை. இப்பொருளில் இப்பாடல் உள்ளது.

செல்வத்தைவிட வலிமையுள்ளது வேறு இல்லை என்று கூறப்பட்டது. அதனால்தான் பணம் பாதாளம் வரை பாயும் என்று சொல்லப்பட்டிருக்கிறது. பணம் படைத்தவன் எத்தகைய இக்கட்டான சூழலையும் கடந்து வெளியே வந்து விடுவான். ஆனால், செல்வம் இல்லாதவன் அவ்வாறு கரையேற முடியாது. இந்த உலகம் செல்வம் படைத்தோருக்குத் தான் மரியாதை தரும். ஆகவே, செல்வத்தைச் சம்பாதிப்பது இன்றியமையாதது என்பது இங்கு உணர்த்தப்படுகிறது. ஒருவனுக்குக் கல்வியைவிட வேறு துணை எதுவும் இல்லை என்று கூறப்பட்டது. கற்றோர்க்குச் சென்றவிடமெல்லாம் சிறப்பு உண்டு. கல்வி கற்காதவன் தான் பிறந்த ஊரிலே கூட வாழ்க்கை நடத்தமுடியாது. ஆகவே, கல்விதான் உண்மையான நல்துணை என்பதை அறிதல் வேண்டும். வறுமையைவிடத் துன்பம் தருவது வேறு இல்லை என்று கூறப்பட்டது. பசி வந்தால் பத்தும் பறந்து போகும் என்று கூறியிருக்கிறார்கள். அந்தப் பத்து என்பது தன்மானம், சத்தியம், உறுதி, பாசம், அன்பு என்கிற நற்குணங்களைக் குறிப்பதாகும். வறுமையுற்றவன் இந்த நல்லகுணங்களை யெல்லாம் இழந்து விடுவான் என்பது கருத்து. இதற்கு விதிவிலக்கானவர்களும் இருக்கலாம். பெரும் பாலான மனிதர்கள் வறுமை வந்தால் தளர்ச்சியடைந்து செய்யத்தகாத செயல்களைக்கூட செய்வார்கள். அதனால்தான் வறுமையை விடத் துன்பம் வேறு இல்லை என்று இப்பாடல் கூறுகிறது.

அ.பொ.

திருவின்-செல்வத்தைவிட; திறன் உடையது-வலிமையுடையது. எற்று உள்ளும்-எதனினும்.

புகைவித்தாப் பொங்கழல் தோன்றும்; சிறந்த
நகைவித்தாத் தோன்றும் உவகை; பகைஒருவன்
முன்னம்வித்து ஆகமுளைக்கும்; முளைத்தபின்
இன்னாவித் தாகி விடும். *31*

விளக்கவுரை

புகை காரணமாக எரிநெருப்புத் தோன்றும். முகமலர்ச்சி காரணமாக மகிழ்ச்சித் தோன்றும். பகைமையானது ஒருவனது குறிப்புச் சொற்களால் முளைக்கும். அவ்வாறு முளைத்த பகை, துன்பத்திற்கு அடிப்படையாகி விடுகிறது. இப்பொருளில் இப்பாடல் அமைந்துள்ளது.

புகையிருக்கும் இடத்தில் நெருப்பு இருக்கும் என்று கூறப்பட்டது. நெருப்பில்லாமல் புகையுமா? என்ற வழக்கை இங்கே நினைவு கொள்ள வேண்டும். முகமலர்ச்சி என்பது பிறரை மகிழவைப்பதாகும். விருந்தினர்கள் வரும்போது முகமலர்ச்சியுடன் வரவேற்க வேண்டும். அப்படியில்லாமல் முகம் மாறுபட்டால் உறவினர் களும் வாடிவிடுவார்கள். வீடு தேடி வந்த விருந்தினரை உபசரிக்காதவன் மனிதப் பிறவி எடுத்தும் விலங்கு போன்ற வன்தான். இந்த உலகத்தில் உண்மை என்ற ஒன்று இருக்குமானால் ஒரு மனிதனைச் சிறிது நேரமாவது மகிழவைப்பதே ஆகும். மற்ற அனைத்தும் பொய்யே ஆகும். பிறருக்கு நன்மை செய்வதன் மூலம் தனக்கு நன்மையைப் பெறமுடியும். இந்த உண்மையை அறியாமல் மக்கள் துன்பம் என்ற இருளில் தடுமாறிக் கொண்டிருக் கிறார்கள். கர்ணன் பிறருக்குக் கொடுப்பதில் மகிழ்ச்சி அடைந்தான். தருமன் எதிரிகளிடமும் இரக்கம் காட்டி மகிழ்ந்தான். பல பக்தர்கள் சேவையில் மகிழ்ச்சியடைந் தார்கள். ஆகவே, முகமலர்ச்சியுடன் நாம் இருப்பதோடு மற்றவர்களையும் மகிழ வைக்க வேண்டும் என்பது கருத்து. பகைமையானது குறிப்புச் சொற்களால் முளைக்கும் என்று கூறப்பட்டது. பாண்டவர்கள் வனவாசம் முடித்துப் பாதி இராஜ்ஜியத்தைக் கேட்க ஒரு புரோகிதரைத் தூது அனுப்பி னார்கள். அப்போது துரியோதனின் தந்தை திருதராட்டினன் தன் அமைச்சனான சஞ்சயன் என்பவனைப் பாண்டவர் களிடம் தூது அனுப்பினான். போரில் ஈடுபட்டு நாட்டைப்

பெறுவதைவிட காட்டில் தவம் செய்வது மேலானது என்று சஞ்சயன் கூறினான். இதுதான் பகைமை அடங்கிய குறிப்புச் சொல். பாதி இராஜ்ஜியத்தை பாண்டவர்க்குதர திருதராட்டினன் விரும்பவில்லை என்ற குறிப்புச் சொல் அது இந்த அதர்மக் குறிப்புச் சொல்லே கௌரவர்களுக்குத் துன்பம் கொடுத்து அழித்தது என்பது கருத்து.

அ.பொ.

புகைவித்துஆ-புகை காரணமாக பொங்கு அழல். முளைத்த பின்-பகைமை வெளிப்பட்டபின். இன்னாவித்து ஆகிவிடும்-அது துன்பத்துக்கு அடிப்படை ஆகிவிடும்.

பிணிஅன்னர் பின்நோக்காப் பெண்டிர்; உலகிற்கு
அணிஅன்னர் அன்புடை மாக்கள்; பிணிபயிரின்
புல்அன்னர் புல்லறிவின் ஆடவர்; கல்அன்னர்
வல்என்ற நெஞ்சத் தவர். 32

விளக்கவுரை

பின்வருவதை நினைக்காத பெண்கள் கணவனுக்கு நோய் போன்றவர். எல்லா உயிர்களிடமும் அன்புள்ளவர் உலகிற்கு ஆபரணம் போன்றவர். அற்பத்தனமான அறிவுள்ள ஆண்கள் பயிரின் நடுவே முளைக்கும் களை போன்றவர். வன்மையான நெஞ்சம் கொண்டவர்கள் கல்லைப் போன்றவர்கள். இப்பொருளில் இப்பாடல் உள்ளது.

பின்னால் வரப் போவதை அறியாமல் குணம் இழந்து நடக்கும் பெண்கள் கணவனுக்கு நோய் போன்றவர்கள். அத்தகைய பெண்களால் கணவன் மகிழ்ச்சியாக வாழ முடியாது. மனதை ஒரு நிலைப்படுத்திச் செல்வத்தை ஈட்ட முடியாது. செல்வம் இல்லையென்றால் அவமானமும், அலட்சியமும் வரும். ஆகவே, குணமில்லாத பெண்கள் இத்தகைய துன்பங்கள் வரப்போவதை நினைக்காத பெண்கள் என்று கூறப்பட்டது. உடனிருந்தே கொல்லும் நோய் போலக் கணவனுடன் இருந்து கொண்டே துன்பம் என்ற நோயைத் தருபவர்கள் என்பது பொருளாகும். எல்லா உயிர்களிடமும் அன்பு கொண்டவர்கள் இந்த உலகத்திற்கு அணிகலன்

போன்றவர் என்று கூறப்பட்டது. எல்லா உயிர்களிடமும் இறைவன் இருக்கிறான். ஆனால், அதுவெளிப்படும் அளவைப் பொறுத்தே நல்லவன், கெட்டவன் என்ற வேறுபாடு வருகிறது. ஞானிகளும், மகான்களும், சான்றோர்களும் எல்லா உயிர்களிடமும் சமமான அன்பு காட்டுவார்கள். ஏனெனில் எல்லா உயிர்களிலும் இறைவன் உறைகிறான் என்பதை அவர்கள் தெளிவாகக் காண்கிறார்கள். ஆகவே, அத்தகையவர்கள் உலகிற்கு ஆபரணம் போன்றவர்கள் என்று கூறப்பட்டது. பிறரை இழிவுபடுத்துபவர்கள், பிறர் மனங்களைப் புண்படுத்துபவர்கள், சுயநலக்காரர்கள், வஞ்சக நெஞ்சம் கொண்டவர்கள் ஆகிய அனைவருமே இந்த உலகின் அவமானச் சின்னங்களே ஆகும். ஆனால், அவர்களுக்குள்ளும் இறைவன் இருப்பது உண்மைதான். ஆனால், அந்தத் தெய்வத் தன்மை முற்றிலும் மறைக்கப்பட்டிருக்கிறது. இந்தத் திரையை அகற்றவே எல்லோரிடமும் அன்பு காட்டும் மகான்கள் இறைவனின் கருணையால் இந்தப் பூமிக்கு வருகிறார்கள். அவர்களே உலகிற்கு ஆபரணம், அழகு என்று நான்மணிக்கடிகை கூறுவது இந்த அடிப்படையில்தான்.

அ.பொ.

பின்நோக்கா-பின்வருவதை எண்ணாத. புல்அறிவின்-அற்பத்தனமான அறிவுள்ள. கல்அன்னர்-கல்லை ஒத்தவர்கள்.

அந்தணரின் நல்ல பிறப்பில்லை; என்செயினும்
தாயின் சிறந்த தமர்இல்லை; யாதும்
வளமையோடு ஒக்கும் வனப்பில்லை; எண்ணின்
இளமையோடு ஒப்பதூஉம் இல். 33

விளக்கவுரை

அறநெறியில் நடப்போரைப் போன்ற உயர்ந்த பிறப்பு இல்லை. என்ன துன்பத்தைச் செய்தாலும் தாயைக் காட்டிலும் உயர்ந்த உறவினர் இல்லை. செல்வம் பெற்றிருப்பது போன்ற வனப்பு வேறுஎதுவுமில்லை. இளமைப் பருவத்திற்குச் சமமானது வேறு ஒன்று இல்லை. இப்பொருளில் இப்பாடல் உள்ளது. அறநெறியில் நடப்போரைப் போன்ற உயர்ந்த

பிறப்பு எதுவும் இல்லை. தருமநெறியில் நடப்பவர்களை இந்த உலகம் தெய்வமாக எண்ணி வணங்கும். இதைவிடச் சிறப்பு மனிதனுக்கு வேறு இருக்க முடியுமா? கோடி, கோடியாகப் பணம் வைத்திப்பவனை இந்த உலகம் மதிக்கிறதா? மோசக் காரன், கொலைகாரன் என்றே ஏசுகிறது. ஆகவே, நேர்வழி யில் வாழ்க்கை நடத்துவதைப் போன்ற ஒரு பிறவி எதுவும் இல்லை என்று கூறப்பட்டது. எவ்வளவு துன்பம் செய்தாலும் தாயைப்போல் சிறந்த உறவு வேறு இல்லை என்று கூறப் பட்டது. அவன் செய்யும் கண்டிப்பு. துன்பம் போல் இருந் தாலும் அது நன்மைக்காகவே இருக்கும். பெற்ற பிள்ளைக் காக ஒரு தாய் எதையும் தியாகம் செய்வாள். ஆனால், மற்ற உறவுகள் அப்படி இருக்காது. எந்த நிலையிலும் பிள்ளையைக் கைவிடாதவள் தாய் ஒருத்தியே. பணம் இருந்தாலும், இல்லா விட்டாலும், பாசத்தைப் பொழிபவள் தாய் ஒருத்தியே. குற்றவாளி என்று உலகமே ஒரு மனிதனைத் தூற்றினாலும் என் பிள்ளை அப்படிப்பட்டவன் இல்லை என்று பரிவு காட்டுபவள் தாய் ஒருத்தியே. ஆகவே தாயைப் போல் உறவு வேறு இல்லை என்று இப்பாடல் கூறுகிறது. அந்தத் தாயைப் பிள்ளைகள் தெய்வமாகப் போற்றிக் காக்க வேண்டும் என்ற கருத்தும் இதில் உள்ளடங்கி உள்ளது. செல்வத்தைப் போல் பொலிவு தருவது எதுவும் இல்லை. செல்வம் உள்ளவன் முகப் பொலிவுடன் எப்போதும் காணப்படுவான். செல்வம் இல்லாதவன் இளைஞனாக இருந்தாலும் முகத்தில் பொலிவு இருக்காது. ஆகவே, வனப்புத் தருவது செல்வம் என்று கூறப் பட்டது. இளமைப் பருவம்தான் இனிமையானது. முதுமை என்பது நரகம் போன்றது; நோயும், புலம்பலும் முதுமையிலே வரும். ஆகவே, இளமைப் பருவத்திற்கு ஈடு இல்லை என்று கூறப்பட்டது.

அ.பொ.

அந்தணரின்-அறநெறியில் நடப்போரின். என்செயினும்-என்ன துன்பத்தைச் செய்தாலும். ஒப்பதூஉம்-இளமைப் பருவத்திற்குச் சமமானது. இல்-இல்லை.

இரும்பின் இரும்பு இடை போழ்ப; பெருஞ்சிறப்பின்
நீர்உண்டார் நீரால்வாய் பூசிப; தேரின்
அரிய அரியவற்றால் கொள்வ; பெரிய
பெரியரான் எய்தப் படும். 34

விளக்கவுரை

இரும்பால் செய்த ஆயுதங்களால் இரும்பை வெட்டித் துண்டு போடுவார்கள். நீர் உணவை உண்டவர்கள் நீராலேயே வாயைக் கழுவுவார்கள். செய்வதற்கு அரிய காரியங்களைச் சிறந்த முயற்சிகளால் முடித்துக் கொள்வார்கள். பெரிய நன்மைகள் பெரியோரின் உதவியால் கிடைக்கும். இப்பொருளில் இப் பாடல் உள்ளது. இரும்பை இரும்பைக் கொண்டே வெட்டித் துண்டு செய்வார்கள். நீர் உணவை உண்டவர்கள் நீரினாலேயே வாயைக் கழுவுவார்கள் என்பது நமக்குத் தெரியும். நான்மணிக் கடிகை நீர் உணவைக் குறிப்பிட்டுச் சொல்வது. எதை விதைக் கிறமோ அதையே அறுவடை செய்யவேண்டும் என்ற நீதியைக் கூறுவதாக இருக்கலாம். செய்வதற்கு அருமையான காரியங் களை முயற்சியாளர்கள் முடித்து விடுவார்கள். பெரிய நன்மைகள் பெரியோரின் உதவியால் கிடைக்கும் என்று கூறப் பட்டது. பகீரதன் தன் முன்னோர்களைச் சாபத்திலிருந்து விடுவிக்க கடுமையாக முயற்சி செய்தும், தவம் இருந்தும் வெற்றி கண்டான். அதனால்தான் பகீரதப் பிரயத்தனம் என்ற வார்த்தை வந்தது. தெய்வ வடிவான கிருஷ்ணர் பாண்ட வர்கள் பக்கம் நின்று பெரிய நன்மைகளைச் செய்தார். ஸ்ரீகிருஷ்ணரிடம் உதவி கேட்கத் துரியோதனனும், அருச்சுன னும் ஒரேநாளில் அவரிடம் சென்றார்கள். இலட்சக்கணக்கான சேனைகளைக் கிருஷ்ணரிடம் பெற்றுக் கொண்டு மகிழ்ச்சி யாகத் திரும்பினான் துரியோதனன். ஆனால், நீங்கள் ஒருவர் மட்டும் எங்கள்பக்கம் இருந்தால்போதும் என்று அருச்சுனன் கூறினான். அந்த ஒருவரே கௌரவர் சேனைக்கு அழிவாக விளங்கினார். தருமத்தை நிலை நிறுத்த பல உபாயங்களைச் செய்து பாண்டவர்களுக்கு மிகப் பெரிய நன்மைகளைச் செய்தார். பெரிய நன்மைகள் பெரியோரின் உதவியால் கிடைக்கும் என்று இப்பாடல் கூறுவது இந்த அடிப்படை யில்தான்.

அ.பொ.

இடை போழ்ப-குறுக்கே வெட்டித் துண்டு போடுவர். வாய்பூசிப-வாயைக் கழுவுவார்கள். பெரியரான்-பெரியோர்களின் உதவியால்.

மறக்களி மன்னர்முன் தோன்றும்; சிறந்த
அறக்களி இல்லாதார்க்கு ஈயுமுன் தோன்றும்;
வியக்களி நல்கூர்ந்தார் மேற்றாம்; கயக்களி
ஊரில் பிளிற்றி விடும். 35

விளக்கவுரை

வீரத்தால் மகிழ்தல் என்பது அரசனைக் காணும்போது தோன்றும். வீரர்களிடம் இருக்கும் கொடைத் தன்மை அதனால் உண்டாகும் ஆனந்தம். வறியோர்க்குக் கொடுப்பதால் உண்டாகும். வியப்படைவதாகிய களிப்பு, ஒன்றைப் பெறும் போது வறியோரிடம் உண்டாகும். கீழ்மகளிடம் உண்டாகும் மகிழ்ச்சி பலரும் அறியும்படி ஆரவாரம் செய்து விடும். இப் பொருளில் இப்பாடல் அமைந்துள்ளது.

அரசன் என்பவன் வீரத்தின் வடிவம். ஆகவே, அவனைப் பார்க்கும்போது வீரமகிழ்ச்சி ஏற்படும் என்பது கருத்து. வறுமையில் இருப்பவர்களுக்குக் கொடை வழங்குவது ஆனந்தத்தைத் தரும். நல்ல பண்பும், வீரமும் உள்ள கொடை யாளிகள் மற்றவர்களின் துன்பம் நீங்கும் போது மகிழ்ச்சி கொள்வார்கள். கீழ்மக்கள் தான் மற்றவர்களின் துன்பத்தைக் கண்டு மகிழ்பவர்கள் என்பது உட்பொருளாகும். எதிர்பாரா மல் செல்வம் கிடைக்கும்போது அந்த வறியவர்கள் வியப் படைவார்கள்; ஆனந்தமும் அடைவார்கள். கொடுப்பவர் களுக்கும் ஆனந்தம். பெறுபவர்களுக்கும் ஆனந்தம் கொடை யில்தான் உள்ளது என்பதை உணர்த்தும் பாடல் இது.

கீழ்மகனிடம் உண்டாகும் மகிழ்ச்சி என்பது பலரும் அறியும்படி ஆரவாரம் செய்யும் என்று கூறப்பட்டது. கீழ்மகன் தீமைகளைக் கண்டுதான் மகிழ்வான். பாண்டவர்கள் காட்டில் இருந்தபோது அவர்கள் படும் துன்பத்தைக் காணத் துரியோ தனன் பரிவாரங்களுடன் சென்றான். இதுதான் கீழான புத்தி என்பது. மற்றவர்கள் துயரப்படுவதைக் கண்டு மகிழ்பவளே கீழ்மகன். அவனுக்கு அவமானமே நேரும். துரியோதனனும்

கந்தர்வர்களால் சிறைபிடிக்கப்பட்டு அவமானமே அடைந்தாள். தரும புத்திரனின் தயவால்தான் அவன் அந்தச் சமயம் விடுதலை அடைந்தான். கீழ்மக்கள் இயல்பு என்பது அற்பத்தனமாகவே இருக்கும். அந்த அற்பத்தனத்தால் அவர்களே அவமானம் அடைவார்கள் என்பது கருத்து.

அ.பொ.

மறம்களி-வீரத்தால் களித்தல். அறம்களி-மிகுந்த ஈகையால் களிப்படைதல். விளம்களி-வியப்படைதலாகிய களிப்பு.

மையால் தளிர்க்கும் மலர்க்கண்கள்; மால்இருள்
நெய்யால் தளிர்க்கும் நிமிர்சுடர்; பெய்யல்
முழங்கத் தளிர்க்கும் குருகிலை; நட்டார்
வழங்கத் தளிர்க்குமாம் மேல். *36*

விளக்கவுரை

குவளைப் பூப் போன்ற கண்கள் மையினால் அழகு பெறும். நிமிர்ந்து எரியும் விளக்கு எண்ணெயினால் தளிர்க்கும். (நன்றாக எரியும்). மேகம் மழை பொழிய முழங்கும்போது குருக்கத்தி மரத்தின் இலைகள் தளிர்க்கும். மேலோர்கள் உறவினர்க்கு வழங்கப் பொருள் கொடுப்பதால் சிறப்பு பெறுவார்கள். இப்பொருளில் இப்பாடல் உள்ளது.

மையினால் கண்கள் அழகு பெறும். எண்ணெயினால் விளக்கு நன்கு எரியும். மேக முழக்கம் குருக்கத்தி மரத்தின் இலைகளைத் தளிர்க்கச் செய்யும். அதேபோல் மேலோர் பிறருக்குக் கொடுப்பதால் சிறப்புப் பெறுவார்கள் என்று நான்மணிக்கடிகை கூறுகிறது.

ஒருவர்க்கு ஒருவர் வழங்குவதற்கும், பெறுவதற்கும் ஏற்ற சூழலில்தான் இந்த உலகம் இருக்கிறது. ஒவ்வொரு மனிதனும் வேறு ஒரு மனிதனின் உதவியைப் பெற வேண்டியிருக்கிறது. செருப்புத் தைப்பவன் உதவியால்தான் நாம் பாதுகாப்பாக காலுக்குச் செருப்பு அணிகிறோம். அதற்காக நாம் அவருக்குப் பணம் தருகிறோம். அதாவது ஒன்றைக் கொடுத்து, ஒன்றைப் பெறுவதில்தான் சிறப்பு அடங்கியிருக்கிறது. உலகத்திற்கு நம்நாடு ஆன்மீகத்தை வழங்கும் மகத்தான

தகுதியைப் பெற்றிருக்கிறது. அதேசமயம் சில தொழில் நுட்பங்களை வெளிநாடுகளிடமிருந்து நாமும் பெறவேண்டி யிருக்கிறது. நாம் அளிப்பது அழியாத ஆன்மீகம். நாம் பெறுவது அழியக்கூடிய லௌகிக தொழில்நுட்பம். ஆனாலும், இந்தக் கொடுக்கல், வாங்கலிலே தான் எல்லா மனிதர்களும் வாழ்க்கையை நடத்த முடியும். மேலோர் பிறருக்குக் கொடுப் பதால் சிறப்புப் பெறுவார்கள் என்பது இந்த அடிப்படையில் தான். தவத்தில் சிறந்த பெரியோர்கள் அதன் மகிமையைப் பிறருக்கும் அறிவித்து மற்றவர்களுக்கு வழிகாட்டுவது மாபெரும் சிறப்பு அல்லவா! தான் பெற்ற இன்பம் இந்த வையகமும் பெறவேண்டும் என்று நினைப்பவர்களே மேலோர். அத்தகைய சுயநலமின்மையை நாம் பெற்று மற்றவர் களுக்கு உதவி செய்பவர்களாக இருக்க வேண்டும் என்பது இதற்குப் பொருளாகும்.

அ.பொ.

மலர்க்கண்கள்-குவளைப் பூப் போன்ற கண்கள். நிமிர்சுடர்-நிமிர்ந்து எரியும் விளக்கு. நட்டார்-உறவினர்க்கு.

நகைஇனிது நட்டார் நடுவண்; பொருளின்
தொகை இனிது தொட்டு வழங்கின்; தகைஉடைய
பெண்இனிது பேணி வழிபடின்; பண்இனிது
பாடல் உணர்வார் அகத்து. 37

விளக்கவுரை

நண்பர்கள் நடுவில் மகிழ்ச்சி இன்பம் தரும்; எடுத்து ஏழைகளுக்குக் கொடுத்தால் செல்வம் இன்பம் பெறும் கணவனைப் பாதுகாத்து அவன் விருப்பப்படி வாழும் பெண் இன்பம் தருபவள் ஆவாள். பாட்டின் சுவையை அறிகின்றவர் களிடம் இசை இன்பம் தரும். இப்பொருளில் இப்பாடல் அமைந்துள்ளது.

நண்பர்கள் நடுவில் மகிழ்ச்சி இன்பம் தரும் என்று கூறப்பட்டது. அதாவது நண்பர்கள் ஒன்றுகூடிப் பேசும்போது அறிவு சம்பந்தமான மகிழ்ச்சி ஏற்படும். ஒருவர் அறியாத விஷயங்களை மற்றொருவர் பகிர்ந்து கொள்வதால் மகிழ்ச்சி ஏற்படும் என்பது கருத்தாகும். கணவனைப் பாதுகாத்து அவன்

சொல்கிறபடி நடக்கும் பெண் இன்பம் தருவாள் என்று கூறப்பட்டது. மனைவியின் குணம்தான் கணவனுக்கு இன்பம் தரக் கூடியது. வாழ்க்கைத் துணை சரியாக அமையவில்லை என்றால் வாழ்நாள் முழுவதும் துன்பம்தான். கைகேயி கணவன் சொல்படி கேட்கவில்லை. பரதன் நாடாளட்டும். இராமனை காட்டுக்குப் போகச் சொல்லாதே என்று எவ்வளவோ மன்றாடினான் தசரதன். ஆனால் கைகேயி பிடிவாதமாக இருந்தாள். இராமன் கானகம் சென்றான். தசரதன் வானுலகம் சேர்ந்தான். ஆகவே, கணவன் சொல்கிற படி கேட்டு நடக்கும் பெண்ணே இன்பம் தரக்கூடியவள் என்று கூறப்பட்டது. பாட்டின் சுவையை அறிந்தவர்கள் இசையின் இன்பத்தை அனுபவிக்க முடியும் என்று கூறப் பட்டது. பாட்டின் பொருள், அதன் நயம் ஆகியவற்றை நன்கு அறிந்தவர்கள்தான் அதனுடன் இணையும் இசையையும் அறிந்து இன்பம் அனுபவிக்க முடியும். பாட்டு ஞானம், இசை ஞானம் இல்லாதவர்கள் ஒருபோதும் அந்த இன்பத்தை நுகர முடியாது என்பது பொருளாகும்.

அ.பொ.

நட்டார் நடுவண்-நண்பர்கள் நடுவிலே. பொருளின் தொகை-செல்வத்தின் தொகுப்பு. அகத்து-அறிகின்றவர்களிடம்

கரப்பவர்க்குச் செல்சார் கவிழ்தல்; எஞ்ஞான்றும்
இரப்பவர்க்குச் செல்சார்ஒன்று ஈவார்; பரப்பு அமைந்த
தானைக்குச் செல்சார் தறுகண்மை; ஊன்உண்டல்;
செய்யாமை செல்சார் உயிர்க்கு. *38*

விளக்கவுரை

ஒன்றுமில்லை என்று பொருளை ஒழிப்பவர்க்குப் புகலிடம் கவிழ்தல். (இரப்போரைக் கண்டால் முகம் கவிழ்த லாகும்). வறுமையால் இரப்போருக்குக் கொடுப்பவரிடம் செல்வம் சேரும். (செல்வர் ஆவார்). பெரிய சேனைக்குப் புகலிடம் உறுதி. ஒருவன் உயிருக்குப் புகலிடமாக இருப்பது மாமிசம் உண்ணாமை ஆகும். இப்பொருளில் இப்பாடல் அமைந்துள்ளது.

தன்னிடம் ஒன்றுமில்லை என்று கூறுவோர் இரப்போர் முன் தலைகவிழ்வர் என்று கூறப்பட்டது. செல்வம் இருந்தும் இல்லை, இல்லை என்று கூறுவோர் தலை கவிழ்வார்கள். ஏனெனில் தாங்கள் பொய் பேசுகிறோம் என்பது அவர் களுக்குத் தெரியும். அந்த மனசாட்சியே அவர் களைத் தலை கவிழவைக்கும். வறுமையால் வாடுபவர்களுக்கு உதவி செய்பவர்களுக்குச் செல்வம் சேரும் என்று கூறப்பட்டது. இறைக்கின்ற கிணற்றில்தான் ஊற்று நீர் சுரக்கும். அதே போல் செய்ய வேண்டிய விஷயங்களுக்குச் செல்வத்தைச் செலவழிக்க, செலவழிக்க மேலும்மேலும் செல்வம் பெருகும். அதுவும் வறுமையில் வாடுபவர்களுக்குச் செல்வத்தை நாம் அளித்தால் நமக்கு இறைவன் அதைவிடப் பன்மடங்கு செல்வத்தை வழங்குவான் என்பதும் இதில் அடங்கியிருக்கிறது. பெரிய சேனைக்குப் புகலிடம் உறுதியில் தான் இருக்கிறது. எப்படியும் வெற்றி பெறுவோம் என்று உறுதி இருப்பவர்கள் நிச்சயம் வெற்றி காண்பார்கள். மனஉறுதியில்லாத கோழை களிடம் சேனாபலம் இருந்தாலும் அவர்கள் தோல்வியையே தழுவுவார்கள் என்பது பொருளாகும். ஒருவனுடைய உயிருக்குப் புகலிடமாய் இருப்பது மாமிசம் உண்ணாமை என்று கூறப்பட்டது. பிறஉயிரைக் கொன்று அதைப் புசித்தல் பாவம் என்று நீதி நூல்கள் கூறுகின்றன. அவ்வாறு மாமிசம் உண்ணாமல் இருப்பதுதான் உயிருக்கு இன்பம் என்று நான்மணிக்கடிகை கூறுகிறது. அதாவது தீவினை வராமல் பாதுகாக்க வேண்டுமானால் மாமிசம் உண்பதைத் தவிர்க்க வேண்டும் என்பது இதற்குப் பொருளாகும்.

அ.பொ.

கரப்பவர்க்கு-ஒன்று மில்லை யென்று பொருளை ஒழிப்பவர்க்கு. செல்சார்-புகலிடம். எஞ்ஞான்றும்-எந்நாளும்.

கண்டதே செய்பாவம் கம்மியர்; உண்டெனக்
கேட்டதே செய்பபுலன் ஆள்வார்; வேட்ட
இனியவே செய்ப அமைந்தார்; முனையாதார்
முன்னிய செய்யும் திரு. 39

விளக்கவுரை

கம்மாளர் தான் கண்களால் கண்டதையே செய்வார். அறிவுடையோர் பயன் உண்டு என்று பெரியோர் சொல்லக் கேட்டதையே செய்வர். நல்ல பண்புடைய பெரியோர்கள் மக்கள் விரும்பும் நல்ல செயல்களையே செய்வர். கோபத்தை விட்ட பெரியோர்கள் நினைக்கும் செயல்களை மகாலட்சுமி தாயார் முடித்து வைப்பாள். இப்பொருளில் இந்நான்மணிக் கடிகைப் பாடல் உள்ளது.

கம்மாளர் தன் கண்களால் பார்த்ததை அப்படியே உலோகங்களால் செய்யும் திறமை படைத்தவர்கள். அதே போல் அறிவுடையவர்கள், பெரியோர்கள் பயன் உண்டு என்று சொல்வதையே செய்வார்கள். பயன் இல்லாத செயல் களைச் செய்வது மனிதப் பிறவியை வீணடிப்ப தாகும். பய னுள்ள நல்ல செயல்களைச் செய்யச் செய்ய கடந்த காலத்தில் செய்யப்பட்ட தீவினைகள் அழிகின்றன. அதனால் மனிதன் புடம்போட்ட தங்கமாக மாறுவான். ஒழுக்கம், நேர்மை, தெய்வ பக்தி, தியானம், யோகம் அனைத்தும் தாமாக அவனுக்குக் கூடிவரும். பயன் இல்லாத செயல்களைச் செய்பவர்கள் பாவமூட்டையைக் கூடுதலாக்கிக் கொண்டு வருந்த நேரும் என்பது கருத்து. கோபத்தை அகற்றிய பெரி யோர்கள் நினைக்கும் காரியங்களை மகாலட்சுமி தாயார் முடித்து வைப்பாள் என்று கூறப்பட்டது. அதாவது கோபம் இல்லாத இடத்தில்தான் மகாலட்சுமி வாசம் செய்வாள். எந்தநிலையிலும் கோபம் கொள்ளாதவர்கள் தொட்ட காரியங்களிலெல்லாம் வெற்றி காண்பார்கள். அதனால் செல்வம் அவர்களிடம் பெருகும். செல்வம் வந்தால் நினைத்த காரியங்கள் அனைத்தும் எளிதில் நிறைவேறும். பணம் பாதாளம் வரை பாயும் என்று சொல்லியிருப்பது இந்த அடிப் படையில்தான். செல்வம் இருந்தால் எத்தகைய கடினமான வேலையையும் முடித்துவிட முடியும். ஆகவே, கோபத்தை நாம் அகற்ற வேண்டும். கோபம் தான் நட்பை விரோதியாக்கு கிறது. கோபம்தான் உறவினர்களைப் பகைவர்களாக்குகிறது. கோபத்தால்தான் நமக்கு வரவேண்டிய செல்வங்கள்கூட விலகிப்போகிறது. ஆகவே, கோபத்தை அகற்றி மகாலட்சுமி யின் அருளைப் பெறவேண்டும் என்பது பொருளாகும்.

அ.பொ.

கம்மியர்-கம்மாளர். புலன் ஆள்வார்-அறிவுடையோர். வேட்ட-மக்கள் விரும்பும்.

திருவும் திணைவகையான் நில்லாப்; பெருவலிக்
கூற்றமும் கூறுவசெய்து உண்ணாது; ஆற்ற
மறைக்க மறையாதாம் காமம்; முறையும்
இறைவகையான் நின்று விடும். 40

விளக்கவுரை

செல்வம் குடியின் உயர்வு தாழ்வுக்கு ஏற்ற வகையிலே நிற்காது. அதாவது சிறிதும் பெரிதுமாக நிற்க மாட்டா. மிகுந்த வலிமையுள்ள எமன் உண்ணப்படுபவன் சொல்வதைச் செய்து விட்டு உண்ணமாட்டான். அதாவது சாகப் போகிறவன் சொல்வதை யெல்லாம் செய்து முடித்து விட்டு உயிரை எடுக்க மாட்டான். அவன் விரும்பியவாறே உயிரை எடுப்பான் என்ப தாகும். காமத்தை மூடி மறைத்தாலும் மறையாது. அரசநீதி இறைவனின் தன்மைக்கேற்றபடி அமையும். இப்பொருளில் இந்நான்மணிக்கடிகைப் பாடல் அமைந்துள்ளது.

செல்வம் குடியின் உயர்வு தாழ்வுக்கு ஏற்றவகையில் நிற்காது என்று கூறப்பட்டது. உயர்குடி என்பதற்காக செல்வம் அங்கே நிலைத்து நிற்காது. தாழ்ந்தகுடி என்பதற்காக செல்வம் அங்கு வராமல் இருக்கவும் செய்யாது. செல்வம் உருண்டு சென்று கொண்டே இருக்கும். அவரவரின் கர்ம வினைகளுக் குத் தகுந்தவாறு செல்வம் வரும். உடனே விலகும் என்பது கருத்து. உயிரை எடுக்கும் எமன் சாகப்போகிறவன் சொல்வது, எண்ணுவது எல்லாம் முடியட்டும் என்று காத்திருக்க மாட்டான். விதி முடியும் நேரம் வரும்போது அவன் உயிரைக் கொண்டு போவான். சாகும் நிலையில் இருப்பவனுக்குத் தன் மகன் அல்லது மகளின் திருமணத்தை முடிக்க வேண்டும் என்ற எண்ணம் இருக்கும். அது நிறைவேறட்டும் என்று எமன் காத்திருக்கமாட்டான். அல்லது கோர்ட்டிலிருந்து சொத்து சம்பந்தமாக தீர்ப்பு வரவேண்டும் என்று சாகப் போகிறவன் எதிர்பார்ப்பான். அந்தத் தீர்ப்பு வரை எமன் காத்திருக்கமாட் டான். சாகப் போகிறவனின் பல எண்ணங்களைப் பற்றி

யெல்லாம் அவனுக்குச் சிந்தனை இருக்காது. அவன் கணக்குப் படி அவன் இஷ்டம் போலவே உயிரைப் பறித்துச் செல்வான் என்பது பொருளாகும். காமத்தை மூடி மறைத்தாலும், மறை யாது என்று கூறப்பட்டது. எப்படி மறைத்தாலும் காமத்தை முகபாவனைகளும், அணுகுமுறைகளும் காட்டிவிடும். அதை மறைக்க முடியாது. காமத்தை வென்றவர்கள்தான் இதில் வெற்றி பெறமுடியும். காமம் என்பதற்கு ஆசை என்று பொருள். பெண் மீது ஆசை, பொன் மீது ஆசை, மண் மீது ஆசை. இப்படிப் பல ஆசைகள் மனிதனுக்கு உண்டு. இவற்றில் ஆசையில்லையென்று, போலியாக மனிதன் கூறினாலும் அவன் பேச்சும், நடத்தையும் காட்டிக் கொடுத்துவிடும் என்பது கருத்து. அதேபோல அரசநீதி என்பது இறைவனின் திருவுள்ளப்படியே அமையும். அதாவது அரசனின் குணங் களுக்கு ஏற்றபடி அமையும்.

அ.பொ.

திருவும்-செல்வமும். திணைவகையான்-குடியின் உயர்வு, தாழ்வுக்கு ஏற்ற வகையில். பெருவலி கூற்றமும்-மிகுந்த வலிமையுள்ள எமனும்.

பிறக்குங்கால் பேர் எனவும் பேரா; இறக்குங்கால்
நில் எனவும் நில்லா உயிர் எனைத்தும்; நல்லாள்
உடன்படின் தானே பெருகும்; கெடும்பொழுதில்
கண்டனவும் காணா கெடும். 41

விளக்கவுரை

உயிர்கள் பிறக்கும்போது உடலை விட்டு நீங்கிப்போ என்றாலும் போகாது. இறக்கும்போது போகாதே என்று கூறினாலும் போகாமல்விடாது. மகாலட்சுமி உடன்பட்டால் செல்வம் தானாகவே பெருகும். அவள் நீங்கும்போது அதற்கு முன் காணப்பட்ட செல்வங்களும் காணாமல் மறைந்து போகும்.இப்பொருளில் இப்பாடல் உள்ளது.

உயிர்பிறக்கும்போது போஎன்றால் போகாது. இருக்கும் போது இரு என்றாலும் இருக்காது என்று கூறப்பட்டது. அதாவது உயிர் எப்போது பிறக்கும்? எப்போது இறக்கும்? என்பதெல்லாம் இறைவனின் திருவருளின்படியே நடக்கிறது.

மனிதனின் இஷ்டம் போல் இவை நடப்பதில்லை. ஆனால், இதற்கு விதிவிலக்கான வர்களும் உண்டு. பீஷ்மர் அம்புப் படுக்கையில் இருந்தபோது உத்திராயனம் வரும்வரை உயிரைவிடாமல் இருந்தார். தந்தையின் பொருட்டு இல் வாழ்க்கை, அரச பதவி ஆகியவற்றை அவர் தியாகம் செய்த தால் எமன்கூட அவரின் விருப்பப்படி நடந்து கொண்டான் என்று மகாபாரதம் கூறுகிறது. இது எல்லோருக்கும் பொருந் தாது. அப்படிப் பட்ட தியாகம் செய்பவர்கள் இந்தப் பூமியில் காண்பது அரிதிலும் அரிது அவரவரின் கர்ம வினைகளுக் குத் தகுந்தவாறு ஜனனம், மரணம் நிகழ்ந்து கொண்டிருக் கிறது. மனிதனின் விருப்பப்படி இவை நடப்பதில்லை என்பது பொருளாகும். அதே போல் மகாலட்சுமி எப்போது வருவாள்? எப்போது நீங்கு வாள்? என்பதையும் நாம் அறிய முடியாது. அரிச்சந்திரன் தருமபுத்திரன் ஆகியோர் தருமத்திற் குக் கட்டுப் பட்டு ஆட்சி செய்தபோதும் அவர்களை விட்டுச் செல்வம் நீங்கிப் பெரும் துன்பத்தை அடைந்தார்கள். அதன் பிறகு ஒரு காலகட்டத் தில் திரும்பவும் செல்வத்தையும், இராஜ்ஜியத்தையும் பெற்றார்கள். கர்மவினைகளின் கணக்கு எப்படி பயன் தரும்? என்பது இறைவனின் திருவுளமாக இருக் கிறது. ஆகவே, மகாலட்சுமியின் திருவுளப்படியே செல்வம் வருவதும், போவதும் அமையும் என்று நான்மணிக்கடிகை கூறுகிறது.

அ.பொ.

பேர் எனவும்-உடலை விட்டு நீங்கிப்போ என்றாலும். நில் எனவும் நில்லா-போகாதே நில் என்றாலும் நிற்காது (உயிர்). காணாக் கெடும்-காணப்படாமல் மறைந்து போகும்.

போர்இன்றி வாடும் பொருநர்சீர்; கீழ்வீழ்ந்த
வேர்இன்றி வாடும் மரம்எல்லாம்; நீர்பாய்
மடையின்றி நீள்நெய்தல் வாடும்; படையின்றி
மன்னர்சீர் வாடி விடும். *42*

விளக்கவுரை

போர் வீரரின் பெருமை சண்டையில்லாவிடில் குறைந்து விடும். எல்லா மரங்களும் கீழே ஆழமாக இறங்கிய வேர்

இல்லாவிட்டால் பட்டுப்போகும். நீளமான நெய்தல் மலர்கள் நீர் இல்லாவிட்டால் வாடிவிடும். அரசனின் செல்வம் போது மான சேனை இல்லாவிட்டால் மறைந்து போகும். இப் பொருளில் இப்பாடல் உள்ளது.

சண்டையில்லாவிட்டால் போர் வீரரின் பெருமை குறையும் என்று சொல்லப்பட்டது. ஒரு மனிதனுக்கு எதில் திறமை இருக்கிறதோ அதைச் செய்து கொண்டே இருக்க வேண்டும். அப்படிச் செய்வதை நிறுத்தினால் அந்த ஆற்றலின் பெருமை குறைந்து போகும். ஒரு முறை நாரதர் சிவபெருமா னைத் தரிசிக்க கயிலாயம் சென்றார். மகாதேவர் பூலோக மக்கள் பாவச் செயல்களைச் செய்கிறார்கள். பெரியோர்களை மதிப்பதில்லை. பெற்றோர்களைக் காப்பாற்றுவதில்லை. பொய், பித்தலாட்டம் பெருகி விட்டது என்று கூறினார். அதைக் கேட்ட சிவபெருமான் கோபம் கொண்டு 12 வருடங் களுக்கு நான் சங்கை எடுத்து ஊதமாட்டேன் என்று கூறினார். சிவபெருமான் சங்கை முழக்கம் செய்தால்தான் மழை பொழியும் என்பது ஐதீகம். இந்தச் செய்தி எல்லா உலகங் களிலும் பரவியது. பூலோக மக்கள் ஏர்த் தொழிலைக் கைவிட்டு வீட்டில் முடங்கிக் கிடந்தார்கள். அப்போது ஒரே ஒரு விவசாயி மட்டும் தன் நிலத்தை உழுது கொண்டிருந்தான். அதைக் கவனித்த நாரதர் அவனிடம் சென்று சிவபெருமான் செய்த சபதத்தை நீ அறியவில்லையா? வீணாக ஏன் உழுது கொண் டிருக்கிறாய்? என்று கேட்டார். அதற்கு அந்த விவசாயி சிபெருமான் சபதம் செய்தது எனக்குத் தெரியும். 12 வருடங் களுக்கு ஏர் உழுவதை நான் விட்டுவிட்டால் இந்தத் தொழிலே எனக்கு மறந்துபோகும். அதனால் உழுகின்றேன் என்று அவன் சொன்னான். நாரதருக்கு என்ன செய்வது என்றே விளங்கவில்லை. கயிலாயம் சென்று அந்த விவசாயி கூறியதைச் சிவபெருமானிடம் கூறினார். அதைக்கேட்ட சிவபெருமான் அவன் கூறியது உண்மைதான். நான் 12 வருடங்களுக்குச் சங்கு ஊதவில்லை என்றால் எனக்கும் கூட, அந்தத் தொழில் மறந்து போகும். ஆகவே, இப்போதே சங்கை எடுத்து ஊதி விடுகிறேன் என்று கூறி ஊதினார். மழை பொழிந்தது. எல்லோருக்கும் அது நன்மையாக முடிந்தது. ஆகவே, செயலே பெருமை. அது எந்தத் துறையாக இருந் தாலும் இந்தவிதி பொருந்தும். மரங்கள் வேர் இல்லா

விட்டால் பட்டுப்போகும். அரசனுக்குச் சேனை இல்லா விட்டால் செல்வம் மறையும். நெய்தல் மலர் நீர் இல்லா விட்டால் வாடிவிடும். ஆகவே, பெருமைக்குரிய விஷயங்கள் இல்லாவிடில் எல்லாம்கெடும் என்பது கருத்து.

அ.பொ.

பொருநர்சீர்-போர் வீரனின் பெருமை போர்இன்றி. நீள்நெய்தல்-நீளமான நெய்தல் மலர்கள்.

ஏதிலார் என்பார் இயல்புஇல்லார்; யார்யார்க்கும்
காதலார் என்பார் தகவுடையார்; மேதக்க
தந்தை எனப்படுவான் தன்உவாத்தி; தாய் என்பாள்
முந்துதான் செய்தவினை. 43

விளக்கவுரை

அயலார்கள் என்று சொல்லப்படுபவர்கள் நல்ல குணங்கள் இல்லாதவர் ஆகும். எல்லோருக்கும் அன்புள்ள வர்கள் நல்ல குணமுடையவர்கள். தந்தை என்று சொல்லப் படுபவன் ஆசிரியன் என்ற அந்தஸ்தைப் பெற்றவன். தாய் என்பவள் முன் செய்த நல்வினையே ஆகும். இப்பொருளில் இப்பாடல் உள்ளது.

அயலார்கள் என்று சொல்லப்படுபவர்கள் நல்ல குணங்கள் இல்லாதவர்கள் என்று நான்மணிக் கடிகை கூறுகிறது. அதாவது நல்ல குணங்கள் உள்ள எல்லா மனிதரும் நமக்கு உறவினர்களே என்பது பொருளாகும். தசரதச் சக்கரவர்தியின் திருமகனான இராமன் வேடர் குலத்துக் குகனைச் சகோதரனாகப் பாவித்து நால்வரோடு ஐவர் ஆனோம் என்று கூறினார். ஏன் அப்படிக் கூறினார்? குகனின் உண்மை யான அன்பும், நல்ல குணங்களையும் கண்டுதான் அவ்வாறு சொன்னார். அதேபோல் நம்முடன் வாழும் மக்களில் நல்ல பண்பும், உயர் குணமும், சுயநலமில்லாத உத்தமர்களும் நமக்கு உறவினர்களே என்று அடையாளம் காணவேண்டும் என்பது கருத்தாகும். எல்லோரும் அன்புள்ள வர்கள் நல்ல குணமுடையவர்கள் என்று இப்பாடல் கூறுகிறது. அதாவது எல்லோரும் தூய்மையுடையவர்களே. ஆனால், மாயை காரணமாக முரண்பாடான குணங்கள் இருப்பது

போல் தோன்றுகின்றன. அவை மறைந்தே ஆகவேண்டும். மனிதர்களின் உண்மையான சுபாவம் அன்பும், நல்ல குணங் களுமே ஆகும் என்பது உண்மைத் தத்துவமாகும். தந்தை என்பவன் ஆசிரியன் என்ற அந்தஸ்தைப் பெற்றவன் என்று கூறப்பட்டது. அதாவது தந்தை தன் மகனை அவையில் முதல் வனாக இருக் கும்படி செய்யப்பட வேண்டும். அதற்காக நுட்பமான அறிவும், ஆற்றலும் அவனுக்கு இருக்க வேண்டும். அதனால்தான் தந்தை சொல்மிக்க மந்திரமில்லை என்று கூறப்பட்டிருக்கிறது. இந்த வாக்குக்கு ஏற்றபடி தந்தை தகுதி யும் அந்தஸ்தும் பெற்றிருக்க வேண்டும் என்பது கருத்து. தாய் என்பவள் முன் செய்த நல்வினையே ஆகும். தாய்தான் பிள்ளைகளின் குறைகளைப் பொருட்படுத்தாமல் உண்மை யான அன்பைச் செலுத்துபவள். ஒரு மனிதனின் நல்வினைப் பயனே தியாகத்தாய் கிடைப்பது. தலைசிறந்ததாய் ஒருவனுக்கு, கிடைக்கிறாள் என்றால் அவள் அதிக நல்வினை செய்தவள் என்று அடையாளம் காண முடியும் என்பதும் பொருளாகும்.

அ.பொ.

ஏதிலார் இல்லார்-அயலார் என்று எண்ணப்படுகிறவர்கள். காதலார் என்பார்-அன்புள்ளவர்கள் என்பவர்கள். தகவு உடையார்- நல்ல குணமுள்ளவர்கள்.

பொறிகெடும் நாண்அற்ற போழ்தே; நெறிபட்ட
ஐவரால் தானே வினைகெடும்; பொய்யா
நலம்கெடும் நீர்அற்ற பைம்கூழ்; நலமாறின்
நண்பினார் நண்பு கெடும். 44

விளக்கவுரை

ஒருவனின் நாணம் மறையும்போது செல்வமும் மறையும். தன் வசப்பட்ட ஐம்புலன்களினால் தீவினை அழியும். தண்ணீர் இல்லாவிட்டால் பயிர் வாடும். நட்பின் தன்மை மாறினால் நண்பர்களின் நட்புக் கெடும். இப்பொருளில் இப் பாடல் அமைந்துள்ளது.

ஒருவனின் நாணம் மறையும்போது செல்வமும் மறையும் என்று கூறப்பட்டது. பழிவரும் செயல்களைச் செய்ய நாணம் கொள்ளவேண்டும். தன்னை மதிக்காத

வர்களைச் சந்தித்து உதவி கேட்பது மானம் இழந்த செயல் ஆகும். ஆகவே, அங்கு நாணம்வேண்டும். தீமைசெய்ய நாணம் கொள்ள வேண்டும். சுயநலம் பேயாக அலைவதற்கு நாணம் கொள்ள வேண்டும். பெரியோரை, பெற்றோரை அவமதிப் பதற்கு நாணம் கொள்ளவேண்டும். இப்படி மனிதன் நாணப் பட வேண்டிய பல விஷயங்கள் இருக்கின்றன. இந்த விஷயங் களுக்கு நாணம் கொள்ளாமல் மனம் போனபோக்கில் ஒரு வன்செயல்பட்டால் செல்வம் மறைந்து பலரின் அவமதிப்புக்கு அவன் ஆளாவான் என்பது கருத்து. ஐம்புலன்களை ஒருவன் தன்வசப்படுத்திக் கொண்டால் தீவினைகள் அழியும் என்று கூறப்பட்டது. ஐம்புலன்கள் என்பவை எல்லையை மீறிச் செல்லும் குதிரைகள் போன்றவை. விவேகம் என்னும் கடிவாளம் கொண்டு இந்தக் குதிரைகளைக் கட்டுப்படுத்த முடியும். பெண் மோகம் கொண்டு மனம் அலைகிறது. அதை கட்டுப்படுத்த வேண்டும். பிறர் செல்வங்களை வஞ்சித்துக் கொள்ளையடிக்க மனம் ஆவல் கொள்கிறது. அங்கும் விவேகம் என்னும் கடிவாளத்தால் மனத்தை நிறுத்தி நேர்வழியில் செல்வம் திரட்ட முயலவேண்டும். கொடிய வார்த்தைகளால் பேசி நல்லவர்கள் மனம் புண்படும்படி செய்கிறது வாய். அதனையும் அடக்க வேண்டும். இறைவனின் புகழ் மொழி களைக் கேட்பதற்குப் பதிலாக தகுதியற்ற சொற்களைக் கேட்க செவி ஆவல் கொள்கிறது. அதையும் அடக்க வேண்டும். மெய்யாகிய தலை தகுதியற்றவர்களுக்குத் தலை வணங்காமல் இறைவன் ஒருவனுக்கே தலை வணங்க வேண்டும். இவ்வாறு ஐம்புலன் களையும் கட்டுப்படுத்தினால் எல்லாத் தீவினை களும் மறையும் என்பது கருத்து. தண்ணீர் இல்லாவிடில் பயிர் வாடும். நட்பின் தன்மை மாறினால் நட்புக் கெடும் என்று கூறப்பட்டது. தகுந்தநேரத்தில் பயிருக்கு நீர்பாய்ச்சவேண்டும். நட்புக்குப் பாதகம் வராதபடி எப்போதும் விழிப்புடன் இருக்க வேண்டும்.

அ.பொ.

நாண் அற்ற போழ்தே-ஒருவனுக்கு நாணம் நீங்கினபோது. ஐவரால்-ஐம்பொறிகளால். தானே வினைகெடும்-தானாகவே தீவினை அழியும். நலம் மாறின்-நட்பின் தன்மை மாறினால்.

நன்றிசாம் நன்றுஅறியா தார்முன்னார்ச்; சென்ற
விருந்தும் விருப்பிலார் முன்சாம்; அரும்புணர்ப்பின்
பாடல்சாம் பண்அறியா தார்முன்னர்; ஊடல்சாம்
ஊடல் உணரரார் அகத்து. 45

விளக்கவுரை

நன்மையின் தன்மையை அறியாதவர் முன்பு செய்த நன்றி கெட்டு விடும். அன்பில்லாதவரிடம் செல்லும் விருந்தினர் வருத்தம் அடைவர். இசையை அறியாதவரிடத்தில் சிறந்த இசையமைத்த பாடல் கெட்டு விடும். ஊடலால் வரும் இன்பத்தை அறியாத கணவரிடம் ஊடல் கொள்வதால் பயன் இல்லை. அந்த ஊடல் வீணாகும் என்பது கருத்து. இப்பொரு ளில் இப்பாடல் உள்ளது.

நன்மையின் தன்மையை அறியாதவர் முன்பு நன்றி கெட்டு விடும் என்று கூறப்பட்டது. அதாவது தீயவர்களுக்கு நாம் நன்மை செய்தாலும் அந்த உயர் தன்மையை அவர்கள் அறியமாட்டார்கள். நன்றி மறந்த தீயவர்களாகவே அவர்கள் இருப்பார்கள் என்பது இதற்கு அர்த்தமாகும். அன்பில்லாத வர்கள் வீட்டுக்கு விருந்தினர்களாகச் செல்பவர்கள் வருத்தம் அடைவார்கள் என்று கூறப்பட்டது. அன்பில்லாதவர்கள் மனிதர்களில் கடைப்பட்டவர்கள். விருந்தோம்பல் பண்பு அறியாதவர்கள். ஆகவே, அத்தகைய தீயவர்கள் வீட்டுக்குச் செல்லக்கூடாது என்பது பொருளாகும். சமாதானத் தூது வந்த கிருஷ்ணர் சபையில் பேசிக் கொண்டிருந்தார். அப்போது நண்பகல் (சாப்பாட்டு வேளை) வந்தது. துரியோதனன் தன் வீட்டுக்கு சாப்பிட வரும்படி கிருஷ்ணரை அழைத்தான். ஆனால், கிருஷ்ணர் அதற்குச் சம்மதிக்கவில்லை. தூதர்கள் காரியம் முடியாமல் சம்பந்தப் பட்டவர்கள் வீட்டில் உணவு அருந்தக்கூடாது என்று கூறி விட்டு உண்மை அன்புள்ள விதுரர் வீட்டில் எளிய உணவை ஏற்றுக் கொண்டார். துரியோதனன் உண்மையான அன்பு இல்லாதவன் என்று அறிந்தே கிருஷ்ணர் அவனைப் புறக் கணித்தார். ஆகவே, யார் அன்புள்ளவர்கள் என்பதை நாம் அறிவாற்றலால் அறியமுடியும். அன்பில்லாதவர்கள் வீட்டுக்கு விருந்தினராகச் செல்லவே கூடாது. அப்படி மீறிச் சென்றால் அவமானமும்,

வருத்தமும்தான் வரும் என்பது கருத்து. இசைஞானம் இல்லாதவர்களால் பாடல் கெடும். ஊடல் இன்பத்தை அறியாத கணவனிடம் ஊடல் கொள்வது வீணாகும் என்று கூறப்பட்டது. இசைஞானம் இல்லாதவர் களிடம் பாடலை ஒப்படைக்கக்கூடாது. ஊடலால் வரும் இன்பத்தை அறியாத கணவனிடம் ஊடல் கொள்வதை மனைவி தவிர்க்க வேண்டும் என்பது இதன் மூலம் உணர்த்தப் பெறுகிறது.

அ.பொ.

விருப்பு இலார்முன்-அன்பில்லாதவரிடம். அரும்புணர்ப்பின்-சிறந்த இசையமைத்திருக்கும். பாடல்சாம்-பாடல் கெடும். ஊடல் உணரார் அகத்து-ஊடலினால் தரும் இன்பத்தை அறியாத கணவரிடம்.

நாற்றம் உரைக்கும் மலர்உண்மை; கூறிய
மாற்றம் உரைக்கும் வினைநலம்; தூக்கின்
அகம்பொதிந்த தீமை மனம் உரைக்கும்; முன்னம்
முகம்போல முன்உரைப்பது இல். 46

விளக்கவுரை

மலர் உண்டு என்பதை அதன் மணமே சொல்லிவிடும். ஒருவன் காரியத்தை அவன் கூறும் சொற்களே அறிவித்து விடும். உள்ளத்தில் மறைந்திருக்கின்ற தீமைகளை அவன் மனசாட்சியே கூறிவிடும். இப்பொருளில் இப்பாடல் உள்ளது.

மலர் உண்டு என்பதை அதன் மணமே சொல்லிவிடும். ஒருவன் செய்யப்போகும் காரியத்தை அவன் கூறும் சொற்களே அறிவித்து விடும் என்று கூறப்பட்டது. மலரின் நறுமணமே அந்த இடத்தில் மலர் இருக்கிறது என்பதை நமக்குத் தெரிவிக்கும். அதேபோல் ஒருவன் கூறும் சொற்களிலிருந்தே அவன் செய்யும் காரியம் வெற்றியடையுமா? தோல்வி ஏற்படுமா? என்பதைச் சொல்லிவிட முடியும் மாரீசனை மானாக மாறிச் சீதை முன் செல். அந்த மானைப் பிடித்துத் தரும்படி சீதை கேட்பாள். இராமனும் போவான். அந்த சமயம் சீதையைக் கவர்ந்து வருவேன் என்று இராவணன் கூறுகிறான். அதைக் கேட்ட மாரீசன் அடுத்தவன் மனைவி யைக் கவர்வது அதர்மம். அப்படியே நீ கவர்வதாக இருந் தாலும் இராமன் இருக்கும் போதே கவர்வதுதான் வீரம்.

அப்படியிருக்க இந்தக் குறுக்கு வழியை ஏன் செய்கிறாய்? என்று கேட்டான். அதற்கு இராவணன் சொல்கிறான். இராமன் இருக்கும் போது கவர்ந்தால் போர் செய்யநேரும்; போரில் இராமன் இறப்பான்; அவன் இறந்தால் சீதையும் இறப்பாள். அப்படியென்றால் என் எண்ணம் எப்படி நிறை வேறும் என்று கேட்கிறான். உண்மையில் யுத்தம் வந்தால் இராவணன் தான் இறந்திருப்பான். இதை அறியாமல் இராவணன் கூறியதிலிருந்தே இராமனால் இராவணன் இறப்பது உறுதி என்று ஆகிவிட்டது. யுத்தகளத் தில் இராம னால் இராவணன் அழிந்ததை நாம் அறிவோம். ஒருவன் கூறும் சொற்களே அவன் காரியத்தின் முடிவைத் தெரிவித்து விடும் என்று இப்பாடல் கூறுவது இந்த அடிப் படையில் தான். ஒருவன் எண்ணத்தை அவன் முகமே காட்டி விடும் என்று சொல்லப்பட்டது. அதனால்தான் அகத்தின் அழகு முகத்தில் தெரியும் என்று கூறப்பட்டிருக்கிறது. எப்படி மறைத்தாலும் அவன் முகபாவனை அவன் எண்ணத்தைப் பறைசாற்றி விடும். ஆகவே, பெரியோர்களை ஏமாற்ற முடியாது. அறிவிலிகள் ஏமாறலாம். உள்ளொன்று வைத்துப் புறமொன்று பேசுவோரை முகத்தைக் கண்ட பெரியோர்கள் தெரிந்து கொள்வார்கள் என்பது கருத்து.

அ.பொ.

மலர் உண்மை-மலர் உண்டு என்பதை; நாற்றம் உரைக்கும். மணம் தெரிவிக்கும். தூக்கின்-ஆராய்ந்தால். அகம் பொதிந்த-உள்ளத்திலே மறைந்திருக்கின்ற தீமை.

மழையின்றி மாநிலத்தார்க் கில்லை; மழையும்
தவம்இலார் இல்வழி இல்லை; தவமும்
அரசன் இலாவழி இல்லை; அரசனும்
இல்வாழ்வார் இல்வழி இல். 47

விளக்கவுரை

மழையில்லாவிட்டால் இவ்வுலக மக்களுக்கு வாழ் வில்லை. தவம் செய்யாதவர்கள் வாழும் இடத்தில் மழை பொழியாது. மழைக்குக் காரணமான தவமும் அரசன் இல்லாத விடத்தில் இல்லை. குடிமக்கள் இல்லாத இடத்தில் அரசனும் இல்லை. இப்பொருளில் இப்பாடல் உள்ளது.

மழையில்லா விட்டால் இவ்வுலக மக்களுக்கு வாழ்வு இல்லை. தவம் செய்யாதவர்கள் வாழும் இடத்தில் மழை பொழியாது என்று கூறப்பட்டது. மழை பொழியாவிடில் மக்கள் உயிர் வாழ முடியாது. தானியங்கள் மழையால்தான் விளைகின்றன. ஆகவே உணவு, நீர் போன்ற அத்தியாவசியப் பொருள்களுக்கு மழை தேவை. மழை இல்லை என்றால் உலக மக்கள் வாழ இயலாது. அடுத்துத் தவம் இல்லாத இடத்தில் மழைபொழியாது. நல்லவர் ஒருவராவது இருந்தால்தான் அனைவருக்கும் மழை பொழியும். இறைவனை நோக்கித் தவம் இருப்பவர்கள் இருந்தால்தான் மழை பொழியும். தருமவழியில் நிற்கும் தவம் இருந்தால் தான் மழை பொழியும். சுயநலமற்ற தியாகிகளின் தவம் இருந்தால்தான் மழை பொழியும். ஆகவே, மழை பொழியாததற்குக் காரணம் இப்படிப்பட்ட தவசிகள் இல்லை என்பதே காாரணமாகும். தவம் இருந்தபோதும் அரசன் இல்லாவிட்டால் மழை பொழியாது என்று கூறப்பட்டது. தவசிகள் இருந்தாலும் செயல்படுத்தும் அரசர்கள் தேவை. எதிரிகளிடமிருந்து பாதுகாக்கும் அரசன் தேவை. அத்தகைய அரசன் இல்லை யென்றால் மழைபொழியாது. அதனால்தான் அரசன் என்பவன் தெய்வத்தின் சாயல் என்று கூறப்பட்டிருக்கிறது. அரசன் சமநீதி உள்ளவனாக இருந்தால்தான் மழைபொழியும் என்பது கருத்து. குடிமக்கள் இல்லாத இடத்தில் அரசனும் இருக்க முடியாது என்று கூறப்பட்டது. குடிமக்களால்தான் அரசன் உருவாகிறான். குடிமக்கள் தரும் வரிப் பணத்தில்தான் அரசன் நாட்டை ஆளுகிறார். ஆகவே, குடிமக்கள் தேவை; குடிமக்கள் இல்லையென்றால் அரசனும் தேவையில்லை என்பதால் அரசனும் இல்லை என்று கூறப்பட்டது.

அ.பொ.

தவம் இலார்-தவம் செய்யாதவர்கள். இல்வழி-வாழாத இடத்தில்.

போதினால் நந்தும் புனைதண்தார்; மற்றதன்
தாதினால் நந்தும் சுரும்பெல்லாம்; தீதில்
வினையினால் நந்துவர் மக்களும்; தத்தம்
நனையினால் நந்தும் நறா. 48

விளக்கவுரை

குளிர்ந்த மாலைப் பொழுதில் மலர்கள் சிறந்து விளங்கும். வண்டுகள் எல்லாம் மலரின் தேனால் சிறந்து விளங்கும். உலகத்து மனிதர்கள் குற்றமற்ற நல்ல செயல்களால் சிறப்புப் பெறுவார்கள். தேன்கள் தாம் உற்பத்தி ஆகும் மலர்களால் சிறப்புப் பெறும். இப்பொருளில் இப்பாடல் உள்ளது. குளிர்ந்த மாலைப் பொழுதில் மலர்கள் சிறந்து விளங்கும். வண்டுகள் மலரின் தேனால் சிறந்து விளங்கும். உலகத்து மனிதர்கள் குற்றமற்ற நல்ல செயல்களால் சிறப்புப் பெறுவார்கள் என்று நான்மணிக்கடிகை கூறுகிறது. குற்றமற்ற நல்ல செயல்கள் என்பது பிறர் துன்பங்களைத் தன் துன்பங்களாக நினைத்து உதவி செய்யும் செயல்களைக் குறிப்பதாகும். இந்த உலகத்தில் பிறருக்காக வாழ்கிறவர்கள் தான் சாகா நிலையை அடைகிறார்கள். அத்தகைய உத்தமர்களுக்கு ஞானக் கதவுகள் தானாகவே திறக்கின்றன. ஞானம் என்பதுதான் அழியும் உடல் அல்ல; அழியாத ஆத்மா என்பதை நேரில் காண்பதாகும். இந்த உலகத்தின் புதிரை அறிய நம் நாட்டிலும், வெளி நாடுகளிலும் பல்வேறு ஆராய்ச்சிகள் நடத்தப்பட்டன. ஆனால் அவை யாவும் படுதோல்வியையே அடைந்தன. இப்போதும் அந்த ஆராய்ச்சி தொடர்கிறது. இந்த ஆராய்ச்சிகளும் தள்ளாடி விழும் நிலையில்தான் இருக்கின்றன. ஆனால் நாம் இதற்கான விடையை எப்போதோ கூறிவிட்டோம். அந்த விடை தியாகம்தான், மற்றவர்களுக்காக நாம் செய்யும் ஒவ்வொரு தியாகமும் நம் அடிமைச் சங்கிலியை உடைத்து எறிகின்றன. இந்தத் தியாகத்தின் மூலம்தான் நாம் இறை தரிசனம் பெற முடியும். நான்மணிக்கடிகை திரும்பத் திரும்ப அறச் செயல்களைச் செய்க என்று வலியுறுத்துகிறது. அறச் செயல்கள்தான் நம் தீவினைகளை அழித்து ஆத்மா என்ற அழியாத ஜோதியைப் பற்றி நிலைக்க வைக்கிறது; தியானிக்க வைக்கிறது. இறுதியில் இறைவனிடம் இணைய வைக்கிறது. இந்தப் பூமியில் மனிதர்கள் பிறந்திருப்பதன் இலட்சியமே இந்த ஞானம் பெறுவதற்குதான். நான்மணிக்கடிகை இந்த இலட்சியத்திற்கு ஒவ்வொரு பாடலிலும் வழி அமைத்துக்

கொடுக்கிறது. இச்சிந்தனைகளைத் தூண்டும்விதத்தில் மேலே கூறப்பட்டுள்ள பாடல்கள் உள்ளன.

அ.பொ.

புனை-கட்டப்படும். தண்தார்-குளிர்ந்த மாலை. நந்தும்-சிறந்து விளங்கும்.

சிறந்தார்க்கு அரிய செறுதல்; எஞ்ஞான்றும்
பிறந்தார்க்கு அரிய துணைதுறந்து வாழ்தல்;
வரைந்தார்க்கு அரிய வகுத்தூண்; இரந்தார்க்கு ஒன்று
இல்என்றல் யார்க்கும் அரிது. 49

விளக்கவுரை

நட்பில் சிறந்தவர்களுக்குத் தம் நண்பரைக் கோபித்து நீக்குவது என்பது இல்லை. தம் சுற்றத்தை விட்டு நீங்கி வாழ்வது நல்ல குடியில் பிறந்தவர்க்கு இல்லை. தாம் உண்பது இவ்வளவு என்று வகுத்து வாழ்வோர்க்குப் பிறர்க்குப் பகுத்துக் கொடுத்து உண்ணும் தன்மை இல்லை. தம்மிடம் வந்து இரப்போர்க்கு இல்லை என்று கூறுவது இரக்கமுள்ளவரிடம் இல்லை. இப் பொருளில் இந்நான்மணிக்கடிகைப் பாடல் உள்ளது.

நட்புக்கு இலக்கணம் என்பது நண்பர் தவறு செய்தாலும் அதைப் பொறுத்து அனுசரித்துச் செல்வதாகும். நட்பை நீக்குவது நட்புக்கு இழுக்கு தம் உறவினர்களை விட்டு நீங்கி வாழ்வது நல்லகுடி யில் பிறந்தவர்களுக்கு இல்லை என்று கூறப்பட்டது. இந்த வாழ்க்கையில் நமக்கென்று அமைந்த தாய், தந்தை, சகோதரன், சகோதரி, மனைவி, மாமன், மாமி மற்றுமுள்ள பல உறவுகள் நமக்குப் பலத்தைச் சேர்ப்பவை. எக்காரணம் கொண்டும் இந்த உறவுகளை நீக்கக்கூடாது. குற்றம் பார்க்கின் சுற்றம் இல்லை என்று சொல்லப்பட்டிருக் கிறது. தவறு செய்யாத மனிதன் எவருமில்லை. ஆகவே, அத் தவறுகளை அவர்கள் திருத்திக் கொள்ளும், வகையில் நாம் நடந்து கொள்ளவேண்டும். உறவை நீக்குதல் நல்லகுடியில் பிறந்தவர்களிடம் இருக்காது. அவர்கள் உயர்ந்த பண்பினர். அனைத்தையும் அனுசரித்து வாழ்வை நடத்திச் செல்வார்கள். ஒருவன் உறவினர்களை இழந்து விட்டான் என்று அறிந்தால்

எதிரிகள் தீமை செய்ய முயல்வார்கள். ஆகவே, உறவினர்களை நீக்கிவாழக்கூடாது என்பது கருத்து. தாம் உண்பது இவ்வளவு என்று வகுத்து வாழ்வோர்க்கு பிறருக்குப் பகுத்துக் கொடுத்து உண்ணும் தன்மை இல்லை என்று கூறப்பட்டது. அதாவது தான் உண்பதைக் குறைத்துக் கொண்டு பிறர் உண்ணும்படி செய்ய வேண்டும். நான் இவைகளையெல்லாம் உண்ட பிறகு மீதி இருந்தால் பிறருக்குத் தர முடிவு செய்வேன் என்று கூறு பவர்கள். பிறருக்கு வழங்கமாட்டார்கள் என்பது பொருளாகும். தம்மிடம் பிச்சை கேட்போருக்கு இரக்கமுள்ளவர்கள் இல்லை என்று கூறமாட்டார்கள். கல்நெஞ்சுக்காரர்கள்தான் இல்லை என்று; சொல்வார்கள் என்பது பொருளாகும்.

அ.பொ.

சிறந்தார்க்கு-நட்பில் சிறந்தவர்க்கு. துணை துறந்து-தன் சுற்றத் தாரை விட்டு நீங்குதல். எஞ்ஞான்றும்-எந்நாளும்.

இறைசுடும் இன்புறா யாக்கையுள் பட்டால்;
உரைசுடும் ஒண்மை இலாரை-வரை கொள்ளா
முன்னை ஒருவன் வினைசுடும்; வேந்தனையும்
தன் அடைந்த சேனை சுடும். 50

விளக்கவுரை

நோயுள்ள உடம்பில் உணவு சென்றால் கடும் துன்பத் தைத் தரும். அறிவற்றவரை அவர் கூறும் சொற்களே துன் புறுத்தும். ஒருவன் அறத்தின் எல்லையை முன்செய்த தீவினை சுடும். அறநெறியில் நில்லாத அரசனை அவனுடைய சேனையே கொன்றுவிடும். இப்பொருளில் இப்பாடல் உள்ளது.

நோயுள்ள உடலில் உணவு சென்றால் கடும் துன்பத்தைத் தரும் என்று சொல்லப்பட்டது. ஆகவே, நோயுற்றிருக்கும் போது வழக்க மான உணவுகளை உட்கொள்ளக் கூடாது; பத்தியமாக நடக்க வேண்டும். தீராத நோய் உள்ளவர்கள் உணவு அருந்தவில்லை யென்றால் உயிருக்கு ஆபத்து ஏற்படும் என்பது அனைவருக்கும் தெரியும். ஆகவே, தீராத நோயுள்ள வர்கள்கூட அளவுப்படி உண்ண வேண்டியிருக்கிறது. எனவே, நோயின் தன்மைக்கேற்றபடி தான் உணவு இருக்க

வேண்டும் என்பது கருத்து. அறிவில்லாதவர்களை அவர்கள் கூறும் சொற்களே துன்புறுத்தும் என்று கூறப்பட்டது. அறிவற்றவர்கள் எப்படிப் பேச வேண்டும் என்பதை அறிய மாட்டார்கள். வலிமையுள்ளவனை நோக்கி வசைபாடுவார்கள். அதனால் அவன் தாக்குவான். அதன்பொருட்டுத் துன்பம் அடைவார்கள். கோள்சொல்லுதல், பொய் கூறுதல் போன்ற தகாத சொற்கள் அறிவற்றவர்களிட மிருந்து சரளமாக வரும். அதன் காரணமாக ஏச்சுக்கும், பேச்சுக்கும் அவர்கள் ஆளாவார்கள். தன் சித்தப்பாவும், தருமத்தில் சிறப்புள்ளவரு மான விதுரரைத் தாசி மகனாக நீர் இருப்பதால் தான் அடிமை புத்தி உம்மை விட்டுப் போகவில்லை. அதனால் தான் பாண்டவர்களுக்கு ஆதரவாக எப்போதும் பேசுகிறீர் என்று அறிவற்ற துரியோதனன் பேசினான். அதனால் கோபம் கொண்ட விதுரர் வலிமை வாய்ந்த தன் வில்லை முறித்துப் போட்டு இது உனக்கு உதவாது என்றார். இப்படி அறிவற்ற வர்கள் கூறும் சொற்கள் துன்பம், இழப்பு ஆகியவற்றை ஏற்படுத்தும் என்பது பொருளாகும். தீவினை நெருப்புப் போல் சுடும் என்று கூறப்பட்டது. அறநெறி யில் நிற்காத அரசனை அவன் சேனையே கொன்று விடும் என்று கூறப் பட்டது. அறம் தான் அரசனுக்குப் பாதுகாப்புக் கவசம். அறத்தை மீறினால் நம்மைச் சூழ்ந்துள்ள உறவினர் களால் கடும் துன்பம் வரும். அதேபோல் அரசனும் கெடுவான் என்ற அடிப்படையில் இது கூறப்பட்டது.

அ.பொ.

இரை-உணவானது. இன்புறா-சுகம் இல்லாத. யாக்கையுள் பட்டால்-உடம்பினுள் சென்றால்.

எள்ளற் பொருளது இகழ்தல் ஒருவனை;
உள்ளற் பொருளது உறுதிச்சொல்; உள்அறிந்து
சேர்தல் பொருளது அறநெறி; பன்னூலும்
தேர்தற் பொருள பொருள். 51

விளக்கவுரை

ஒருவனை இகழ்ந்து பேசுதல் பிறரால் வெறுக்கத்தக்க விஷயமாகும். ஒருவன் சொல்லும் உறுதிமொழி அவனை

நண்பர்கள் நினைக்கும் சிறப்புடையதாகும். உள்ளத்தால் நன்கு உணர்ந்து அடைவதற்குரிய பொருள் தரும நெறியாகும். பல நூல்களையும் ஆராய்ந்து தெளிவதே உண்மைப் பொருளாகும். இப்பொருளில் இந்நான்மணிக்கடிகை பாடல் அமைந்துள்ளது.

ஒருவனை இகழ்வது பிறரால் வெறுக்கப் படும் என்று கூறப்பட்டது. எப்போதும் இனிமையான மொழிகளையே பேசவேண்டும். பிறரைக் கேவலமாக நினைக்கக்கூடாது; இகழவும்கூடாது. சான்றோர்கள் ஒருமனிதனிடம் இருக்கும் மிகச் சிறிய நன்மையைக் கூட மிகப் பெரியதாக்கி அவனை உயர்த்துவார்கள். ஆனால் அற்பர்கள் ஒருமனிதனிடம் இருக்கும் மிகச் சிறிய குறையைக்கூட மிகப் பெரியதாக ஆக்கி அவனைக் கீழே தள்ள முயல்வார்கள். அதன் காரணமாக பிறர் வெறுக்கும் நிலையினை அவர்கள் அடைவார்கள் என்பது பொருள். ஒருவன் சொல்லும் உறுதிமொழி அவனை நண்பர்கள் நினைக்கும் சிறப்பினைத் தரும் என்று கூறப்பட்டது. அதர்ம மான முறையில் சுக்ரீவனின் மனைவியைக் கவர்ந்து, தம்பி என்றும் பாராமல் அவனை நாட்டைவிட்டு விரட்டினான் வாலி. சுக்ரீவன் இராமனிடம் சரண்புகுந்தான். இராமன் வாலியைக் கொன்று கிஷ்கிந்தைக்கு உன்னை அரசனாக்கு வேன் என்று உறுதிமொழி தந்தார். அதன்படியே செய்தும் காட்டினார். அதனால் சுக்ரீவன் இராமபிரானின் நட்பை போற்றிக் கொண்டாடினான். ஆகவே, நண்பர்களின் துன்பத்தை நீக்க உண்மையான உறுதிமொழி எடுப்பவர்கள் நண்பர்களால் சிறப்படைவார்கள் என்பது கருத்து. தரும நெறியை உள்ளத்தால் ஆராய்ந்து அறிய வேண்டும். பல நூல் களை ஆராய்ந்து தெளியவேண்டும் என்று கூறப்பட்டது. தருமம் என்பது மிகவும் சூட்சுமமானது. உள்ளத்தால் ஆராய்ந்து அதனை அறிய வேண்டும். அனாதைபோல் திரௌபதி சபையில் நின்றபோது அவள் சூதாட்டத்தில் வெல்லப்பட்டாள் என்று காரணம் காட்டிப் பாண்டவர்கள் உட்பட பலரும் விலகி நின் றார்கள். ஆனால், கிருஷ்ணன் ஒரு பெண்ணின் மானத்தை காப்பதே தருமநெறி என அறிந்து எல்லா விதிகளையும் மீறி அவளைக் காப்பாற்றினார். இதைத் தான் உள்ளத்தால் அறியும் தருமநெறி என்று நான்மணிக் கடிகை கூறுகிறது.

அ.பொ.

உள் அறிந்து-உள்ளத்தால் நன்கு அறிந்து. எள்ளற் பொருளது-பிறரால் வெறுக்கத்தக்க விஷயம். அறநெறி-தருமநெறி.

யாறுள் அடங்கும் குளம்உள; வீறுசால்
மன்னர் விழையும் குடிஉள; தொன்மரபின்
வேதம் உறுவன பாட்டுள; வேளாண்மை
வேள்வியோடு ஒப்ப உள. 52

விளக்கவுரை

ஆற்றுவெள்ளம் முழுவதையும் தன்னுள் அடக்கக்கூடிய பெரிய குளங்களும் உண்டு. அரசரால் விரும்பப்படுகின்ற அறிவிலும், செல்வத்திலும், வீரத்திலும் சிறந்த குடிமக்களும் இருக்கின்றனர். பழமையான மரபுடைய வேதக் கருத்துக்களைக் கொண்ட பாட்டுகளும் உண்டு. பிறருக்கு உதவும் வகையிலான வேள்விக்குச் சமமான கொடைகள் உண்டு. இப்பொருளில் இப்பாடல் உள்ளது.

ஆற்று வெள்ளம் முழுவதையும் தன்னுள் அடங்கச் செய்யும் பெரிய குளங்கள் இந்தப் பூமியில் உண்டு. அரசரால் விரும்பப்படும் குடிமக்களும் உண்டு என்று கூறப் பட்டது. அரசனுக்குச் சமமான அறிவு, வீரம், செல்வம் படைத் தவர்கள் குடிமக்களிலும் இருப்பார்கள். அவர்களை அரசன் விரும்புவான் என்பது பொருளாகும். பழமையான வேதக் கருத்துக்கள் அடங்கிய பாடல்களும் உண்டு என்று கூறப் பட்டது. வேதக் கருத்துக்கள் என்பவை அழியாத ஆத்மாவைக் கூறும் தத்துவங்களாகும் சாதாரணப் பாடல்களைவிட இப் பாடல்களே மனிதர்களின் உண்மையான இலட்சியத்திற்கு வழிகாட்டக் கூடியவை ஆகும். வேதம் என்றாலே உண்மையை அறிதல் என்று பொருளாகும். உண்மை என்பது நாம் யார் என்பதை உண்மையில் அறிவதுதான் ஆத்மா என்பதை காதால்கூடக் கேட்க முடியாமல் மனிதர்கள் பிறந்து மடிந்து விடுகிறார்கள். இதற்குக் காரணம் தீவினைகளே. ஆனாலும் நாம் அவர்கள் காதில் விழும்படிச் செய்ய வேண்டும். வேதப் பாட்டுகள் மூலம் இதனை நாம் செய்ய முடியும் என்பது கருத்து. பிறருக்கு உதவும் வகையிலான வேள்விக்குச் சமமான கொடைகளும் உண்டு என்று கூறப்பட்டது. செல்வம், உணவு

போன்ற கொடைகள் ஒரு மனிதனின் பசியைப் போக்கலாம். ஆனால், வேள்விக்கு நிகரான கொடை என்பது ஆன்மீகக் கொடையைக் குறிக்கிறது. எல்லாத் தானங்களைவிட ஆன் மிகத் தானம்தான் மிகச் சிறந்தது. மனிதன் சர்வ வல்லமை படைத்த ஆத்மா என்பதை ஒவ்வொரு வீட்டு வாயிலுக்கும் சென்று கூறவேண்டும். சரியான அர்த்தத்துடன் அவர்கள் புரியும்படி செய்ய வேண்டும். இதுவே வேள்விக்கு நிகரான கொடை யாகும்.

அ.பொ.

யாறு-ஆற்று வெள்ளம். வீறுசால்-பெருமை நிறைந்த. வேள்வி யோடு-யாகங்களுடன்.

எருதுடையான் வேளாளன்; ஏலாதான் பார்ப்பான்;
ஒரு தொடையான் வெல்வது கோழி; உருவோடு
அறிவுடையாள் இல்வாழ்க்கைப் பெண்என்ப; சேனைச்
செறிவுடையான் சேனா பதி. *53*

விளக்கவுரை

உழவு மாடுகள் வைத்திருப்பவன் வேளாளன்; பழியை ஏற்றுக் கொள்ளாதவன் பார்ப்பான்; எடுத்த எடுப்பிலேயே செல்வதே சிறந்த சண்டைக் கோழி. இல்லறத்தை நடத்தும் அறிவுடையவளே குடும்பத்திற்கேற்ற பெண்; சேனைகளுடன் ஒற்றுமையாக இருந்து செயல்படுபவனே சிறந்த சேனைத் தலைவன். இப்பொருளில் இப்பாடல் உள்ளது.

உழவு மாடுகளை வைத்திருப்பவன் வேளாளன்; பழியை ஏற்றுக் கொள்ளாதவன் பார்ப்பான் என்று கூறப்பட்டது. தன்மீது பழிவராமல் சாதுரியமாகப் பார்ப்பான் நடந்து கொள்வான் என்பது பொருளாகும். உழவு மாடுகளைத் துணையாகக் கொண்டு வேளாண்மை செய்பவன் என்பதால் அவன் வேளாளன் என்று அழைக்கப்படுகிறான். தொழிலால் தான் பிரிவே தவிர மனிதர்கள் சமம் என்பது இங்கே சூசகமாக உணர்த்தப்படுகிறது. எடுத்த எடுப்பிலேயே வெல்வதே சண்டைக்கோழி. இல்லறத்தைச் சரியாக நடத்தும் அறிவுடை யவளே குடும்பப் பெண் என்று கூறப்பட்டது. சண்டை

என்று வந்தால் சிறிது நேரத்திற்குப் பிறகே வெல்வது யார் என்று தெரியும். ஆனால் சண்டைக் கோழி என்ற இனம் எடுத்த எடுப்பிலேயே வெற்றி கொள்ளும் சாமர்த்தியம் உடையது. அதேபோல் அதிரடித் தாக்குதலால் மின்னல் வேகத்தில் வெற்றியைப் பெறுபவர்களும் உண்டு. அறிவுள்ள குடும்ப பெண் கணவனைத் தெய்வமாகப் போற்றுவாள். உறவினர்களை மதித்துப் பணிவிடை செய்வாள். மற்ற வீடு களுக்குச் சென்று அரட்டை அடிக்க மாட்டாள். வரவுக்குத் தகுந்த செலவுகளை பொறுப்பாகச் செய்வான். குடும்பத் திற்குப் பழி வராதபடி கற்புடன் திகழ்வாள். இவளே அறி வுடைய குடும்பப் பெண்ணாகும். சேனைகளுடன் ஒற்றுமை யாக இருந்து செயல்படுப வளே சிறந்த சேனைத் தலைவன். போர் என்று வந்தால் தலைவன் முன்னால் நிற்க வேண்டும். அப்போதுதான் வீரர்கள் உற்சாகம் பெறுவார்கள் வெற்றிக் கொடியும் நாட்ட முடியும். எங்கோ ஓரிடத்தில் பாதுகாப்பாக இருந்து கொண்டு வீரர்களை முன்னேறிச் செல்லுங்கள் என்று கூறும் சேனைத் தலைவன் தோல்வியடைவான். வீரர் களுடன் ஒற்றுமையாக உடன்இருந்து செயல்படுபவனே சிறந்த சேனைத் தலைவன் என்பது பொருளாகும்.

அ.பொ.

எருதுடையான்-உழவு மாடுகள் வைத்திருப்பவன். வேளாளன்-பயிர் தொழில் செய்பவன். ஏலாதான்-பழியை ஏற்றுக் கொள்ளாத வனாகிய பார்ப்பான்.

யானை உடையார் கதன்உவப்பர்; மன்னர்
கடும்பரிமாக் காதலித்து ஊர்வர்; கொடும்குழை
நல்லாரை நல்லவர் நாண்உவப்பர்; அல்லாரை
அல்லார் உவப்பது கேடு. 54

விளக்கவுரை

யானையை உடைய போர் வீரர்கள் அதன் கோபத்தை விரும்புவர். அரசர் விரைந்து செல்லும் குதிரையை விரும்புவர். குழையாகிய வளைந்த காதணியை உடைய நல்லாரை (பெண் களை) நல்ல குணமுடையவர்கள் நாணமுடையவர்களாக

இருந்தால் விரும்புவார்கள். நாணம் இல்லாதவர்களைத் தீயோர் விரும்பு வது கெட்ட ஒழுக்கத்தின் பொருட்டே ஆகும். இப்பொருளில் இப்பாடல் உள்ளது. யானையை உடைய போர்வீரர்கள் அதன் கோபத்தை விரும்புவார்கள். விரைந்து செல்லும் குதிரையை அரசர்கள் விரும்புவார்கள் என்று கூறப்பட்டது. கோபம் உள்ள யானையும், வேகமான குதிரையும்தான் போரில் வெற்றி காணும். ஆகவே, இவ்வாறு சொல்லப்பட்டது. நல்ல பெண்களை நல்லோர் விரும்பு வார்கள். நாணமில்லாப் பெண்களை தீயோர் விரும்புவது கெட்ட ஒழுக்கத்தில் பொருட்டே என்று கூறப்பட்டது. நல்லவர்கள் குடும்பப் பெண்களையே விரும்புவார்கள். ஏனெனில் தனக்குவர இருக்கும் வாழ்க்கைத் துணைவி அறச் செயல்களைச் செய்பவளாக இருக்க வேண்டும். அறச் செயல்கள்தான் ஒரு குடும்பப் பெருமைக்குக் காரணமாக இருப்பது. அறம்தான் மனிதனை தெய்வ நிலைக்குக் கொண்டு போகிறது. பிறவித் தளையை உடைக்கிறது. தெய்வ வடிவத் தைத் தருகிறது. ஆகவே மனைவி என்பவள் நாணம் உடைய வளாக, பெரியோரை மதிப்பவளாக கணவன் மனம் நோகாமல் நடப்பவளாக இருத்தல் வேண்டும். நல்லோர்கள் இப்படிப்பட்ட பெண்களையே விரும்புவார்கள். ஆனால், தீயோர்கள் உடல் சுகத்திற்காக நாணமில்லாத பெண்களை விரும்புவார்கள். உடல் சுகம் ஒன்றே குறிக்கோளாகக் கொண்டு வாழ்க்கை நடத்துபவர்கள் எந்த நேரத் திலும் நரகப்படுகுழியில் தான் விழுவார்கள். உடல் சுகம் என்பது மிருகங்களுக்கே உரியது. அதை மிருகங்களுக்கே விட்டுவிட்டு மனிதன் தெய்வமாக மாற வேண்டும். கிடைத்தற் கரிய மனிதப் பிறவியை அற்ப சுகங்களின் பொருட்டு வீணாக்கிவிடக்கூடாது. அப்படி வீணாக்குபவர்கள்தான் நாணம் இல்லாத பெண்களை விரும்பு வார்கள் என்பது கருத்து.

அ.பொ.

கதன் உவப்பர்-கோபத்தை விரும்புபவர். கொடும் குழை-வளைந்த காதணியை யுடைய.

கண்ணின் சிறந்த உறுப்பில்லை; கொண்டானின்
துன்னிய கேளிர் பிறர்இல்லை; மக்களின்
ஒண்மையவாய்ச் சான்ற பொருள்இல்லை; ஈன்றாளோடு
எண்ணக் கடவுளும் இல். *55*

விளக்கவுரை

கண்ணைப் போல் மேலான உறுப்பு வேறு இல்லை. குலமகளுக்குத் தன்னை மணந்து கொண்ட கணவனைவிட உறவினர் பிறர் இல்லை. பெற்றோர்க்குத் தங்கள் பிள்ளைகள் போல் சிறந்த பொருள் இல்லை. தாயுடன் சமமாக நினைக்க எந்தக் கடவுளும் இல்லை. இப்பொருளில் இந்நான்மணிக் கடிகை பாடல் உள்ளது.

கண்ணைப்போல் மேலான உறுப்பு வேறுஇல்லை என்று கூறப்பட்டது. கண் பார்வை மட்டும் சரியாக இருந்தால் ஒரு மனிதன் எப்படியும் பிழைத்துக் கொள்வான். கண்பார்வை போய்விட்டால் வாழ்வே இருளாகி விடுகிறது. செயலற்ற நிலைக்கு அவன் தள்ளப்படுவான். செயலற்றவன் நடைப் பிணம் போலத்தான் வாழ முடியும்? ஆகவே, கண் போல மேலான உறுப்பு வேறு இல்லை என்று கூறப்பட்டது. குலமகளுக்குக் கணவனைவிட உறவினர் வேறு யாருமில்லை என்று கூறப்பட்டது. சாவித்திரி தன் கணவன் சத்யவான் உயிரை எமனிடமிருந்தே மீட்டு வந்தாள். கண்ணகி தன் கணவன் நிரபராதி என்பதை நிரூபிக்க மதுரையையே எரித் தாள். இவ்வாறு கணவனையே தெய்வமாகப் போற்றும் பெண்களே குலமகள் ஆகும். மற்ற பெண்கள் அந்தச் சிறப் பைப் பெறமாட்டார்கள் என்பது பொருள். பெற்றோருக்கு தங்கள் பிள்ளைகளே மிகச் சிறந்த பொருள். செல்வம், நகை, மாளிகை, கார் போன்ற ஆடம்பர சாதனங்கள் சிறந்த பொருள் இல்லை. தம் மக்களே பெற்றோருக்குச் சிறந்த பொருள் என்பது கருத்து. தாயுடன் சமமாக நினைக்க எந்தக் கடவுளும் இல்லை. தாய் என்பவள் தெய்வ வடிவம். அரசன் அன்று கொல்வான். தெய்வம் நின்று கொல்லும். ஆனால் என்றும் அன்பு காட்டுபவள் தாய் ஒருத்தியே. பொறுமையின் வடிவம் அவள். சகிப்புத் தன்மையின் சிகரம் அவள். ஆகவே, தாய்க்கு நிகராக எந்தக் கடவுளும் இல்லை என்று கூறப்பட்டது.

அ.பொ.

கண்ணின்-கண்ணைப் போல. துன்னிய-நெருங்கிய. கேளிர்-உறவினர். ஈன்றாளோடு-தாயுடன்.

கற்றன்னர் கற்றாரைக் காதலர்; கண்ணோடார்
செற்றன்னர்; செற்றாரைச் சேர்ந்தவர்-தெற்றென்ன
உற்றது உரையாதார்; உள்கரந்து பாம்புறையும்
புற்றன்னர் புல்அறிவி னார். 56

விளக்கவுரை

கற்றவர்களை விரும்புகின்றவர் கற்று அறிந்தவர்களை ஒப்பார்கள். இரக்கம் காட்டாத கல்நெஞ்சத்தினர் துன்பம் செய்தவருக்குச் சமமாவார்கள். உண்மையைச் சொல்லாத வர்கள் பகைவரைச் சேர்ந்தவர்கள். கீழான அறிவுள்ளவர்கள் பாம்பு வாழ்கின்ற புற்றுக்குச் சமமானவர்கள். இப்பொருளில் இப் பாடல் உள்ளது.

கற்றவர்களை விரும்புகிறவர்கள் கற்று அறிந்தவர் களுக்குச் சமமாவார்கள் என்று கூறப்பட்டது. ஒரு மனிதன் யாரிடம் அதிகமாக நெருக்கமாக இருக்கிறானோ அந்த மனிதனின் அறிவை அவன் பெறுவான். சூதாட்டம் ஆடும் ஒருவனிடம் நெருக்கமாக இருந்தால் அவனும் சூதாடி யாவான். குடிகாரனிடம் நெருக்கமாக இருந்தால் அவனும் குடிகாரனாக மாறுவான். பெண் மோகத்தில் இருப்பவனிடம் நெருக்கமாக இருப்பவன் தானும் ஒழுக்கத்திலிருந்து தவறு வான். அதேபோல் கற்றறிந்த சான்றோர்களிடம் நெருக்கமாக இருப்பவர் தானும் கற்றவனாக மாறுவான் என்பது பொரு ளாகும். இரக்கம் காட்டாத கல் நெஞ்சக்காரர்கள் துன்பம் செய்கிறவர்களுக்குச் சமம் என்று கூறப்பட்டது. ஏனெனில் பசியால் துடிப்பவனுக்கும் அவர்கள் உணவு தரமாட்டார்கள். இரத்த வெள்ளத்தில் ஒருவன் விழுந்து கிடந்தாலும் உதவி செய்யமாட்டார்கள். தாய், மகன், சகோதரன், சகோதரி என்ற உறவுமுறைகளை மதிக்காமல் அவர்களுக்குச் செய்ய வேண்டிய உதவிகளைச் செய்ய மறுப்பார்கள். இத்தகைய கல்நெஞ்சக் காரர்கள் துன்பம் செய்தவர்களே என்று கூறியது. இந்த அடிப்படையில்தான். பகைவர்களுடன் சேர்ந்து கொள்கிற வர்கள் கீழான அறிவுடையவர்கள். பாம்பு வாழ்கின்ற புற்றுக்குச் சமமானவர்கள் என்று கூறப்பட்டது. பகைவர்களிடம் எப்போதும் விலகியே இருக்கவேண்டும். இதை அறியாமல் அவர்களுடன் சேர்பவர்கள் கீழான அறிவு உடையவர்கள் என்பதில் சந்தேகம் இல்லை அல்லவா? பாம்பு

வாழும் புற்றுப் போன்றவர்கள் அவர்கள். எப்போது வேண்டுமானாலும் நஞ்சைப் பாய்ச்சுவார்கள் என்பது இதற்குப் பொருளாகும்.

அ.பொ.

கற்று அன்னர்-கற்று அறிந்தவர்கள். கண் ஓடார்-பிறர்பால் இரக்கங்காட்டாத வன்னெஞ்சர். புல்அறிவினார்-கீழான அறிவுள்ளவர்கள்.

மாண்டவர் மாண்ட வினைபெறுப; வேண்டாதார்
வேண்டா வினையும் பெறுபவே; யாண்டும்
பிறப்பார் பிறப்பார் அறன்இன் புறுவர்;
துறப்பார் துறக்கத் தவர். *57*

விளக்கவுரை

அறிவில் சிறந்தவர், சிறந்த காரியத்தைச் செய்யும் ஆற்றலைப் பெறுவர். அறிவின் பெருமையை விரும்பாதவர்கள் எல்லோரும் வெறுக்கத்தக்க தீவினைகளையே செய்வார்கள். உயர்குடியிலே பிறந்தவர்கள் கடமையைச் செய்து இன்பம் அடைவார்கள். இவ்வுலகப் பற்றை விடுகின்றவர் மோட்சத்தைப் பெறுவதற்கு உரியவர் ஆவார். இப்பொருளில் இப்பாடல் உள்ளது.

அறிவில் சிறந்தவர்கள் சிறந்த காரியத்தைச் செய்யும் ஆற்றலைப் பெறுவார்கள். அறிவின் பெருமையை விரும்பாதவர்கள் எல்லோரும் வெறுக்கத்தக்க தீவினை களையே செய்வார்கள் என்று கூறப்பட்டது. அறிவில் சிறந்த தருமபுத்திரன் பெரியோர்களை மதித்தான்; பகவான் கிருஷ்ணரைத் துதித்தான்; சகோதரர்களைச் சமமாகப் பாவித்தான்; பொறுமைக் குணத்தால் இழந்த இராஜ்ஜியத்தைப் பெற்றான்; குடிமக்களைக் காத்தான். ஆனால், அறிவிலியான துரியோதனன் பெரியோர்களைப் பழித்தான்; பகவானை இழந்தான். பங்காளிகள் சொத்தை அபகரித்தான். சகோதரன் மனைவியைச் சபை நடுவே அவமானப்படுத்தினான். அறிவுக்கு இலக்கணமாகச் சிறந்த காரியங்களைத் தருமபுத்திரன் செய்தான். அறிவற்ற வனான துரியோதனன் தீயசெயல்களைச் செய்து அழிந்தான் என்பது பொருளாகும். உயர்குடியிலே பிறந்த

வர்கள் தங்கள் கடமைகளைச் சரிவரச் செய்து அதில் இன்பம் காண்பார்கள். உலகப் பற்றை விடுகின்றவர் மோட்சத்தைப் பெறும் தகுதி பெறுவர் என்று கூறப்பட்டது. கடமைகளைச் சரியாகச் செய்பவர்களுக்குத் தானாக பற்றற்ற தன்மையும் வரும். கடமைகளை சரியாகச் செய்வது முதல்படி; அடுத்தபடி மோட்சத்திற்கானபடி. ஆகவே, நமக்கு விதித்த கடமைகளைச் சரியாகச் செய்யவேண்டும். பெற்றோரைப் பாதுகாத்தல், மனைவியை பாதுகாத்தல், பிள்ளைகளைப் பாதுகாத்தல், உறவினர்களை அரவணைத்துச் செல்லுதல், நல்ல செயல்களையே செய்தல் ஆகிய கடமை களைச் சரிவரச் செய்தால் தெய்வத்தின் அருளால் மோட்சம் பெறுவதற்கான தகுதியும் தானேவரும் என்பது பொருளாகும்.

அ.பொ.

மாண்டவர்-அறிவில் சிறந்தவர். மாண்டவினை-சிறந்த காரியத்தை. பெறுப-செய்யும் ஆற்றலைப் பெறுவர்.

என்றும் உளவாகும் நாளும் இருசுடரும்;
என்றும் பிணியும் தொழில்ஒக்கும்; என்றும்
கொடுப்பாரும் கொள்வாரும் அன்னர்; பிறப்பாரும்
சாவாரும் என்றும் உளர். 58

விளக்கவுரை

எப்போதும் இருசுடரும், சூரிய சந்திரர்களும் நிலைத் திருப்பன. எப்போதும் காரியங்களுக்குத் தடையாள துன்பமும், தொழில்களும் ஒரே தன்மையில் இருக்கும். எப்போதும் இல்லை என்று சொல்லாமல் கொடுப்பவரும், ஏற்றுக்கொள் பவரும் அவ்வாறே இருப்பர். பிறப்பவர்களும், இறக்கின்றவர் களும் எந்நாளும் இருந்து கொண்டே இருப்பார்கள். இப் பொருளில் இப்பாடல் உள்ளது.

எப்போதும் சூரிய, சந்திரன், நிலைத்திருப்பார்கள். எப்போதும் காரியங்களுக்குத் தடையாகத் துன்பமும், தொழிலும் ஒரேமாதிரியாக இருக்கும் என்று கூறப்பட்டது. சூரிய, சந்திரர் என்பவர்கள் உலகிற்கு ஒளி வழங்குபவர்கள். ஆகவே, மனித குலத்தின் நன்மையின் பொருட்டு அவர்கள் எப்போதும் திகழ்வார்கள். அது இறை வனின் கட்டளை. அதேபோல் நாம் செய்யும் காரியங்களுக்குத் தடைகள் வரும்.

அது இயற்கைத் தடையை உடைத்துக் கொண்டு முன்னேறுவதில்தான் உயிரோட்டம் இருக்கிறது. ஆகவே, தடைகளையும், துன்பங்களையும், அலட்சியப்படுத்தி முன் னேற வேண்டும் என்பது கருத்து.

இல்லை யென்று சொல் லாமல் கொடுப்பவர்களும், அதை ஏற்பவர்களும் எப்போதும் இருப்பார்கள் என்று சொல்லப்பட்டது. நல்லவர்கள் வாழ்வதால்தான் உலகம் இயங்குகிறது. உலக இயக்கம் நடைபெற வேண்டும் என்பது இறைவனின் திருவுளம். ஆகவே, இல்லை யென்று சொல்லாத கருணை உள்ளம் உள்ளவர்கள் எப்போதும் இருந்து கொண்டே இருப்பார்கள் என்பது கருத்து. பிறப்பவர்களும், இறப்பவர்களும் எந்நாளும் இருந்து கொண்டே இருப்பார்கள் என்று கூறப்பட்டது. கர்ம வினைகளை மனிதர்கள் தீர்த்துக் கொள்ள பிறப்பும், இறப்பும் தேவையாகிறது. இறைவன் நடத்தும் இந்த விளையாட்டுத் தொடர்கதையாக இருப்பதால், பிறப்பவர்களும், இறப்பவர் களும் எப்போதும் இருப்பார்கள் என்பது கருத்து.

அ.பொ.

என்றும்-எப்போதும். இருசுடரும்-சூரிய சந்திரர்களும்.

இனிதுஉண்பான் என்பான் உயிர்கொல்லாது உண்பான்;
முனிதக்கான் என்பான் முகன் ஒழிந்து வாழ்வான்;
தனியன் எனப்படுவான் செய்தநன்று இல்லான்;
இனியன் எனப்படுவான் யார்யார்க்கே யானும்
முனியா ஒழுக்கத் தவன். *59*

விளக்கவுரை

இனிமையாக உண்பவன் என்று கூறப்படுபவன் பிற உயிரைக் கொன்று உண்ணாமல் காய், கறிகளை உண்பவன் ஆவான். எல்லோராலும் வெறுக்கத்தக்கவன். முகமலர்ச்சி யில்லாமல் கடுகடுக்கும் முகத்துடன் வாழ்வான். தனியாக ஒதுக்கத்தக்கவன் யார் என்றால் எந்த நன்மைப் பண்பும் இல்லாதவன். நல்லவன் என்று சொல்லப்படுபவன் எல்லோரிடத்திலும் ஒழுக்கத்துடன் நடந்து கொள்ளும் நடத்தையுடையவன் ஆகும். இப்பொருளில் இப்பாடல் உள்ளது.

இனிமையாக உண்பவன் என்று கூறப்படுபவன் பிற உயிரைக் கொன்று உண்ணாமல் காய், கறிகளை உண்பவன் என்று கூறப்பட்டது. பிற உயிர்களை வதை செய்து இறைச்சி உணவை உண்பது இனிமையானது அல்ல என்பது கூறப் பட்டது. காய், கறிகளை உண்பதே இனிமையானது. ஏனெனில் பிற உயிர்களின் வதை இதில் இல்லை என்பது கருத்து. எல்லோராலும் வெறுக்கத்தக்கவன் முகமலர்ச்சி இல்லாமல் எப்போதும் கடுகடுப்பவன் என்று கூறப்பட்டது. எப்போதும் முகமலர்ச்சியுடன் இருப்பதுதான் ஆன்மிக வாழ்வுக்கு முதல்படி முகமலர்ச்சி இல்லாமல் இருத்தல் என்பது வயிற்று வலி ஒன்றுக்காக மட்டும்தான் இருக்கவேண்டும். எப்போதும் கடு,கடுவென்று இருப்பவன் எல்லோராலும் வெறுக்கப் படுவான் என்பது இந்த அடிப்படையில்தான்.

ஒதுக்கத்தக்கவர்கள் எந்த நல்ல பண்பும் இல்லாதவர்கள் என்று கூறப்பட்டது. எந்த நல்ல பண்புகளும் இல்லாதவர்கள் இந்தப் பூமிக்குப் பாரமானவர்கள். அவர்களால் தீமை விளை யுமே தவிர நன்மை விளையாது. ஆகவே, அவர்கள் ஒதுக்கத் தக்க வர்கள் என்று கூறப்பட்டது. நல்லவன் என்று கூறப் படுபவன் எல்லாச் சூழலிலும் ஒழுக்கத்தில் இருப்பவனாகும். அதாவது, உண்மையான ஒழுக்கம் என்பது போலியாக இருக்கக்கூடாது. பேச்சில் மட்டும் ஒழுக்கத்தைக் காட்டக் கூடாது; செயலிலும் அது இருக்கவேண்டும். மற்றவர்கள் பார்க்கும்போது, மட்டு மல்ல. நாம் தனித்திருக்கும்போதும் ஒழுக்கமுடன் இருக்க வேண்டும். நல்லவன் என்பதற்கு இதுவே இலக்கணம்.

அ.பொ.

இனிது உண்பான் என்பான்-இனிமையாக உண்பவன் என்பவன். **உயிர் கொல்லாது**-பிற உயிரைக் கொன்று தின்னாமல் உண்பவன். **முகன் ஒழிந்து**-முகமலர்ச்சியில்லாமலே.

ஈத்துண்பான் என்பான் இசைநடுவான்; மற்றவன்
கைத்துண்பான் காங்கி எனப்படுவான்; தெற்ற
நகையாகும் நண்ணார்முன் சேறல்; பகையாகும்
பாடுஅறியா தானை இரவு. 60

விளக்கவுரை

பிறருக்குக் கொடுத்துத் தானும் உண்பவனே இவ்வுலகில் புகழை நிறுத்துகின்றவன். மற்றவன் கொடுப்பவனின் கைப்பொருளை ஏற்று உண்பான். அவன் பேராசைக்காரன் எனப்படுவான். பகைவனிடம் ஒன்றை விரும்பிச் செல்வது சிரிப்புக்கிடமாகும். தகுதி அறியாதவனிடம் சென்று ஒன்றைக் கேட்பது பகைமைக்கே இடமாகும். இப்பொருளில் இப் பாடல் அமைந்துள்ளது.

பிறருக்குக் கொடுத்துத் தானும் உண்பவனே இவ்வுலகில் புகழை நிறுத்துகின்றவன் என்று கூறப்பட் டது. தான் மட்டும் உண்டு கொழுத்து, பட்டினியால் வாடுபவர்களை அலட்சியப் படுத்துபவன் மிருக ஜாதியைச் சேர்ந்தவன். அவனுக்கு எந்த நிலையிலும் புகழ் இல்லை; இகழ்ச்சியே மிஞ்சும் என்பதாகும். பகைவனிடம் ஒரு பொருளை எதிர் பார்த்துச் செல்வதோ, காரிய உதவியை எதிர்பார்ப்பதோ நகைப்பிடமாகும் என்று கூறப்பட்டது. பகைவர்கள் ஒருபோ தும் நமக்கு உதவி செய்ய விரும்பமாட்டார்கள். உள்ளே நஞ்சினை மறைத்து வெளியே சிரித்துப் பேசுவார்கள். அதை நம்பி அவர்கள் உதவியை எதிர்பார்த்துச் செல்வது அறியாமை மட்டுமல்ல. மற்றவர்கள் எள்ளி நகையாடும் நிலைக்கு அவர்கள் தள்ளப்படுவார்கள். ஆகவே, எதிரிகளிடம் எப்போதும் எச்சரிக்கையாக இருக்க வேண்டும் என்பது கருத்தாகும். ஆனால், இதில் விதிவிலக் கானவர்களும் உண்டு. போர் நடக்கும் என்று உறுதியான நிலையில் துரியோதனன் பாண்டவர்களில் ஒருவனான சகாதேவனிடம் எந்தத் தேதியில் போர் செய்தால் நான் வெற்றி பெறுவேன்? என்று கேட்டான். துரியோதனன் எதிரி யாக இருந்தபோதும் சகாதேவன் அவனுக்குச் சரியான தேதி யையே குறித்துக் கொடுத்தான். கொடியவனான துரியோ தனனே சகாதேவனிடம் நம்பிக்கை வைத்தான். என்றால் சகாதேவன் எவ்வளவு நேர்மையுடையவனாக இருந்திருக்க வேண்டும் என்பதை எண்ணிப் பார்க்க வேண்டும். சகா தேவனைப் போல் இருப்பவர்கள் கோடியில் ஒருவர்கூட இருக்கமாட்டார்கள். ஆகவே, எதிரிகளிடம் உதவியை எதிர் பார்ப்பது நகைப்பிற்கிடமானதுதான். அதேபோல் அறியாத

வனிடம் சென்று ஒன்றைக் கேட்பது பகைக்கு இடமாகும் என்று கூறப்பட்டது. வேதம், ஆகமம் முதலியவற்றைச் சான்றோர்கள் அறிவார்கள்; தீயவர்கள் அறியமாட்டார்கள். அவர்களிடம் அதுபற்றிப் பேசி எதையாவது எதிர்பார்த்தால் பகைதான் வரும் என்பது கருத்து.

அ.பொ.

ஈத்து உண்பான் என்பான்-பிறர்க்குக் கொடுத்துத் தானும் உண்பவன். இசை நடுவான்-புகழை நிறுத்துவான்.

நெய்விதிர்ப்ப நந்தும் நெருப்புஅழல்; சேர்ந்து
வழுத்த வரம்கொடுப்பர் நாகர்; தொழுத்திறந்து
கன்றூட்ட நந்தும் கறவை; கலம்பரப்பி
நன்றூட்ட நந்தும் விருந்து. 61

விளக்கவுரை

வேள்வித் தீயின் சுடரானது நெய்யிடுவதால் ஓங்கி எரியும். தேவர்களை வாழ்த்தினால் வேண்டும் வரத்தினை நமக்கு அளிப்பார்கள். கறவைப் பசுவானது தொழுவைத் திறந்து கன்றை ஊட்ட விட்டால் பால் சுரக்கும். உண் கலமாகிய இலையை விரித்து நன்கு உபசரித்து உண்பித்தால் விருந்தினர் மகிழ்ச்சி அடைவர்.இப்பொருளில் இந்நான்மணிக்கடிகைப் பாடல் அமைந்துள்ளது. வேள்வியின் தீச்சுடர் நெய்இடுவதால் ஓங்கி வளரும். அந்த வேள்வியில் தேவர்களுக்கு அவி அளித்தால் வேண்டிய வரத்தினை அவர்கள் தருவார்கள். ஆகவே லௌகிக செல்வம் யாகத் தீ வளர்த்து வேத மந்திரங்களை உச்சரித்துத் தேவர்களை அன்புடன் போற்றி வணங்கினால் உடனே அவர்கள் மகிழ்ந்து அனைத்துச் செல்வங்களையும் அளிப்பார்கள் என்பது பொருள். கறவைப் பசு என்பது எப்போது பால் சுரக்கும் என்றால் அதன் கன்றினை பால் குடிக்கும்படி செய்ய வேண்டும். கன்றின் மீது பாசம் கொண்ட பசு அப்போது நமக்கும் பாலைச் சுரக்கும். பெற்றெடுத்த தாய் எப்படித் தன் குழந்தைக்குத் தன் பாலைச் சுரக்கும்படி செய்து ஊட்டுகிறாளோ அதேபோல் தாய் போன்ற பசுவும் தன் கன்றின் மீதுள்ள பரிவால் பால் சுரக்கும்

என்பது கருத்து. உண்கலமாகியை இலையை நன்கு விரித்து உபசரித்தால் விருந்தினர் மிகவும் மகிழ்ச்சியடைவார்கள் என்று கூறப்பட்டது. இந்த வாழ்க்கை தேவர்களால் விரும்பப் பட்டு அவர்களால் உபசரிக்கப்படுவார்கள் என்று கூறப்பட் டுள்ளது. ஆகவே, நம் வீடு தேடி வந்த விருந்தினர்களைப் பார்த்து முகம் சுளிக்காமல் மலர்ந்த முகத்தோடு உபசரிக்க வேண்டும். விருந்தினர்களுக்குச் செய்யும் செலவால் செல்வம் குறையாது. பல மடங்கு பெருகும். இதை அறிவுடையோர் நன்கு அறிவர். விருந்தினர்களைப் புறக்கணிப்பவர்களை மகா லட்சுமியும் புறக்கணிப்பார். இதை அறியாத மூடர்கள்தான் விருந்தினர்களைச் சரியாக உபசரிப்பதில்லை.

அ.பொ.

நெய் விதிரிப்ப-நெய்யை தெளிப்பதனால். நந்தும்-ஓங்கி எரியும்.

பழிஇன்மை மக்களால் காண்க; ஒருவன்
கெழியின்மை கேட்பில் அறிக; பொருளின்
நிகழ்ச்சியால் ஆக்கம் அறிக; புகழ்ச்சியால்
போற்றாதார் போற்றப் படும். 62

விளக்கவுரை

ஒருவனிடம் பழிக்கத்தக்க தீமை இல்லாமையை அவ னுடைய மக்களால் காண்க. ஒருவனுடைய நட்பில்லாமையைத் தனது வறுமையால் அறிக. ஒருவனுக்கு வரும் பொருள். வரவைக் கொண்டு அவனுடைய செல்வத்தை அறிந்து கொள்க. பிறர் புகழும்படி நடப்பதால் அவன் பகைவராலும் போற்றப்படுவான். இப்பொருளில் இப்பாடல் உள்ளது.

ஒருவனிடம் பழிக்கத்தக்க தீமை இல்லாமையை அவ னுடைய மக்களால் காண்க என்று கூறப்பட்டது. ஒரு மனித னின் செயல்கள் நல்லவைகளாக இருந்தால் அவனுடைய பிள்ளைகள், மகள்கள் மற்றும் சந்ததியினர் குறையின்றி வாழ்வார்கள் அதை வைத்தே அந்த ஒருவன் மதிக்கதக்கவன், நல்லவன் என்பதை அறிந்து கொள்ளலாம். ஒருவனுடைய நட்பில்லாமையை அவனுடைய வறுமையால் அறிக என்று கூறப்பட்டது. தகுந்தவர்களிடம் நட்புக் கொள்ள வேண்டும்.

தகாத நட்பை நீக்கவேண்டும். தகுதி வாய்ந்த நட்பை நிராகரிப் பதன் மூலம் நஷ்டம் வரும். செல்வம் வருவது தடைப்படும். ஆகவே, ஒருவர் வறுமையில் வாடுகிறார் என்றால் அறிய வேண்டியவற்றை அறியாமலும், தகுந்த நட்பைத் தேடாமலும் இருப்பதுதான். நட்பு என்பது செல்வத்தைக் கொடுக்கும்; புகழைக் கொடுக்கும்; பலத்தைக் கொடுக்கும். ஆகவே, தகுதி வாய்ந்த நட்புகளை நாம் உண்டாக்கிக் கொள்ள வேண்டும் என்பதாம். ஒருவனுக்கு வரும் பொருள் வரவைக் கொண்டு அவனுடைய செல்வத்தை அறிந்து கொள்க என்று கூறப் பட்டது. ஒரு மனிதன் எந்தெந்த வழிகளில் பொருள் ஈட்டு கிறான் என்பதை அறிந்தால் அவன் செல்வத்தின் அளவை தெரிந்து கொள்ளலாம். அலுவலகத்தில் வேலை செய்யும் ஒருவன் வேறு எந்தத் தொழிலையும் செய்யாமல் இருந்தால் அவருடைய மாதச் சம்பளம் மட்டுமே அவருடைய வருவாய் என்பதைத் தெரிந்து கொள்ளலாம். அவர் செல்வந்தராய் இருக்க முடியாது. ஏதோ குடும்பத்தை நடத்திச் செல்பவன்; அவ்வளவுதான். ஆனால், அலுவலகத்தில் வேலை செய்யும் ஒருவர் செல்வத்தை ஈட்டுவதில் பல வழிகளில் முயல்பவராக இருந்தால் அவர் ஒருகட்டத்தில் பெரிய செல்வந்தர் ஆகி விடுவர். அவர் என்னென்ன உத்திகளைக் கையாண்டு பொருள் ஈட்டுகிறார் என்பதை அறிந்தால் அவர் செல்வத்தின் அளவை அறியலாம் என்பது பொருள்.

அ.பொ.

பழிஇன்மை-ஒருவனிடம் பழிக்கத்தக்க தீமைஇல்லாமை. ஒருவன் கெழிஇன்மை-ஒருவனுடைய நட்பில்லாமையை. கேட்டில்-வறுமையில்.

கண்ணுள்ளும் காண்புழிக் காதற்றாம்; பெண்ணின்
உருஇன்றி மாண்ட உளவாம்; ஒருவழி
நாட்டுள்ளும் நல்ல பதிஉள; பாட்டுள்ளும்
பாடு எய்தும் பாடல் உள. 63

விளக்கவுரை

மக்களின் கண்களுக்குள்ளும் காணும்போது விரும்பப் படும் தன்மையுள்ள கண்ணும் உண்டு. பெண்களிடம் அழகில்லா விட்டாலும் (உருவத்தில்) சிறந்த குணங்கள் உண்டு. வளமற்ற

நாட்டிலும் ஒரு பகுதியில் நல்ல செழிப்புள்ள ஊர்களும் உண்டு. பாட்டுக்களில் பெருமையுடன் திகழக்கூடிய பாட்டுக் களும் உள்ளன. இப்பொருளில் இந்நான்மணிக்கடிகைப் பாடல் அமைந்துள்ளது.

மக்களின் கண்களில் விரும்பப்படும் கண்ணும் உண்டு என்று கூறப்பட்டது. அதாவது, அந்த ஆள் கண்பட்டு விட்டது. அதனால்தான் இந்தத் துன்பம் வந்தது என்று சொல்கிறோம். திருஷ்டி சுத்தி போடுகிறோம். ஆனால், அவ்வாறு இல்லாமல் சிலர் கண்கள் ஆசிர்வதிக்கும் கருணை நிறைந்த கண்களாகவும் இருக்கும் என்று நான்மணிக்கடிகை கூறுகிறது. மகான்கள், சான்றோர்கள், அறிவாற்றல் படைத்த நல்லவர்கள் ஆகியோ ரின் கண்களில் பொறாமை இருக்காது. ஆசீர்வாதமே இருக் கும் என்பது பொருளாகும். உருவத்தில் அழகில்லாத பெண் களிடம் சிறந்த குணங்கள் உண்டு என்று கூறப்பட்டது. உருவத்தில் அழகுள்ள பெண்கள் குடும்பத்தைச் சீர்குலைக்கும் குணமற்றவர்களாகவும் இருப்பதுண்டு. ஆகவே, உருவத்தை வைத்துப் பெண்களை எடைபோடக் கூடாது. நல்ல குணங் கள்தான் ஒருகுடும்பத்தை வாழவைக்கும். நல்ல குணங்கள்தான் குடிப்பெருமையை உயர்த்தும். நல்ல குணங்கள்தான் கணவன், மாமன், மாமியார் மற்றும் உறவினர்களை அரவணைத்து வாழ்க்கையை வெற்றிப் பாதைக்குக் கொண்டு செல்லும். ஆகவே, உருவத்தின் அழகைக் காணாமல் நல்ல குணங்களை வைத்தே பெண்களை எடைபோட வேண்டும் என்பது கருத்து. வறுமை உள்ள நாட்டிலும் சில ஊர்களில் செழிப்பு இருக்கும். அதேபோல் பாட்டுக்களில் பெருமையுடன் திகழும் பாட்டுகளும் உண்டு என்று கூறப்பட்டது. அதாவது, எல்லாவற்றிலும் பெருமை, சிறுமை உண்டு. மனிதரிலும் ஏற்றத்தாழ்வு உண்டு. இந்த ஏற்றத்தாழ்வு இல்லாவிடில் இந்த உலக இயக்கம் ஸ்தம்பித்து விடும். ஆகவே பெருமை, சிறுமை, உயர்வு, தாழ்வு ஆகிய வற்றைக் கொண்டதே இந்த உலகம்.

அ.பொ.

கண்உள்ளும்-மக்களின் கண்களுள்ளும். நல்லபதி-செழிப்புள்ள ஊர்.

திரிஅழல் காணின் தொழுப; விறகின்
எரிதழல் காணின் இகழ்ப; ஒருகுடியில்
கல்லாது மூத்தானைக் கைவிட்டுக்; கற்றான்
இளமை பாராட்டும் உலகு. *64*

விளக்கவுரை

திரியால் எரியும் விளக்காகிய நெருப்பைக் கண்டால் வணங்குவார்கள். விறகிலே எரிகின்ற நெருப்பைக் கண்டால் அதை மதிக்கமாட்டார்கள். ஒரு குடும்பத்தில் கல்வி கற்காத மூத்தவளைக் கைவிட்டுக் கல்விகற்ற இளம் பருவத்தையே உலகத்தார் கொண்டாடுவர். (அவன் இளைஞன் என்றாலும் அவனைப் போற்றுவர்). இப்பொருளில் இப்பாடல் உள்ளது.

திரியில் எரியும் விளக்காகிய நெருப்பை உலகத்தவர் வணங்குவர். விறகில் எரியும் பெரிய நெருப்பை வணங்குவ தில்லை. அதேபோல வயதில் பெரியவராக இருந்தாலும் அறி வற்றவர்களை மக்கள் மதிப்பதில்லை. வயதில் சிறியவராக இருந்தாலும் அறிவாற்றல் இருந்தால் அத்தகையவரைப் போற்றிக் கொண்டாடுவார்கள். ஒரு சமயம் கரிகால் சோழ னிடம் இரு முதியவர்கள் தங்கள் பிரச்சினையைத் தீர்க்க விரும்பி அரண்மனை வந்தார்கள். அப்போது கரிகாலன் இளமைப் பருவத்தைக் கொண்டவனாக இருந்தான். அதைக் கண்ட அவ்விருவரும் இந்தச் சிறுவன் நம் பிரச்சினையைத் தீர்க்கமாட்டான் என்று நினைத்துத் திரும்பினர். அதை அறிந்த கரிகாலன் முதியவர்போல் வேடமிட்டு வந்தான். அவரே அரசன் என்று அவர்களுக்கு உணர்த்தப்பட்டது. முதியவர்கள் தங்கள் வழக்கை எடுத்துக் கூறினார்கள். இருவரும் ஒப்புக்கொள்ளக் கூடிய நல்ல தீர்ப்பைக் கரிகாலன் கூறினான். அவ்விருவரும் அரசனுக்கு நன்றி தெரிவித்து விட்டு மகிழ்ச்சியுடன் விடைபெற்றார்கள். ஆகவே, நன்மதிப்பு என்பது வயது முதிர்ச்சியில் இல்லை. அறிவாற்றலில்தான் உள்ளது என்பதை அறிய வேண்டும். இதையே திரிவிளக்கு, பிறகு நெருப்பு என்று பிரித்து நான்மணிக்கடிகை விளக்கம் தருகிறது.

அ.பொ.

திரிஅழல் காணில்-திரியால் எரியும் விளக்காகிய நெருப்பைக் கண்டாய். தொழுப-வணங்குவார்கள். விறகின்-விறகிலே.

கைத்துடையான் காம்உற்றது உண்டாகும்; வித்தின்
முளைக்குழாம் நீர்உண்டேல் உண்டாம்; திருக்குழாம்
ஒண்செய்யாள் பார்த்துறின் உண்டாகும்; மற்றவள்
துன்புறுவாள் ஆகின் கெடும்.

விளக்கவுரை

கையில் பொருள் உள்ளவனுக்கு அவன் விரும்பியது உண்டாகும். விதையின் முளைக் கூட்டம் பாத்தியில் நீர் இருந்தால் தான் தோன்றும். செல்வக் குவியல் என்பது ஒளிபொருந்திய மகாலட்சுமி தாயாரின் அருள் பார்வைபட்டால் உண்டாகும். அந்த மகாலட்சுமி தாயார் வெறுத்தால் உள்ள செல்வமும் போய்விடும். இப்பொருளில் இப்பாடல் உள்ளது.

கையில் பொருள் உள்ளவனுக்கு அவன் விரும்பியது உண்டாகும் என்று கூறப்பட்டது. இதையொட்டியே பணம் பாதாளம் வரை பாயும் என்று சொல்லியிருக்கிறார்கள். செல்வம் இருந்தால் விரும்பிய எல்லாவற்றையும் பெறலாம். செல்வத்தைக் கொடுத்து தாய், தந்தையைத் தவிர வேறு எதைவேண்டுமானாலும் வாங்கலாம். செல்வம் என்பது நினைத்ததை முடிக்கச் செய்யும் பெரும் சக்தியாகும். விதையின் முளைக்கூட்டம் பாத்தியில் நீர் இருந்தால்தான் தோன்றும் என்று கூறப்பட்டது. நீர்தான் உயிர்நாடி. மனிதனாக இருந்தாலும் சரி. விளை பொருள்களாக இருந்தாலும் சரி. நீரிலிருந்துதான் உயர் சக்தி வரமுடியும். நீர் இல்லையென்றால் தாவரம், விலங்குகள், பறவைகள், மனிதன் உட்பட எதுவுமே நிலைத்து வாழமுடியாது. செல்வக் குவியல் என்பது ஒளி பொருந்திய மகாலட்சுமி தாயாரின் அருள்பார்வை பட்டால் தான்; அவள் வெறுத்தால் உள்ள செல்வமும் போய்விடும். மகாலட்சுமி யாரை வெறுக்கிறாள். சோம்பேறியாய் இருப்பவனை வெறுக்கிறாள். தொழில் செய்யாதவனை வெறுக்கிறாள். பொறாமை உள்ளவனை வெறுக்கிறாள். பெரியோர்களை

மதிக்காதவனை வெறுக்கிறாள். முயற்சியில்லாதவனை வெறுக்கிறாள். ஆகவே, மகாலட்சுமியின் அருளைப்பெற நாம் அன்புள்ளவர்களாக விளங்கவேண்டும். சுயநலமற்றவர்களாக திகழ வேண்டும். பிறருக்கு உதவி புரியும் பெருந்தன்மையுள்ளவர்களாகத் திகழவேண்டும். தொழிலில் எப்போதும் முயற்சியுடையவர்களாக, தளர்ச்சியற்றவர்களாக இருக்க வேண்டும். இரக்கமுள்ளவர்களாக இருக்க வேண்டும். பொறுமையுள்ளவர்களாக இருக்க வேண்டும். வீரமுள்ளவர்களாக இருக்க வேண்டும். இத்தகைய உயர் குணங்களையே மகாலட்சுமி விரும்புகிறாள். இந்தக் குணங்களை நீங்கள் பெற்று விட்டால் செல்வம் உங்களிடம் பெருகும் என்பது பொருள்.

அ.பொ.

கைத்துடையான்-கையில் பொருள் உள்ளவனுக்கு. முளைக் குழாம்-விதையின் முளைக்கூட்டம்.

ஊன்உண்டு உழுவை நிறம்பெறூஉம்; நீர்நிலத்துப்
புல்லினால் இன்புறூஉம் காலேயம்; நெல்லின்
அரிசியால் இன்புறூஉம் கீழ்எல்லாம்; தத்தம்
வரிசையால் இன்புறூஉம் மேல். *66*

விளக்கவுரை

மாமிசத்தை உண்டு புலி நல்ல நிறத்தை அடையும். நீர் வளம் உள்ள நிலத்தில் வளர்ந்த புல்லினால் பசுக்கள் இன்பம் அடையும். கீழ்மக்கள் அரிசிச் சோற்றைத் தின்பதால் மகிழ்ச்சி அடைவார்கள். மேன்மக்கள் தங்களிடம் உள்ள பெருமைக் குணங்களால், செயல்களால் இன்பம் அடைவார்கள். இப் பொருளில் இந்நான்மணிக்கடிகைப் பாடல் அமைந்துள்ளது. மாமிசத்தை உண்டு புலி நல்ல நிறத்தை அடையும். நீர்வளம் உள்ள நிலத்தில் வளர்ந்த புல்லினால் பசுக்கள் இன்பமடையும் என்று கூறப்பட்டது. உண்ணும் உணவுதான் மிருகங்கள் மனிதர்கள் ஆகியோருக்கு நிறத்தையும், இன்பத்தையும் அளிக்கிறது. சக்தி, பலம் அனைத்தும் உண்ணும் உணவில்தான் இருக்கிறது. கீழ்மக்கள் அரிசிச் சோற்றைத் தின்பதால் இன்பம் அடைவார்கள். மேன்மக்கள் தங்களிடம் உள்ள பெருமை

குணங்களால், செயல்களால் இன்பம் அடைவார்கள் என்று கூறப்பட்டது. சோறு கண்டவிடமே சொர்க்கம் என்று நினைத்து ஜடம் போல் செயலற்று இருப்பவர்கள் கீழ்மக்கள் என்று நான்மணிக்கடிகை கூறுகிறது. உணவு உண்பவர்கள் கீழ்மக்கள் என்று அர்த்தம்அல்ல. உண்பதையே இலட்சிய மாகக் கொண்டு எந்த நல்ல செயல்களும் இல்லாமல், எந்த நல்ல குணங்களும் இல்லாதவர்கள் கீழ்மக்களாகும் இந்த உலகம் போற்றும் நல்ல குணங்களும், செயல்களும் அமையப் பெற்ற வர்கள் அவற்றில் இன்பம் காண்பார்கள். உண்பதில் கேளிக்கை களில் அவர்களுக்கு நாட்டம் இருக்காது. ராமன் தன்னைச் சரண் அடைந்தவர்களை காப்பவர். தாய் தந்தை சொற்களைச் சிரம் மேல்கொள்பவர். தம்பிகளைச் சமமாகப் பாவிப்பவர். குடிமக்களின் குறைகளைத் துரிதமாகத் தீர்ப்பவர். பகைவனையும் இன்று போய் நாளை வா... என்று இரக்கம் காட்டியவர். இத்தகைய உயர்குணங்களால் உலகமே அவரைப் போற்றுகிறது. அக்குணங்களில்தான் அவர் இன்பம் கண்டார். வயிறு நிரம்பச் சோறு சாப்பிடுவதையே குறிக்கோளாக் கொண்டு வாழ்பவர்களால். உலகத்தவர்க்கு எந்த நன்மையும் கிடைக்காது என்பதால் அவர்கள் கீழ்மக்கள் என்று கூறப் பட்டனர்.

அ.பொ.

ஊன்உண்டு-மாமிசம் உண்டு. உழுவை-புலி; நிறம் பெறூஉம்- நல்ல நிறத்தை அடையும்.

பின்னவாம் பின்அதிர்க்கும் செய்வினை; என்பெறினும்
முன்னவாம் முன்னம் அறிந்தார்கட்கு; - என்னும்
அவாவாம் அடைந்தார்கட்கு உள்ளம்; தவாஅம்
அவாஇலார் செய்யும் வினை. 67

விளக்கவுரை

தொடங்கிய பிறகு நடுங்கச் செய்யும் செய்வினை காரி யங்களை ஆராய்ந்து செய்யாதவர்க்கு பிறகுதான் தெரியவரும். என்ன நன்மையைப் பெறுவதாயினும் ஒரு காரியத்தைத் தொடங்குவதற்கு முன்பே அதன் பயன் முன்பே தெரியவரும்.

ஒரு பொருளை விரும்பிப் பெற்றவர்களுக்கு அவர்கள் மனம் எப்படி யிருந்தாலும் அப்பொருளின் மீது ஆசை உண்டாகும். ஆசையற்றவர் செய்யும் செயல்கள் ஒருபோதும் கெடுவதில்லை. இபொருளில் இப்பாடல் உள்ளது.

தொடங்கிய பிறகு நடுங்கச் செய்யும் செயல்களாகிய காரியங்களை ஆராய்ந்து செய்யாதவர்க்குப் பிறகுதான் தெரியவரும். தன்னைவிட பலத்திலும், செல்வாக்கிலும் உயர்ந்தவர்களைக் காலநேரம் பார்த்து தான் வெல்ல முடியும். அவர்கள் அதர்மச் செயல் செய்திருக்கலாம். நமக்கு அதர்ம மான முறையில் நஷ்டத்தை ஏற்படுத்தியிருக்கலாம். அதனால் சினம் கொண்டு ஆராய்ந்து பார்க்காமல் அவர்களைத் தாக்கு வதோ அல்லது வேறுவழிகளில் துன்பம் செய்ய முயலுவதோ, நமக்கு மேலும் ஆபத்தாக முடியலாம். அத்தகைய அதர்மக் காரர்களை நன்கு ஆலோசித்துத் தகுந்த ஆதாரங்களைச் சேகரித்துச் சட்டத்தின்பிடியில் சிக்கும்படி செய்யவேண்டும். இதுவே சரியான உபாயம். இதை மறந்து மனம் போனபோக் கில் செயல்பட்டால் நாமே நடுங்கும் விளைவுகள் ஏற்படும் என்பது கருத்து. என்ன நன்மையைப் பெறுவதாக இருந்தா லும் ஒரு காரியத்தைச் செய்வதற்கு முன்பே அதன் பயன் தெரிய வரும் என்று கூறப்பட்டது. ஒரு காரியத்தை தொடங் கும் போதே அதனால் ஆவதும், அழிவதும், நன்மையும், தீமையும், தடையும் நம் கண்முன்னே தோன்றும். இவைகளை யெல்லாம் சமாளித்து விடலாம் என்று உறுதி வரும்போது அந்தச் செயலால் என்ன நன்மை கிடைக்கும் என்பதையும் அறிவாளிகள் தெரிந்து கொள்வார்கள். ஆனால், இவற்றை அறிவிலிகள் அறிய மாட்டார்கள் என்பது கருத்து. ஒரு பொருளை விரும்பிப் பெற்றவர்களுக்கு அவர்கள் மனம் எப்படி யிருந்தாலும், அப்பொருளின் மீது ஆசை இருக்கும். ஆசையில்லாமல் செய்யும் செயலில் கெடுதல் இருக்காது என்று கூறப்பட்டது. ஆசையற்று இருப்பது தெய்வநிலை; ஆசையோடு இருப்பது மனிதநிலை. தெய்வநிலையில் கெடுதல் வராது; மனிதநிலையில் கெடுதல்வரும் என்பது பொருளாகும்.

அ.பொ.

அதிர்க்கும்-நடுங்கச் செய்யும். என்பெறினும்-என்ன தன்மை பெறுவதாயினும்.

கைத்தில்லார் நல்லவர் கைத்துண்டாய்க் காப்பாரின்;
வைத்தாரின் நல்லர் வறியவர்; பைத்தெழுந்து
வைதாரின் நல்லர் பொறுப்பவர்; செய்தாரின்
நல்லர் சிதையா தவர். 68

விளக்கவுரை

செல்வத்தைப் பெற்றிருந்தும் அதை அனுபவிக்காமல் காப்பவரை விட கையில் செல்வம் இல்லாதவர் நல்லவர். செல்வத்தைச் சேர்த்து வைத்திருப்பவரை விட வறுமையில் இருப்பவர் நல்லவர். கோபம் கொண்டு இழித்துப் பேசுபவர் களை விட அவர்களைப் பொறுத்துக் கொண்டிருப்பவர் நல்லவர். நன்மை செய்தவரை விட நன்றியை மறவாதவர் நல்லவர் இப்பொருளில் இப்பாடல் உள்ளது. செல்வத்தைப் பெற்றிருந்தும் அதை அனுபவிக்காமல் இருப்பவரைவிட செல்வம் இல்லாதவர் நல்லவர் என்று கூறப்பட்டது. செல்வத்தை அனுபவிப்பதால் அந்தச் செல்வம் அழியாது. அனுபவிக்காமல் கஞ்சத்தனம் செய்தால் அது அழியும். பிறருக்குக் கொடுக்காமல், தானும் அனுபவிக்காமல் செல்வத் தைச் சேர்த்து வைப்பவன் மூடன். அவனுக்கு நல்ல பெயர் கிடைக் காது அத்தகைய மூடனைவிட செல்வம் இல்லாதவர் நல்லவர் என்று கூறப்பட்டது இந்த அடிப்படையில்தான். செல்வத்தைச் சேர்த்து வைப்பவரை விட வறுமையில் இருப்பவர் நல்லவர் என்று கூறப்பட்டது. மேலே சொல்லப் பட்ட விளக்கத்திற்குப் பொருந்தும். கோபம் கொண்டு இழித்துப் பேசுபவர்களை விட அவர்களைப் பொறுத்துக் கொண்டிருப்பவர் நல்லவர் என்று கூறப்பட்டது. பொறுமைப் பண்பு என்பது மிகப் பெரிய பலமாகும். கோபம் கொண்டு கொதிப்பவர்கள் பலவீனர்கள். பொறுமையுள்ளவர்கள் பூமியை ஆள்வார்கள். பொறுமை யில்லாமல் சினம் கொள்ப வர்கள் காடாள்வார்கள் என்று கூறியது இப்பொருளில்தான். கோபம் கொண்டவன் புகழுடன் வாழமுடியாது. பொறுமை

யுள்ளவனை எல்லோரும் புகழ் வார்கள். ஆகவே, கோபம் உள்ளவர்களைவிடப் பொறுமை யுள்ளவர்களே நல்லவர் என்பது பொருளாகும். நன்மைகளைச் செய்பவரைவிட ஒருவர் செய்த உதவியை, நன்றியை மறக் காமல் இருப்பவரே நல்லவர் என்று கூறப்பட்டது. காலத்தில் செய்யப்பட்ட உதவி சிறியதாக இருந்தாலும் அதை மறக்காத பண்புதான் சான்றோரின் பண்பு. இத்தகைய சான்றோர்கள் பல நன்மைகளைச் செய்பவர்களைவிட சிறந்தவர்கள், நல்லவர்கள் என்று கூறியது நன்றி மறவாமை மிகப் பெரிய பண்பு என்பதால்தான். ஆகவே, ஒருவர் செய்த உதவியை எந்த நிலையிலும் நாம் மறக்கக் கூடாது.

அ.பொ.

கைத்து உண்டாய்-கையிலே செல்வத்தைப் பெற்றிருந்து. வறியவர்-செல்வமற்றவர்.

மகன்உரைக்கும் தந்தை நலத்தை; ஒருவன்
முகன்உரைக்கும் உள்நிறை வேட்கை; அகல்நீர்ப்
புலத்து இயல்பு புக்கான் உரைக்கும்; நிலத்து இயல்பு
வானம் உரைத்து விடும். 69

விளக்கவுரை

தந்தையின் சிறப்பை அவன் மகன் நல்ல பண்புகளால் பிறருக்கு அறிவிப்பான். ஒருவனின் முகமே அவன் உள்ளத்தில் இருக்கும் விருப்பத்தைக் காட்டிவிடும். பரந்த நீர் நிறைந்த நிலத்தின் தன்மையை அந்நிலத்தில் பயிர் செய்யப் புகுந்தவன் சொல்லி விடுவான். உலக மக்களின் புண்ணிய பாவங்களை மழையே சொல்லிவிடும். இப்பொருளில் இந்நான்மணிக் கடிகை பாடல் அமைந்துள்ளது.

தந்தையின் சிறப்பை அவன் மகன் நல்லபண்புகளால் பிறருக்கு அறிவிப்பான் என்று கூறப்பட்டது. தந்தை சொல் மிக்க மந்திரமில்லை என்று சொல்லப்பட்டிருப் பதிலிருந்தே தந்தையின் சிறப்பு அறியப்படுகிறது. ஒரு நல்ல மகன் என்பவன் தந்தையின் சிறப்புக்களை பிறர் அறியும்படி செய்வான். அவனே சிறந்த மகன். மகனின் கடமை என்பது தன் தந்தையின் சிறப்புக்களை அனைவரும் அறியும்படி செய்வது என்பது

இதன்மூலம் குறிப்பாக உணர்த்தப்படுகிறது. ஒருவனின் முகமே அவன் உள்ளத்தில் இருக்கும் விருப்பத்தைக் காட்டி விடும் என்று சொல்லப்பட்டது. அதனால்தான் அகத்தின் அழகு முகத்தில் தெரியும் என்று சொல்லப்பட் டிருக்கிறது. உள்ளத்திலிருக்கும் ஆசை முகத்தில் வெளிப்பட்டு விடும். ஆணாக இருந்தாலும் சரி, அல்லது பெண்ணாக இருந் தாலும் உள்ளத்தில் இருப்பதை முகம் காட்டி விடும். குறிப் பறிதல் என்பது ஒரு மகத்தான செல்வம் போன்றது. மற்றவர் களின் உள்ளத்தில் இருப்பதை முகத்தைப் பார்த்துச் சரியாகக் கணிக்கும் மனிதன் ஏமாறுவதில்லை. நஷ்டம் அடைவது மில்லை. ஏனெனில் குறிப்பால் அனைத்தையும் அவன் அறிவ தால் அவன் துன்பங்களிலிருந்து நீங்கியிருப்பான் என்பது கருத்து. உலக மக்களின் புண்ணிய பாவங்களை மழையே சொல்லிவிடும் என்று கூறப்பட்டது. உலக மக்கள் தருமத்தின் வழிநின்றால் மழை குறிப்பிட்ட காலத்தில் பொழிந்து தானி யங்கள் விளைய உதவும். உலக மக்கள் பாவங்களை அதிகம் செய்தால் குறிப்பிட்ட நேரத்தில் மழை பொழியாது. காலங் கெட்டுப் பொழிந்து அழிவை உண்டாக்கும். இதிலிருந்தே உலக மக்களின் தரத்தை அறிந்து கொள்ளலாம் என்பது கருத்து.

அ.பொ.

தந்தை நலத்தை-தந்தையின் சிறப்பை. வேட்கை-விருப்பத்தை.

பதிநன்று பல்லார் உறையின்; ஒருவன்
மதிநன்று மாசறக் கற்பின்; துதிமருப்பின்
ஏற்றான்வீறு எய்தும் இனநிரை; தான் கொடுக்கும்
சோற்றான்வீறு எய்தும் குடி. 70

விளக்கவுரை

பலரும் ஒற்றுமையுடன் வாழ்ந்தால் ஊர் நல்லதாகும். குற்றமற்ற கல்வி கற்றால் ஒருவனுக்கு அறிவு சிறப்பாக இருக்கும். பசு மந்தைகள் கூர்மையான கொம்புகளுடைய எருதுகளால் பெருமையடையும். ஒருவன் ஏழைகளுக்கு அளிக்கும் சோற்றால் அவன் பிறந்த குடும்பம் சிறப்புப் பெறும். இப்பொருளில் இப்பாடல் அமைந்துள்ளது.

பலரும் ஒற்றுமையுடன் வாழ்ந்தால் ஊர் நல்லதாகும் என்று கூறப்பட்டது. ஊர் இரண்டுபட்டால் கூத்தாடிக்குக் கொண்டாட்டம் என்று சொல்வார்கள். அதேபோல் ஊர் மக்கள் ஒற்றுமையாக இல்லாவிட்டால் வெளியூரிலிருந்து வருபவர்கள் ஆதிக்கம் செலுத்த முயல்வார்கள். ஊருக்குத் தேவையான வசதிகளைச் செய்ய சம்பந்தப்பட்டவர்கள் அலட்சியம் காட்டுவார்கள். ஊர் கட்டுக்கோப்பாக இருக்கிறது என்பதை அறிந்தால் எல்லோரும் ஒத்துழைப்புத் தந்து பணிகளை விரைவாக முடிப்பார்கள். ஆகவே, பலரும் ஒற்றுமையாக இருந் தால் ஊர் நல்லதாகும்; அதாவது வளம் பெருகும் என்பது கருத்து. குற்றமற்ற கல்வி கற்றால் ஒருவனுக்கு அறிவு சிறப் பாக இருக்கும் என்று கூறப்பட்டது. குற்றமற்ற கல்வி என்றால் என்ன? ஒரு மனிதனைத் தன் சொந்தக் காலில் நிற்க வைக்கும் கல்வி; தன்னம்பிக்கையை ஏற்படுத்தும் கல்வி. அறிவைக் கூர்மையாக்கும் கல்வி; தெய்வ பக்தியை வளர்க்கும் கல்வி. நீதிநெறியில் வாழவைக்கும் கல்வி. சுயநலத்தைத் துறந்த கல்வி. பிறர் நலனுக்காக வாழ வேண்டும் என்ற பெருந்தன்மையை அளிக்கும் கல்வி. இதுவே உண்மைக் கல்விக்கு இலக்கணம். இத்தகைய கல்வி கற்பவனின் அறிவு மிகச் சிறந்து விளங்கும் என்பதாகும். பசு மந்தைகள் கூர்மையான கொம்புகளுடைய எருதுகளால் பெருமையடையும். அதாவது வீரியமுள்ள காளைகளால் பசுக்கள் சந்ததியைப் பெருக்கிப் பாலினை வழங்கும் பெருமையுடையதாகும் என்பதாகும். ஒருவன் ஏழைக்கு உணவு கொடுத்தால் தெய்வம் அவன் குடும்பத்தைப் பாதுகாத்து உயர்த்தும். ஆகவே, ஏழைகளுக்கு நாம் உணவிட வேண்டும் என்பது பொருளாகும்.

அ.பொ.

பதிநன்று-ஊர் நல்லதாகும். பல்லார் உறையின்-பலரும் ஒற்றுமையுடன் வாழ்ந்தால்.

ஊர்ந்தான் வகைய கலினமா; நேர்ந்துஒருவன்
ஆற்றல் வகைய அறம்செய்கை; தொட்ட
குளத்தனைய தூம்பின் அகலங்கள்; தத்தம்
வளத்தனைய வாழ்வார் வழக்கு. 71

விளக்கவுரை

கடிவாளத்தை யுடைய குதிரை அதன்மேல் ஏறிச் செல்பவனுடைய திறமையைப் பொறுத்திருக்கும். தருமம் செய்தல் என்பது அவன் வல்லமையைப் பொறுத்துச் சிறப்படையும். நீர் விழும் வழியின் அளவுகள் தோண்டப்பட்ட குளத்தின் அளவைப் பொறுத்தது. இல்லறத்தில் வாழ்கின்றவர்கள் செலவினங்கள் தங்கள், தங்கள் செல்வம் பெற்றிருக்கும் நிலையை ஒட்டி இருக்கும். இப்பொருளில் இப்பாடல் உள்ளது.

கடிவாளத்தை யுடைய குதிரை அதன்மேல் ஏறிச் செல்பவனுடைய திறமையைப் பொறுத்திருக்கும் என்று கூறப்பட்டது. குதிரை சவாரி செய்பவன் திறமைசாலியாக இருந்தால் ஆபத்து மிகுந்த பள்ளங்களில் செல்லும்போது கடிவாளத்தைப் பிடித்து இழுத்துப் பாதுகாப்பாகச் செல்வர். திறமையற்றவனாக இருந்தால் கடிவாளத்தைச் சரியாகப் பயன்படுத்தாமல் பள்ளத்தில் விழுந்து குதிரையின் காலை ஒடிப்பான். தன்காலையும் ஒடித்துக் கொள்வான். அல்லது உயிருக்கேகூட ஆபத்து வரலாம். ஆகவே, சவாரி செய்பவனைப் பொறுத்தே குதிரையின் சிறப்பு இருக்கும் என்பது கருத்து. தருமம் செய்தல் என்பது அவன் வல்லமையைப் பொறுத்து சிறப்படையும் என்று கூறப்பட்டது. முயற்சி யுடையவனால்தான் தருமத்தைத் தொடர்ந்து செய்ய முடியும். தொடர்ந்து தருமம் செய்பவன்தான் உலகத்தவரால் போற்றப்பட்டுப் சிறப்படைவான். ஆகவே, முயற்சியும், திறமையும் கொண்டு, செல்வத்தை ஈட்ட வேண்டும் என்பது கருத்து. நீர்விழும் வழியின் அளவுகள் தோண்டப்பட்ட குளத்தின் அளவைப் பொறுத்தது என்று கூறப்பட்டது. குளம் எந்த அளவுக்கு வெட்டப்படுகிறதோ, அந்தஅளவுக்கு நீர்விழும் என்பது பொருளாகும். இல்லறத்தில் வாழ்கின்ற வனின் செலவினங்கள் அவர்கள் பெற்றிருக்கும் செல்வ நிலையை ஒட்டியிருக்கும் என்று கூறப்பட்டது. செல்வத்திற்குத் தகுந்தபடிதான் உணவுப் பொருள்கள் வாங்குவார்கள்; துணி மணிகள் வாங்குவார்கள். பிராயணத்தின்போது பேருந்து உந்து வண்டி முதலியவற்றைப் பயன்படுத்துவார்கள். செல்வத்திற்குத் தகுந்தபடி செலவு செய்வதே விவேகம் என்பது கருத்து.

அ.பொ.

கலினமா-கடிவாளம் உடைய குதிரை. ஆற்றல் வகைய-வல்லமையைப் பொறுத்தது.

ஊழியும் யாண்டுஎண்ணி யாத்தன; யாமமும்
நாழிகை யானே நடந்தன; தாழியாத்
தெற்றென்றார் கண்ணே தெளிந்தனர்; வெட்கென்றார்
வெம்சொலால் இன்புறு வார். 72

விளக்கவுரை

நீண்ட ஊழிக்காலமும் ஆண்டுகளால் எண்ணப்பட்டு முடிவு செய்யப்பட்டன. யாமம் என்று சொல்லப்படும் சாமம் நாழிகைக் கணக்கால் அளவிடப்பட்டுக் கழிந்தன. கால தாமதம் செய்யாமல் தெளிந்த அறிவுள்ளோரிடம் கேட்டுச் சிறந்தவற்றை அறிந்தனர். அறிவிலிகள் கொடும் சொற்களைச் சொல்வதிலேயே இன்பம் அடைவார்கள். இப்பொருளில் இப்பாடல் அமைந்துள்ளது.

நீண்ட ஊழிக்காலம் ஆண்டுகளாலும், யாமம் என்று சொல்லப்படும் சாமம் நாழிகைக் கணக்காலும் அளவிடப் பட்டுக் கழிந்து விடும் என்று கூறப்பட்டது. எவ்வளவு பெரிய நீண்ட காலமாக இருந்தாலும், சிறுகச் சிறுக அவை கழிந்து போகும் என்பதாகும். காலதாமதம் செய்யாமல் தெளிந்த அறிவுள்ளோரிடம் சிறந்ததைக் கேட்டுக் கொள்வார்கள் விவேகிகள் என்று சொல்லப்பட்டது. தெளிந்த அறிவுள்ளோர் என்பவர்கள் இந்த உலகத்தில் வாழும் முறைகளை நன்கு அறிந்தவர்கள். இந்த உலகத்திற்கு நாம் எதற்காக வந்திருக்கி றோம் என்பதைப் புரிந்தவர்கள். துன்பமில்லாத வாழ்க்கைக்கு என்ன செய்ய வேண்டும் என்பதை அறிந்தவர்கள். இத்தகைய பெரியோர்களிடம் உபதேசம் ஏற்று அதன்படி நடப்பவர்கள் தான் அறிவாளிகள். ஆனால், அறிவிலிகள் கொடும் சொற்கள் பேசுவதிலேயே இன்பம் கொள்வார்கள். இத்தகையவர்கள் வாழும் வகை தெரியாமல் நரகப் படுகுழியில் விழுவார்கள். இந்த உலகத்தில் எந்த மனிதனையும் தெய்வ சக்தி கைவிடுவ தில்லை. வாழ்வதற்குத் தகுந்த வாய்ப்புகளை அந்தச் சக்தி

அளித்துக் கொண்டே இருக்கிறது. அறிவாளிகள் அதைப் புரிந்து கொண்டு வாழ்க்கையை மகிழ்ச்சியாக்கி கொள்கி றார்கள். அறிவிலிகள் அதைப் புரிந்து கொள்ளாமலே கொடிய வார்த்தைகளைப் பேசிக் கொண்டும் பயனற்ற வேலைகளைச் செய்து கொண்டும் தங்களுக்குத் தாங்களே துன்பத்தை வரவழைத்துக் கொள்கிறார்கள் என்பது கருத்து.

அ.பொ.

ஊழியும்-நீண்ட ஊழிக்காலமும். யாத்தன-முடிவு செய்யப்பட்டன.

கற்றான் தளரின் எழுந்திருக்கும்; கல்லாத
பேதையான் வீழ்வானேல் கால்முரியும்; எல்லாம்
ஒருமைத்தான் செய்த கருவி; தெரிவுஎண்ணின்
பொய்யா வித்தாகி விடும். 73

விளக்கவுரை

கல்வி யறிவு உள்ளவன் ஒரு காரியத்தில் சோர்வு அடைந் தால் மீண்டும் உற்சாகம் அடைவான். கல்வி கற்காதவன் வீழ்வானேயானால் காரியத்தில் வெற்றி பெறாமல் தோல்வி யடைவான். கால் முறிந்தவனைப்போல் மீண்டும் உற்சாகம் பெறமாட்டான். ஒரு பிறப்பில் தான் செய்த வினைகள் எல்லாம் மறுபிறப்பில் இன்ப துன்பத்திற்குக் காரணமாகும். ஆராய்ந்து காணும் உண்மையே அழியாத மோட்சத்திற்கு வித்தாகும். இப்பொருளில் இந்நான்மணிக்கடிகை பாடல் அமைந்துள்ளது.

கல்வி அறிவுள்ளவன் ஒரு காரியத்தில் சோர்வு அடைந் தால் மீண்டும் உற்சாகம் அடைவாள். ஆனால் கல்வி கற்கா தவன் வீழ்ந்தால் காரியத்தில் தோல்வி யடைவான் என்று கூறப்பட்டது. கல்வி கற்றவனுக்கு வெற்றி தோல்வி என்பது இயற்கையானது என்பது தெரியும் தோல்விக்கு அப்பால் வெற்றி காத்திருக்கிறது என்பது கல்வியாளர்களாகிய அறிவாளிகள் அறிவார்கள். ஆகவே, சோர்வு வந்தாலும் அவர்கள் மீண்டும் உற்சாகம் பெற்றுக் காரியத்தில் வெற்றி யடைவார்கள். ஆனால், கல்வி கற்காத மூடர்கள் வீழ்ச்சி வந்தால் எழமாட்டார்கள். ஏனெனில் அவர்கள் அறிவு விரக்தியில் விழுந்து விடுகிறது. அந்த விரக்தியை விரட்ட

கல்வி அறிவு அவர்களிடம் இல்லை என்பது கருத்து. ஒரு பிறப்பில் செய்த நன்மை தீமைகள்தான் மறுபிறவியில் இன்ப, துன்பங்களாக வருகின்றன என்று கூறப்பட்டது. அப்படி யென்றால் இன்பமும், துன்பமும் கலந்து வருவதே மனித வாழ்க்கை என்பது உறுதியாகிறது. என்றாலும் இன்பம் அதிகமாகவும், துன்பம் சொற்பமாகவும் இருக்கும்படி செய்து கொள்ள முடியும் என்பதும் இதனால் தெரிந்து கொள்கிறோம். நன்மைகளை மலைபோலப் பெருகச் செய்ய வேண்டும். அப்படிச் செய்தால் துன்பம் பலவீன மடைந்து போகும். இதுவே, மகிழ்ச்சியான வாழ்க்கைக்கு வழி என்பது பொருளாகும்.

அ.பொ.

கற்றான்-கல்வியறிவுள்ளவன். தளரின்-சோர்வடைதல்.

தேவர் அனையர் புலவரும்; தேவர்
தமர்அனையர் ஓர்ஊர் உறைவார்; தமருள்ளும்
பெற்றன்னர் பேணி வழிபடுவர்; கற்றன்னர்
கற்றாரைக் காத லவர். 74

விளக்கவுரை

தேவரை ஒத்தவர்கள் கற்றறிந்த புலவர்கள். தேவர்களுக்கு உறவினர்களைப் போன்றவர்கள் அப்புலவர்கள். அப்புலவர்கள் வாழும் ஊரிலே வாழ்கின்றவர்கள் புலவர்களை உறவினர் களாகவே எண்ணி வழிபடுவர். அப்புலவர்களைப் போற்றி வணங்குபவர்கள் கற்றவர்களுக்குச் சமம் ஆவார்கள். இப் பொருளில் இந்நான்மணிக்கடிகைப் பாடல் அமைந்துள்ளது.

தேவரை ஒத்தவர்களே கற்றறிந்த புலவர்கள். தேவர் களுக்கு உறவினர்களைப் போன்றவர்கள் புலவர்கள் என்று கூறப் பட்டது. புலமை என்பது சரஸ்வதிதேவியின் அருளால் ஒரு மனிதனுக்குக் கிடைக்கப் பெறுகிறது. தேவர்கள் பிரம்ம தேவரையும், சரஸ்வதி தேவியையும் வழிபடுகிறவர்கள். ஆகவே, சரஸ்வதிதேவியின் கடாட்சம் பெற்ற புலவர்கள் தேவர்களுக்கு உறவினர்களே என்பது கருத்து. ஆகவே, புலவர்கள் தேவர்களைப் போன்றவர்களே. இம்மண்ணுலகில் பிறந்து மக்களுக்கு நல்வழி காட்டும் கடமை அவர்களுக்கு

இருக்கிறது. புலவர்கள்கூறும் கருத்துக்களைக் கேட்கும் மக்கள் தாங்களும் கற்றறிந்த சான்றோர்களாக மாறுவார்கள். ஆகவே, புலவர்கள் இறைவனால் அளிக்கப்பட்ட நன்கொடை யாகும். அறிவுத் தளத்திற்கு நம்மை அழைத்துச்செல்லும் ஆற்றல் புலவர் களுக்கு உண்டு. சிற்றின்பத்தில் மூழ்கியிருப்பது கீழ்தளம். இந்தக் கீழ்தளத்தைப் புறக்கணித்து அறிவுத் தளத்திற்குச் சென்ற பிறகு அதையும்தாண்டி மூன்றாவது தளமான ஆன்மிகத் தளத்திற்குச் செல்ல வேண்டும். அந்தத் தளத்தில்தான் நிலையான பேரின்ப வாழ்வு இருக்கிறது. ஆகவே, அற்பமான கீழ்தளத்திலிருந்து அறிவுத் தளத்திற்கு அழைத்துச் செல்லும் புலவர்களைப் போற்றி அவர்கள் கூறும் வழியில் செல்ல வேண்டும்.

அ.பொ.

தேவர் அனையர்-தேவரை ஒத்தவர்கள். புலவரும்-கற்றறிந்த புலவர்களும்.

தூர்ந்தொழியும் பொய்பிறந்த போழ்தே; மருத்துவன்
சொல்லென்ற போழ்தே பிணிஉரைக்கும்; நல்லார்
விடுகென்ற போழ்தே விடுக; உரியான்
தருகெனின் தாயம் வகுத்து. 75

விளக்கவுரை

நட்பில் பொய் தோன்றிய போதே அந்த நட்புத் தூர்ந்து ஒழியும். வைத்தியன் சொல் என்றபோதே நோயுற்றவன் தன் நோயைக் கூறுவான். பெரியோர் ஒரு காரியத்தைச் செய்யாமல் விடுக என்று கூறியபோதே அதை விடவேண்டும். ஒரு பொருளுக்கு உரியவன் தருக என்று கேட்கும்போதே அவனுக்குரிய பாகத்தைப் பிரித்துக் கொடுத்து விடுக. இப்பொருளில் இப்பாடல் அமைந்துள்ளது.

நட்பில் பொய் தோன்றினால் அப்போதே அந்த நட்பு ஒழிந்து போகும். ஆகவே, நட்பில் பொய் இருக்கக் கூடாது. வஞ்சகம் இருக்கக் கூடாது. சூது இருக்கக் கூடாது. நண்ப னுக்குத் துன்பம் வந்தால் உடனே அதை நீக்க வேண்டும். நீக்குவதுபோல் போலித்தனம் காட்டினால் அதுதான் பொய் நட்பு. அது உடனே முறிந்து போகும் என்பது கருத்து.

வைத்தியன் சொல் என்று கூறினால் உடனே நோயுற்றவன் நோயைக் கூறி விடுவான் என்று கூறப்பட்டது. நோயின் துன்பம் இதற்குக் காரணம். அத்துன்பத்தை வைத்தியன் நீக்கி விடுவான் என்பதால் நோயுற்றவன் நோயின் எல்லாத் தன்மைகளையும் ஒளிக்காமல் கூறிவிடுவான் என்பதாகும். பெரியோர்கள் ஒரு காரியத்தை செய்ய வேண்டாம் என்று சொன்னால் அதை உடனே விட்டு விடவேண்டும் என்று கூறப்பட்டது. பெரியோர்கள் எல்லாவற்றையும் அறிந்த அறிவாளிகள்; அனுபவம் நிறைந்தவர்கள். ஒரு செயலைச் செய்தால் நன்மை வருமா? கேடு வருமா? என்பது அவர்களுக்கு நன்கு தெரியும். மேலோட்டமாகப் பார்த்து முடிவு செய்கிறவர்கள் பாமர மக்கள். அவர்களுக்கு நல்லது, கெட்டது எது என்பதைச் சரியாகத் தீர்மானிக்கத் தெரியாது. ஆகவே, செய்யக்கூடாத செயல்களைச் செய்து சிக்கிக் கொள்வார்கள். அதனால், மிகப் பெரிய துன்பத்தை அடைவார்கள். ஆகவே, பெரியோர்கள் வேண்டாம் என்று சொல்வதை நீக்க வேண்டும். அதேபோல் ஒரு பொருளுக்கு உரியவள் அதைக் கேட்கும்போதே கொடுத்து விடவேண்டும். அப்படிச் செய்யவில்லை என்றால் பகை வளரும்; துன்பம் வருத்தும் என்பது கருத்து.

அ.பொ.

பொய் பிறந்த போழ்தே-நட்பினருள் பொய்தோன்றிய பொழுதே. தூர்ந்து ஒழியும்-அவர்கள் நட்பு மறையும்.

நாக்கின் அறிப இனியதே; மூக்கினால்
மோந்தறிப எல்லா மலர்களும்; நோக்குள்ளும்
கண்ணினால் காண்க அணியவற்றைத் தொக்கிருந்து
எண்ணினால் எண்ணப் படும். *76*

விளக்கவுரை

இனிய சுவையை நாக்கினால் சுவைத்து அறிவார்கள். எல்லா மலர்களையும் மூக்கினால் முகர்ந்து அதன் மணத்தை அறிவார்கள். அழகுள்ள பொருள்களைக் கண்ணினால் காண்க. அறிவுள்ளோர் கூடியிருந்து எண்ணினால் சிறந்த

பொருள்கள் அடையாளம் காணப்படும். இப்பொருளில் இப்பாடல் உள்ளது.

இனிய சுவையை நாக்கினால் சுவைத்து அறிவார்கள். எல்லா மலர்களையும் மூக்கினால் முகர்ந்து மணத்தை அறி வார்கள் என்று கூறப்பட்டது. இனிய சுவையை நாக்குதான் அறியும். நல்ல மணத்தை மூக்கின் மூலமே அறிய முடியும். அதேபோல் ஒவ்வொரு சிறப்பையும் ஒவ்வொரு கருவிகளின் மூலமே நாம் அறியமுடியும் என்பது பொருளாகும். அழகான பொருள்களைக் கண்கள் படைத்தவனால்தான் காணமுடியும். குருடனால் காண முடியாது. அதேபோல் ஒரு பொருளின் உண்மையான தகுதியை அறிவுடையோர் ஆராய்ச்சி செய்து அறிவார்கள். மற்றவர்கள் அறியமாட்டார்கள். தங்கத்தைத் தட்டான் உரைத்துப் பார்த்து தான் தெரிந்து கொள்கிறான். அதேபோல் நல்ல பொருள்களை அறிவுடையோர் நன்கு ஆராய்ச்சிசெய்து மதிப்பிட்டு அடையாளம் கண்டுகொள்வர். அறிவிலிகளுக்கு வைரத்தின் மதிப்பை அறிந்து கொள்ள முடியாது. அவர்கள் பித்தளையைத் தங்கம் என்பார்கள். தங்கத்தைப் பித்தளை என்பார்கள். நல்ல பொருள்களைக் கணிக்கும் திறமை அறிவிலிகளுக்கு இருக்காது. ஆகவே, சான்றோர்கள் அடையாளம் காட்டும் பொருள்களையே தெளிந்து நாம் கொள்ளவேண்டும்; அல்லது நீக்க வேண்டும். கண்களால் காண்பதும் பொய்; காதால் கேட்பதும் பொய் தீர விசாரிப்பதே மெய் என்று சொல்வார்கள். அதேபோல் அறிவுடையோர் கூடி ஆராய்ந்து, தீர விசாரித்து நல்ல பொருள்களை அடையாளம் காட்டுவார்கள் என்பது கருத்து.

அ.பொ.

இனியதை-இனிய சுவையை. நாக்கின் அறிப-நாக்கினால் சுவைத்து அறிவார்கள்.

சாவாத இல்லை பிறந்த உயிர்எல்லாம்;
தாவாத இல்லை வலிகளும்; மூவாது
இளமை இசைந்தாரும் இல்லை; வளமையில்
கேடுஇன்றிச் சென்றாரும் இல். 77

விளக்கவுரை

பிறந்த உயிர்களில் சாவாதது ஒன்றும் இல்லை. வலிமைகளில் கெடாத வலிமை ஒன்றுமில்லை. கிழவராகாமல் இளமையோடு இருப்பவர் எவருமில்லை, செல்வத்தில் குறைவு இல்லாமல் வாழ்ந்தவர் ஒருவரும் இல்லை. இப்பொருளில் இப்பாடல் அமைந்துள்ளது.

பிறந்த உயிர்களில் சாவாத உயிர் எதுவும் இல்லை என்று கூறப்பட்டது. பிறந்த உயிர்கள் அனைத் தும் மடிந்தே ஆகவேண்டும். ஆனால், யோகியர் நினைத்தால் சித்தர்கள் நினைத்தால் மரணம் இல்லாமல் வாழமுடியும் என்று சொல்லப்படுகிறது. ஆனால், சாதாரண உயிர்கள் மடிந்தே ஆக வேண்டும். யோகி, சித்தர்களைப் பற்றி இங்குக் குறிப் பிட்டது மகான்கள் கூறிய கருத்தே ஆகும். நாம் அறியாத விஷயங்களும் பல உண்டு என்பதால் அதைக் கோடிட்டுக் காட் டினோம். நான்மணிக்கடிகைப் பாடலின்படி பிறந்த உயிர்கள் அனைத்தும் மடிந்தே தீரவேண்டும் என்பதைக் கூறி விட்டோம். வலிமைகளில் கெடாத வலிமை எதுவும் இல்லை என்று கூறப்பட்டது. உடல் வலிமை என்பது வயோதிகம் வளர்ந்தால் அழிகிறது. கல்வியின் வலிமை என்பது வாய் பேச முடியாமல் செயலிழந்தால் அழிந்து போகிறது. செல்வத்தின் வலிமை என்பது காலச் சக்கரத்தால் செல்வம் அழிந்து வலிமைபோய் விடுகிறது. உற்றார், உறவினர், நண்பர்கள் ஆகிய உறவுகளின் வலிமை கருத்து வேறுபட்டால் அழிகிறது. ஆகவே, எல்லா வலிமைகளும் அழியக் கூடியதே என்று அறிகிறோம். செல்வத்தில் குறைவு இல்லாமல் வாழ்ந்தவர் ஒருவரும் இல்லை என்று கூறப்பட்டது. செல்வம் நிலை யானது அல்ல. அரசனைப் போல் வாழ்ந்தவர்களும் ஆண்டி யாக மாறி பிச்சை யெடுப்பார்கள். ஆகவே, செல்வம் குறைவு இல்லாமல் வாழ்ந்தவர்கள் எவரும் இல்லை. பஞ்சபாண்ட வர்கள் செல்வத்தை இழந்து கானகத்தில் திரிந்தார்கள். அரிச்சந்திரன் செல்வத்தை இழந்து சுடுகாட்டைக் காவல் காத்தான். காலத் தின் சுழற்சியால் செல்வ வளம் குறையும்; நீங்கும் என்பதை இப்பாடல் உணர்த்துகிறது.

அ.பொ.

சாவாத இல்லை-சாவாதவை ஒன்றும் இல்லை. தாவாத இல்லை-கெடாத வலிமை இல்லை.

சொல்லான் அறிப ஒருவனை; மெல்என்ற
நீரான் அறிப மடுவினை; யார்கண்ணும்
ஒப்புரவினான் அறிப சான்றாண்மை; மெய்க்கண்
மகிழான் அறிப நறா. 78

விளக்கவுரை

ஒருவன் நல்லவனா, கெட்டவனா என்பதை அவர் கூறும் சொற்களால் அறிவார்கள். தெளிவான தண்ணீரால் மடுவின் ஆழத்தை அறிவார்கள். எல்லோரிடமும் காட்டும் நடுவு நிலைமைப் பண்பால் ஒருவனின் நல்ல குணங்களை அறிவார்கள். ஒருவன் கள்ளுண்டிருக்கிறான் என்பதை அவன் உடலில் காணப்படும் மகிழ்ச்சியால் அறிவார்கள். இப் பொருளில் இப்பாடல் உள்ளது.

ஒருவன் நல்லவனா? கெட்ட வனா? என்பதை அவன் கூறும் சொற்களைக் கொண்டு அறியமுடியும். பாண்டவர்கள் வனவாச காலத்தை முடித்து நாடு திரும்பினர். அப்போது ஒரு புரோகிதரை அழைத்துத் தங்களுக்குச் சேரவேண்டிய பாதி ராஜ்ஜியத்தைத் தரும்படி கேட்டனர். அப்போது துரியோதனனின் தந்தையாகிய திருதராட்டிரன் தனி மந்திரி யாகிய சஞ்சயன் என்பவனை பாண்டவர்களிடம் அனுப்பி வைத்தான். உறவினர்களை போரில் கொன்று இராஜ்ஜியத்தை அடைவதைவிட காட்டில் தவம் செய்வது மேலானது என்கிற ரீதியில் அந்தச் சஞ்சயன் பாண்டவர்களிடம் சொன்னான். திருதராட்டிரனின் கருத்தையே அவன் அங்குச் சொற்களாகப் பயன்படுத்தினான். அதாவது பாண்டவர்களுக்குச் சேர வேண்டிய நியாயமான பங்கைத் தர திருதராட்டிரனுக்கு விருப்பம் இல்லை என்பதையே இந்தச் சொற்கள் தெளிவாக் கியது அதேபோல் இப்போது நடந்து கொண்டிருக்கும் இந்த வாழ்க்கையில் ஒருவர் பேசும் சொற் களை வைத்தே அவர்கள் உள்ளத்தில் இருக்கும் உண்மையை நாம் புரிந்துகொள்ள

முடியும். ஆகவே, பிறர் சொற்களை நன்கு எடைபோட நாம் தெரிந்திருக்க வேண்டும். உதடு ஒன்றைப் பேசும். ஆனால் உள்ளம் அந்தப் பேச்சுக்குச் சம்பந்தமில்லாமல் எதிர்மறையாக இருக்கும். இதை நாம் புரிந்துகொள்ளாமல், சொற்களை மட்டும் நம்பினால் ஏமாற்றமடைவோம் என்பது கருத்து.

அ.பொ.

ஒருவனை-ஒருவன் நல்லவனா கெட்டவனா என்பதை. மெல்என்ற-மெல்லிய தெளிவான.

நாஅன்றோ நட்புஅறுக்கும்; தேற்றம்இல் பேதை
விடும்அன்றோ வீங்கிப் பிணிப்பின்; அவாஅப்
படும்அன்றோ பன்னூல் வலையில்; கெடும் அன்றோ
மாறுள் நிறுக்கும் துணிவு. 79

விளக்கவுரை

நட்பைத் துண்டிக்கும் கருவி அடக்கம் இல்லாமல் பேசும் நாக்கு அல்லவா? மிகவும் கண்டிப்பாக வற்புறுத்தினால் தெளிவற்ற அறிவிலி தீயசெய்கைகளைக் கைவிடுவான் அல்லவா? பல நூல்களின் அறிவு வலையில் அகப்பட்டால் கெட்ட ஆசைகள் அழியும் அல்லவா? பகைவரிடம் வைக்கும் நம்பிக்கையால் ஒருவன் கெடுவான் அல்லவா? இப்பொருளில் இப்பாடல் உள்ளது.

நட்பைத் துண்டிக்கும் கருவி அடக்கம் இல்லாமல் பேசும் நாக்கு என்று கூறப்பட்டது. தீயினால் சுட்டவடு கூட ஆறிவிடலாம். ஆனால், நாக்கினால் கூறும் சுடு சொற்கள் எப்போதும் ஆறாது. ஆகவே, நட்பைத் துண்டிக்கும் கழுவி நாக்கு என்பதாகும். மிகவும் வற்புறுத்தினால் தெளிவற்ற அறிவிலி நல்ல செய்கைகளைக் கைவிடுவான் என்று சொல்லப்பட்டது. அறிவிலிகளிடம் சொல்ல வேண்டிய முறையில் சொல்ல வேண்டும். கட்டாயப்படுத்தி எந்த நல்ல காரியத்தையும் அவர்களைச் செய்விக்க முடியாது. ஏனெனில், அறிவு மழுங்கிய நிலையில் இருப்பவர்கள் அவர்கள். அறிவார்ந்த சொற்களை அவர்களால் புரிந்து கொள்ள முடியாது. பக்குவமான சொற்களால் அவர்களிடம்

எடுத்துரைக்க வேண்டும் என்பது கருத்து. பல நூல்களின் அறிவு வலையில் அகப்பட் டால் கெட்ட ஆசைகள் அழியும் என்று கூறப்பட்டது. ஆகம நூல்கள், ஞான நூல்கள், வேத நூல்கள், ஞானிகளின் வரலாறுகள் ஆகிய பல நூல்களைப் படிப்பதன் மூலம் ஒரு மனிதனின் அறிவு தெளிவடைகிறது. நிலையானது எது? நிலை யற்றது எது? இன்பம் தருவது எது? துன்பம் தருவது எது? என்பதை யெல்லாம் இந்த ஞான நூல்கள் போதிக்கின்றன. ஆகவே, ஞான நூல்களை ஆர்வத்துடன் படிக்கும் ஒருவன் தெய்வத்தின் அருளால் கெட்ட ஆசைகளைக் கைவிடுவான் என்பது பொருளாகும். பகைவரிடம் வைக்கும் நம்பிக்கையால் ஒருவன் கெடுவான் என்று சொல்லப்பட்டது. பகைவர்கள் வாயால் இனிக்கப் பேசுவதை வைத்து அவர்களை ஒருபோதும் நம்பக்கூடாது. அவர்கள் உள்ளத்தில் நஞ்சு இருக்கும். சமயம் பார்த்து அந்த நஞ்சை அவர்கள் பாய்ச்சுவார்கள். ஆகவே, பகைவர்களை நம்புபவன் கெடுவான் என்பது பொருளாகும்.

அ.பொ.

நட்பு அளக்கும்-நட்பைத் துண்டிக்கும் கருவி. நாஅன்றோ-அடக்க மின்றிப் பேசுவது நாக்கு அல்லவா?

கொடுப்பின் அசனம் கொடுக்க; விடுப்பின்
உயிர்இடை யீட்டை விடுக்க; எடுப்பின்
கிளையுள் கழிந்தார் எடுக்க; கெடுப்பின்
வெகுளி கெடுத்து விடல். *80*

விளக்கவுரை

வறியோர்க்கு ஏதேனும் கொடுப்பதாய் இருந்தால் சோறு கொடுக்க வேண்டும். துறப்பதானால் உயிரைப் பெரிதாக மதித்துத் துன்பம் அடைதலை விடவேண்டும். ஒருவரை உயர்த்த விரும்பினால் செல்வம் இல்லாதவரை உயர்த்துக. ஒன்றை அழிக்க விரும்பினால் கோபத்தை அழித்து விடுக. இப்பொருளில் இப்பாடல் அமைந்துள்ளது.

வறியவர்க்கு ஏதேனும் கொடுப்பதாக இருந்தால் உணவாகிய சோறு கொடுக்க வேண்டும் என்று கூறப்பட்டது.

முதலில் வயிற்றுப் பசியைத் தீர்க்க வேண்டும். அதன்பிறகு மற்ற உதவிகளை முடிந்தால் செய்யலாம் என்பது கருத்து. பசியால் துடித்துக் கொண்டிருப்பவனிடம் உபதேசங்கள் செய்வது அவளை அவமானப்படுத்துவதாகும். ஆகவே, முதலில் சோறு. அதற்குப் பிறகு மற்றவையெல்லாம் துறப்ப தென்றால் உயிரை பெரிதாக மதித்துத் துன்பம் அடைவதை விடவேண்டும் என்று கூறப் பட்டது. உயிர் நிலையற்றது அது எப்போது பிரியும் என்று எவராலும் சொல்ல முடியாது. அதை நிறுத்திவைக்கவும் இயலாது. அப்படியிருக்க அந்த உயிரைப் பெரிதாக மதித்து பயந்து கவலைப்படுவதைவிட வேண்டும். உயிர் இருக்கும் போதே உயர்ந்த செயல்களைச் செய்ய முன்வரவேண்டும். கீழ்த்தரமான செயல்களை ஒதுக்க வேண்டும். நம்மை சுற்றி வாழ்ந்து கொண்டிருக்கும் சகோதர மக்களுக்கு முடிந்த அளவுக்கு உதவிகள் செய்ய வேண்டும். உதவி செய்ய முடியா விட்டாலும் தீமைகளைச் செய்யாமல் இருக்க வேண்டும். உயிரைத் துச்சமாக மதித்துக் கடலில் மூழ்குகிறவர்கள் முத்துக்களைப் பெறமுடியும். ஆகவே, உயிரைப் பற்றிக் கவலைப்படாமல் வீரமான செயல்களைச் செய்ய வேண்டும் என்பது கருத்து. ஒருவரை உயர்த்த விரும் பினால் செல்வம் இல்லாத வரை செல்வம் உடையவராக உயர்த்துக என்று கூறப்பட்டது. பணம் இருப்பவனிடம் மேலும் பணம் சேரும்படி செய்வதை விட பணம் இல்லாத வனுக்கு அந்தப் பணம் கிடைக்கும்படி செய்யவேண்டும். அதுவே புண்ணியச் செயலாகும். வறுமையில் வாடுபவனைச் செல்வத்தால் உயர்த்த வேண்டும். தீக்கற்றவர்களைச் செல்வத் தால் உயர்த்த வேண்டும். ஆதரவற்றவர்களைச் செல்வத்தால் உயர்த்தவேண்டும் என்பது பொருளாகும்.

கோபமே கெடுதியின் வாயில். எனவே, கோபத்தை விடவேண்டும் என்றார் விளம்பி நாகனார்.

அ.பொ.

கொடுப்பின்-வறியோர்க்கு ஏதேனும் கொடுப்பதானால். அசனம் கொடுக்க-சோறு கொடுக்க.

நலனும் இளமையும் நல்குரவின் கீழ்ச்சாம்;
குலனும் குடிமையும் கல்லாமைக் கீழ்ச்சாரம்;
வளம்இல் குளத்தின்கீழ் நெற்சாம்; பரம்அல்லாப்
பண்டத்தின் கீழ்ச்சாம் பகடு. *81*

விளக்கவுரை

அழகும், இளமையும், அதன் இன்பமும் தரித்திரத்தால் கெடும். குலத்தின் உயர்வும், ஒழுக்கமும் கல்வி கற்காதபோது கெடும். நீர் வளமில்லாத ஏரிப் பாய்ச்சலில் உள்ள நெற்பயிர் கெட்டு விடும். சுமக்க முடியாத பாரத்தைத் தாங்கும் எருதுகள் இறக்கும் இப்பொருளில் இந்நான்மணிக்கடிகைப் பாடல் அமைந்துள்ளது.

அழகும், இளமையும், அதன் இன்பமும் தரித்திரம் வந்தால் கெடும் என்று சொல்லப்பட்டது. அதாவது செல்வச் செழிப்பு நீங்கினால் இளமை கெடும். அழகு கெடும். துய்க்கும் இன்பமும் கெடும். ஏனெனில் செல்வச் செழிப்புதான் ஒரு மனிதனின் மகிழ்ச்சிக்குக் காரணமாக இருக்கிறது. மகிழ்ச்சி தான் முகமலர்ச்சியுடன் கூடிய அழகைக் கொடுக்கிறது. செல்வ செழிப்பு நீங்கினால் இந்தச் சிறப்புகள் அழியும் என்பதாகும். இந்த நீதிமொழிகள் அனைத்தும் உலகத்தில் வாழும் பாமர மக்களுக்குதான் பொருந்தும். தவசிகளும், முனிவர்களும் செல்வத்தைத் துச்சமாக மதித்துத் தெய்வ நினைவில் வாழ்பவர்கள். அவர்கள் அழகு, பொலிவு அனைத் தும் செல்வத்தால் இருப்பதல்ல. தெய்வத்தால் வரும் அழகு என்பதையும் மனதில் கொள்ளவேண்டும். குலத்தின் உயர்வும் ஒழுக்கமும் கல்வி கற்கவில்லை யென்றால் கெடும் என்று கூறப்பட்டது. கல்வி என்பது ஒழுக்கத்தை வளர்க்கக் கூடியது. அதைத்தான் கல்வி என்று சொல்லவேண்டும். மனப்பாடம் செய்து ஒப்புவிப்பது கல்வி அல்ல. சுயநம்பிக்கையைக் கொடுத்து ஒழுக்கத்தை நிலைநிறுத்தும் கல்வியைக் கற்றுக் கடைப்பிடிக்காத வர்களால் குலப் பெருமையும், ஒழுக்கமும் கெடும் என்பது பொருளாகும். நீர் வளமில்லாத ஏரிப்பாய்ச் சலில் உள்ள நெற்பயிர் கெடும் என்று சொல்லப்பட்டது. ஏரிப் பாய்ச்சலை நம்பியிருக்கும் வயல்கள், ஏரியில் நீர் இல்லை யென்றால் வாடி கெட்டுப்போகும் என்பது கருத்து. சுமக்க முடியாத பாரத்தைச் சுமக்கும் எருதுகள் இறக்கும் என்று கூறப்பட்டது. ஆகவே, எதையும் அளவோடு ஏற்ற வேண்டும். அளவுக்குமீறிப் பாரம் ஏற்றப்பட்ட எருதுகள் மட்டுமல்ல. மனிதனும் அழிந்து போவான் என்பது உட்கருத்தாகும்.

அ.பொ.

நலனும்-அழகும். பகடுசாம்-எருதுகள் இறக்கும்.

நல்லார்க்கும் தம்ஊர்என்று ஊர்இல்லை; நன்னெறிச்
செல்வார்க்கும் தம்ஊர் என்று ஊர்இல்லை; அல்லாக்
கடைகட்கும் தம்ஊர்என்று ஊர்இல்லை; தம்கைத்து
உடையார்க்கும் எவ்வூரும் ஊர். *82*

விளக்கவுரை

கல்வி, அறிவு ஒழுக்கமுள்ள நல்லவர்க்குத் தம் ஊர் என்று தனியாகச் சொல்ல ஊர் இல்லை. (எல்லா ஊரும் அவர்களது ஊரே) தவநெறியில் செல்வோருக்கும் தனித்து ஊர் இல்லை. கீழ்மக்களுக்கும் சொந்த ஊர் ஒன்று இல்லை. (அதாவது அந்தத் தகுதி அவர்களுக்கு இல்லை) தம்கையில் செல்வம் உள்ளவர்க்கு எந்த ஊரும் சொந்த ஊராகும். இப்பொருளில் இந்நான்மணிக்கடிகைப் பாடல் அமைந் துள்ளது.

கல்வி, அறிவு ஒழுக்கமுள்ளவர்களுக்குத் தம் ஊர் என்று தனியாக ஊர் இல்லை. எல்லா ஊரும் அவர்களது ஊரே ஆகும். எந்த ஊர் சென்றாலும் அத்தகைய நல்லவர்கள் போற்றப்படுவார்கள்; மதிக்கப்படுவார்கள். ஆகவே, கல்வி, மேலான அறிவு, ஒழுக்கம் ஆகியவைதான் உயர் தகுதிகள் என்பதை உணர்ந்து அந்தத் தகுதிகளை வளர்த்துக் கொண்டாய் எல்லா ஊர்களும் நமது ஊர்களாக மாறிவிடும் என்பது பொருளாகும். தவநெறியில் செல்வோர்க்கும் தனித்து ஊர் இல்லை என்று சொல்லப்பட்டது. தவநெறி செல்வோர் அனைத்து மக்களுக் கும் உரியவர் ஆகிறார். அவருடைய அறிவுரைகள் எல்லாத் துன்பங்களையும் பொசுக்கக் கூடியது. நிலையான பேரானந்தப் பெருவாழ்வுக்கு வழிகாட்டுவது. ஆகவே, எல்லா மக்களும் அந்தத் தவசிக்கு உறவானவர்களே ஆகும். எல்லா மக்களும் துறவிகளை மதித்து வணங்குவதால் எல்லா ஊர்களும் துறவிகளுக்குச் சொந்தம் என்பது பொருளாகும். கீழ்மக்களுக்கும் சொந்த ஊர் என்பது இல்லை என்று கூறப்பட்டது. கீழானவர்களைச் சொந்த ஊரில்கூட ஏற்றுக்கொள்ள மாட்டார்கள். ஒதுக்கியே வைப்பார்கள். ஆகவே, கீழ்மக்களுக்கும் எந்த ஊரும் சொந்தமாக முடியாது. கையில் செல்வம் உள்ளவர்களுக்கு எல்லா ஊர்களும் தம் ஊரே என்று சொல்லப்பட்டது. செல்வம் இருந்தால் எந்த

ஊரிலும் உண்ணலாம்; குடியிருக்கலாம்; நண்பர்களைப் பெறலாம் என்பதால் இவ்வாறு கூறப்பட்டது.

அ.பொ.

நல்லார்க்கும்-கல்வி, அறிவு ஒழுக்கமுள்ள நல்லவர்க்கும். தம் ஊர் என்று-தமது ஊர் என்று சொல்லக்கூடிய.

கல்லா ஒருவர்க்குத் தம்வாயின் சொல்கூற்றம்
மெல்இலை வாழைக்குதான் ஈன்றகாய் கூற்றம்
அல்லவை செய்வார்க்கு அறம் கூற்றம் கூற்றமே
இல்லத்துத் தீங்கு ஒழுகுவாள். 83

விளக்கவுரை

கல்வியறிவு இல்லாத ஒருவருக்குத் தம் வாயிலிருந்து வரும் சொல்லே எமனாகும். வாழைக்குத் தான் ஈன்ற வாழைத் தாரே எமன். அல்லாதவை செய்வார்க்குத் தரும தேவதையே எமன். வீட்டிலிருந்து கொண்டு கெட்ட வழியில் நடக்கின்ற பெண்தான். கணவனுக்கு எமன் ஆவாள். இப் பொருளில் இந்நான்மணிக்கடிகைப் பாடல் அமைந்துள்ளது.

கல்வியறிவு இல்லாத ஒருவருக்குத் தம் வாயிலிருந்து வரும் சொல்லே எமனாகும் என்று கூறப்பட்டது. அடக்க மில்லாத அறிவற்ற சொற்களைக் கல்வியறிவு இல்லலாதவர் களே சொல்வார்கள். அப்படிப் பேசுவதால் சில சமயங்களில் உயிரை இழக்கும் படியான துன்பமும் வரும் என்பது கருத்து. வாழைக்கு தான் ஈன்ற வாழைத்தாரே எமன் என்று கூறப் பட்டது. வாழை மரம் ஒரு குலை ஈன்றால் அதன் வாழ்வு முடிந்து அழிந்துபோகும். ஆகவே, வாழைக்கு அதன் தார் அன்றோ எமன் எனப்பட்டது. அல்லாத செயல்களைச் செய் வோர்க்குத் தரும தேவதையே எமன் என்று கூறப்பட்டது. எளியவரைத் துன்புறுத்துதல், பெரியோரை அவமதித்தல், கொலை, களவு செய்தல் போன்ற அதர்ம காரியங்களைச் செய்பவர்களுக்குத் தரும தேவதையே எமனாக வந்து அழிக்கும் என்பது பொருளாகும். வீட்டிலிருந்து கொண்டு கெட்டவழியில் நடக்கும் பெண் தன் கணவனுக்கு எமன் ஆவாள் என்று கூறப்பட்டது. தன் கணவன் இருக்க வேறு ஆண்களிடம், தொடர்பு வைப்பவள் தன் கணவனின் புகழை அழிப்பவள். செல்வத்தை அழிப்பவள். சந்ததியை அழிப்பவள். தன் கணவனையே அழிப்பவள். ஆகவே, அத்தகையப்

பெண்கள், பெண்கள் சமுதாயத்திற்கே களங்கம் என்பது பொருளாகும்.

அ.பொ.

கல்லா ஒருவருக்கு-கல்வியறிவில்லாத ஒருவர்க்கு. கூற்றம்-எமனாகும்.

நீரான் வீறுஎய்தும் விளைநிலம்; நீர்வழங்கும்
பண்டத்தால் பாடுஎய்தும் பட்டினம்; கொண்டாளும்
நாட்டால் வீறுஎய்துவர் மன்னவர் கூத்துஒருவன்
ஆடலால் பாடு பெறும். 84

விளக்கவுரை

தண்ணீர் பாய்வதால் நஞ்சை நிலம் வளம் பெறும். கடல் கொடுக்கும் முத்துப் போன்ற பண்டங்களால் நகரம் சிறப்படையும். கைப்பற்றி ஆளும் நாட்டால் மன்னன் சிறப்புப் பெறுவான். ஒருவனின் நடனத்தினால் நாடகம் சிறப்படையும். இப்பொருளில் இப்பாடல் உள்ளது.

தண்ணீர் பாய்வதால் நஞ்சை நிலம் வளம் பெறும். கடல் தரும் முத்துக்களால் நகரம் சிறப்படையும் என்று கூறப் பட்டது. தண்ணீர் வளம் இருந்தால் நெல், கரும்பு போன்ற பயிர்கள் செழித்து வளரும். அதனால் நிலம் சிறப்படையும் என்பதாகும். கடலில் எடுக்கப்படும் முத்துக்களால் வாணிகம் பெருகி அந்த நகரம் செலவாக்குப் பெறும் என்பது கருத்து ஒரு நாட்டைக் கைப்பற்றி ஆளும் அரசன் அந்த நாட்டினால் சிறப்புப் பெறுவான் என்று கூறப்பட்டது. ஒரு நாட்டைக் கைப்பற்றும் வீரமுடைய அரசனால் அந்த நாட்டை வளப் படுத்தவும், பாதுகாக்கவும் முடியும்; குடிமக்களை உயர்த்தவும் முடியும். இந்த ஆளுமைத் திறம் உள்ள அரசன் அந்த நாட்டினால் பெருமை அடைவான் என்பது பொருளாகும். ஒருவனின் நடனத்தினால் நாடகம் சிறப்படையும் என்று கூறப்பட்டது. நாடகம் என்பது மக்களுக்குப் படிப்பினையை உணர்த்தும். அந்த நாடகத்தின் பொருளுக்கு ஏற்றவாறு நடனம் ஆடுவதால் நாடகத்திற்கு மெருகு ஏறுகிறது. சிவ பெருமாள் ஆடும் நடனத்தால் உலகம் சிறப்புப் பெறுகிறது. அப்பெருமான் ஒவ்வொரு மனிதர்களுக்குள்ளிருந்தும் ஆடுகி றான். அம்மையுடன் சேர்ந்து அவன் ஆடும் ஆட்டத்தால் தீவினைகள் அழிகின்றன. அதனால்தான் ஆடல் வல்லான்

என்று அவள் போற்றப்படுகிறாள். அதேபோல் நாடகத்தில் ஆடப்படும் சிறந்த நடனம் மக்களைக் கிளர்ந்தெழச் செய்வ தாக இருக்க வேண்டும்; நன்மை தருவதாக இருக்க வேண்டும் என்பது கருத்து.

அ.பொ.

நீரான்-தண்ணீர் பாய்வதால். விளைநிலம்-நஞ்சை நிலம்.

ஒன்றுஊக்கல் பெண்டிர் தொழில்நலம்; என்றும்
நன்றுஊக்கல் அந்தணர் உள்ளம்; பிறன்ஆளும்
நாடுஊக்கல் மன்னர் தொழில்நலம்; கேடுஊக்கல்
கேளிர் ஒரீஇ விடல். 85

விளக்கவுரை

கணவனுடன் ஒன்றுபட்டு அவனை உற்சாகப்படுத்துதல் பெண் மக்களின் செயல் சிறப்பாகும். எந்நாளும் நன்மையில் உற்சாகம் காட்டுதல் அறநெறியாளர்களின் கருத்தாகும். பிறர் ஆளும் நாட்டைக் கைப்பற்ற முயலுதல் அரசனின் சிறப்பாகும். சுற்றத்தாரை விட்டுப் பிரிந்து விடுவது கெடுதலை அடைய முயல்வதாகும். இப்பொருளில் இப்பாடல் உள்ளது.

கணவனுடன் ஒன்றுபட்டு அவனை உற்சாகப்படுத்துதல் பெண்களின் செயல் சிறப்பாகும். மனைவி என்பவள் கணவனை உற்சாகப்படுத்தவேண்டும். அவனைத் துன்பத்தில் ஆழ்த்தக் கூடாது. தாய்க்குப்பின் தாரம் என்று சொல்சார்கள் தாய், பிள்ளைகளை எந்த நிலையிலும் கைவிடமாட்டாள். தன் பிள்ளையை உற்சாகப்படுத்தி உயர்த்துபவள் தாய். அந்தத் தாய்க்குப் பிறகு வரும் தாரம் என்று அழைக்கக் கூடிய மனைவி தன் கணவனை உற்சாகப்படுத்திச் செயல்புரிய வைக்க வேண்டும். அவன் விரக்தியடைந்து வீழும்படி செய்யக் கூடாது என்பதாகும். நன்மையில் உற்சாகம் காட்டுவது அறநெறியாளர்களின் இயல்பு என்று சொல்லப்பட்டது. உலக மக்களுக்கு எது நன்மை விளைவிக்குமோ அதில் அற நெறியாளர்கள் உற்சாகம் காட்டுவார்கள். உலக மக்களுக்குத் தீமை வரும் செயல்களைத் தடுப்பார்கள். சுயநலமற்ற அந்த அறநெறியாளர்களைக் கடவுளின் வடிவங்கள் என்றே சொல்ல வேண்டும். அத்தகைய அறநெறியாளர்களை மதித்து அவர்கள் கூறும் வார்த்தைகளைச் செயல்படுத்த வேண்டும் என்பது கருத்து. பிறர் ஆளும் நாட்டைக் கைப்பற்ற முயலுதல்

அரசனின் சிறப்பு என்று கூறப்பட்டது. பிறர் நாட்டை அபகரிப்பது தவறு என்று சொல்லப்படுகிறது. ஆனால், நான்மணிக்கடிகை அது அரசனுக்குச் சிறப்பு என்று கூறுகிறது. அரசனுக்குப் புகழைக் கொடுக்கலாம். பிறர் நாட்டை அபகரிப்பது தருமத்திற்கு உட்பட்டதா என்ற வினாவும் சிந்திக்கத்தக்கதே. சுற்றத்தாரை விட்டுப் பிரிவது கேட்டினைத் தரும் என்று கூறப்பட்டது. சுற்றத்தாரை விட்டு ஒருவன் நீங்கினால் எதிரிகளால் பல துன்பங்கள் வரும். ஆகவே சுற்றத்தாரை விட்டுப் பிரியச் சமாளித்து வாழவேண்டும் என்பது கருத்து.

அ.பொ.

ஒன்று-கணவனுடன் ஒன்றுபட்டு. ஊக்கல்-உற்சாகப்படுத்துதல்.

கள்ளாமை வேண்டும் கடிய வருதலால்;
தள்ளாமை வேண்டும் தகுதி உடையன;
நள்ளாமை வேண்டும் சிறியரோடு; யார்மாட்டும்
கொள்ளாமை வேண்டும் பகை. 86

விளக்கவுரை

பிறகு தீமை வரும் என்பதால் பிறர் பொருளைத் திருடாமல் இருக்க வேண்டும். தமக்குத் தகுந்த ஒழுக்கங்களைக் கைவிடாமல் பின்பற்ற வேண்டும். கீழ்மக்களிடம் நட்புக் கொள்ளாமல் இருக்க வேண்டும். எவரிடத்திலும் விரோதம் கொள்ளாமல் இருக்க வேண்டும். இப்பொருளில் இப்பாடல் அமைந்துள்ளது.

பிறகு தீமை வரும் என்பதால் பிறர் பொருளைத் திருடாமல் இருக்க வேண்டும் என்று சொல்லப்பட்டது. திருட்டு அம்பலமானால் சிறைத் தண்டனை கிடைக்கும்; சில நேரங்களில் அடி, உதைகளும் விழும்; பெயர் கெடும். ஆகவே, திருட்டைவிடவேண்டும் என்பது கருத்து. தமக்குத் தகுந்த ஒழுக்கங்களைக் கைவிடாமல் பின்பற்ற வேண்டும். பொய் சொல்லாமை, களவு செய்யாமை, கள் உண்ணாமை, பிறர் பொருளை விரும்பாமை, மனதைக் கண்ட விடங்களில் அலையவிடாமல் தெய்வ நினைவில் இருத்தல், சுயநலமில்லாமை ஆகிய உயர் குணங்கள்தான் ஒழுக்கம் என்பதற்கு இலக்கணமாகும். இந்த ஒழுக்கங்களை எவ்வளவு துன்பம் வந்தாலும் கைவிடக்கூடாது அப்படி ஒழுக்கத்தை வளர்த்தால்

மனிதன் தெய்வமாகவே மாறுவான் என்பதாகும். கீழ்மக்க ளிடம் நட்பு வைக்கக் கூடாது; எவரிடத்திலும் விரோதம் வைக்கக்கூடாது என்று கூறப்பட்டது. கீழ்மக்கள் எப்போதும் தீமைகளை செய்வதில்தான் அக்கறை காட்டுவார்கள். அத் தகையவர்களிடம் நட்பு வைத்தால் நம்மையும் தீமை செய்ய வைத்து விடுவார்கள்; அதனால் நாம் மிகவும் துன்பம் அடைய நேரும். ஆகவே, கீழ்மக்களின் நட்பை விட்டு விடவேண்டும். எவரிடமும் விரோதம் கொள்ளக்கூடாது என்று கூறப்பட்டது.

தருமத்தின் வடிவமான இராமர் விளையாட்டாகக் கூனியின் மீது மண் உருண்டையால் அடித்தார். அதைப் பெரிதாக எடுத்துக் கொண்ட கூனி அவரைக் காட்டுக்கு அனுப்பினாள். ஆகவே, எவரிடமும் விரோதம் வளரும் செயல்களைச் செய்யக்கூடாது என்பது கருத்து.

அ.பொ.

கடியவருதலால்-பின்பு தீமைகள் பலவருதலால். கள்ளாமை வேண்டும்-பிறர் பொருளைத் திருடாதிருக்க வேண்டும்.

பெருக்குக நட்டாரை நன்றிபால் உய்த்துத்;
தருக்குக ஒட்டாரைக் காலம்அறிந்து ஆங்கு;
அருக்குக யார்மாட்டும் உண்டி; சுருக்குக
செல்லா இடத்துச் சினம். 87

விளக்கவுரை

தன்னிடம் நட்புக் கொண்டவரை நன்மையில் செலுத்திப் பெருக்குக. பகைவரைக் காலம் பார்த்துச் செருக்குடன் வெல்க. எவ்விடத்திலும் உண்பதைக் குறைத்திடுக. செல்லாத இடத்தில் கோபத்தைத் தணித்துக்கொள்க. இப்பொருளில் இந்நான்மணிக் கடிகைப் பாடல் உள்ளது.

தன்னிடம் நட்புக் கொண்டவரை நன்மையில் செலுத்துக. பகைவரைக் காலம் பார்த்து வெல்க என்று கூறப்பட்டு, நண்பர்களை நல்ல செயல்களில் இறங்கி உயர்வடையும்படி செய்ய வேண்டும். நண்பர்களிடம் மறைந்திருக்கும் ஆற்றல் களை அவர்களுக்கு உணர்த்தி அந்த ஆற்றல்களைச் சரியாகப் பயன்படுத்துமாறு வழிமுறைகளை வகுத்துக் கொடுக்க வேண்டும் என்பது பொருளாகும். பகைவர்களைக் காலநேரம் பார்த்து வெல்லவேண்டும். நம் முடைய பகைவர் தருமத்திற்கு

விரோத செயல்களைச் செய்தால் தான் பகைவர்கள் என்பதை நினைவில் கொள்ள வேண்டும். அத்தகைய பகைவரை நேரம், காலம் பார்த்து ஜெயிக்க வேண்டும். தருமத்திற்கு மாறான செயல்களைச் செய்கிறவர்கள ஒருகட்டத்தில் பலவீனத்தை அடைந்தே தீருவார்கள். அந்தக் காலம் வரும்வரை பொறுத் திருக்க வேண்டும். காலம் வாய்த்த போது சாதுரியத்தால் அவர்களை வென்று காட்டவேண்டும். தன் தவறுகளை அந்தப் பகைவர்கள் உணரும்படி செய்ய வேண்டும் என்பது பொருளாகும். எவ்விடத்திலும் உண்பதைக் குறைத்துக் கொள்க என்று கூறப்பட்டது. பெருந்தீனி தின்ப வர்கள் அறிவை மழுங்கச் செய்கிறார்கள். உடல் உறுப்புக்கள் முழுவதும் உணவை ஜீரணம் செய்யவே பயன்பட்டால் அறிவு வளர்ச்சி எப்படி ஏற்படும். ஆகவே, மிதமான உணவே சிறந்தது என்பது கருத்து. செல்லாத இடத்தில் கோபத்தைத் தணித்துக் கொள்க என்று கூறப்பட்டது. செல்லுபடியாகாத இடத்தில் கோபம் கொண்டால் மதிப்புக் கெடும்; அவமானம் வரும். ஆகவே, அப்படிப்பட்ட இடத்தில் சினத்தைக் கட்டுப் படுத்துவதே சிறந்தது என்பது கருத்து.

அ.பொ.

நட்டாரை-தன்னுடன் நட்புக் கொண்டவர். நன்றின்பால்-நன்மையிலே. உய்த்து-செலுத்தி.

மடிமை கெடுவார்கண் நிற்கும்; கொடுமைதான்
பேணாமை செய்வார்கண் நிற்கும்ஆம்; பேணிய
நாணின் வரைநிற்பர் நற்பெண்டிர்; நட்டுஅமைந்த
தூணின்கண் நிற்கும் களிறு. 88

விளக்கவுரை

சோம்பேறித்தனம் கெட்டுப் போகிறவனிடம் நிற்கும் தீமை என்பது சான்றோர்கள் விரும்பாத செயலைச் செய்கிற வர்களிடம் நிற்கும். நாணத்தின் எல்லையிலே நிற்பவர்கள்தான் நல்ல பெண்கள் ஆவர். ஆழமாக நட்டிருக்கின்ற தூணின் வலிமையில் யானை கட்டுப்பட்டு நிற்கும். இப்பொருளில் இப் பாடல் அமைந்துள்ளது.

சோம்பேறித்தனம் என்பது கெட்டுப் போகிறவனின் குணம் என்று சொல்லப்பட்டது. உணவு இல்லை. உடை இல்லை என்று சதா புலம்புபவன் சோம்பேறியாகத்தான் இருப்பான். ஏதேனும் வேலை செய்தாய் நிச்சயமாக உணவும்,

உடையும் கிடைத்தே தீரும். ஆனால் உழைக்காத சோம்பேறி தான் பட்டினி, பட்டினி என்று புலம்புவான். அவன் கேடு வரும்பாதையில் செல்கிறான் என்பது பொருளாகும். சான்றோர்கள் விரும்பாத செயல்களைச் செய்கின்ற அறிவிலிகளிடம் தீமை நிற்கும் என்று கூறப்பட்டது. சான்றோர்கள் ஒரு செயலைச் செய்யாதே என்று சொன்னால் அரிய ஆழ்ந்த பொருள் இருக்கும். அப்பொருளை உணராத அறிவிலிகள் அச்செயலைச் செய்து தீமையில் உழல் வார்கள் என்பது கருத்து. நாணத்தின் எல்லையில் நிற்பவர்கள் தான் நல்ல பெண்டிர் என்று கூறப்பட்டது. நாணம்தான் பெண்களுக்கு அழகைத் தருவது. மதிப்பைத் தருவது நாண மில்லாத பெண் குடும்பப் பெண்ணாக வாழஇயலலாது. ஊரா ரால் அவள் பலவாறாகப் பழிக்கப்படுவாள். ஆகவே, பெண்கள் நாணத் துடனும், அடக்கத்துடன் இருக்க வேண்டும் என்பது கருத்து.

ஆழமாக நட்டிருக்கின்ற தூணின் வலிமையில் யானை கட்டுப்பட்டு நிற்கும் என்று கூறப்பட்டது. வலிமை யுள்ள தூணில் கட்டினால்தான் யானை அடங்கும். அதே போல் அறிவாற்றல் நிரம்பியவர்களிடம் தான் இந்த உலகம் இரக்கம் காட்டுகிறது; எளியவர்களை உலகம் மதிப்பதில்லை. அடக்கி ஆளும் திறம் உள்ளவர்கள் கூறுவதையே கேட்டு நடப்பது உலகத்தவர் இயல்பு.

அ.பொ.

மடிமை-சோம்பேறித்தனம். கெடுவார்கள்-கெட்டுப் போகின்றவ னிடம்.

மறைஅறிப அந்தண் புலவர்; முறையொடு
வென்றி அறிப அரசர்கள்; என்றும்
வணங்கல் அணிகலம் சான்றோர்க்கு; அஃதன்றி
அணங்கல் வணங்கின்று பெண். 89

விளக்கவுரை

அந்தணர்களாகிய அறிஞர்கள் வேதங்களை அறிவார்கள். அரசர்கள் நீதியுடன் ஆளவும், போரில் வெற்றி பெறவும் அறிவார்கள். சான்றோர்க்கு எப்போதும் கர்வமின்றி வாழ்தலே அணிகலனாகும். கணவனைத் தவிர்த்து வேறு ஒரு தெய்வத்தை வணங்காதிருப்பவளே கற்புள்ள பெண்ணாவாள். இப் பொருளில் இந்நான்மணிக்கடிகைப் பாடல் அமைந்துள்ளது.

அந்தணர்களாகிய அறிஞர்கள் வேதங்களை அறிவார்கள் என்று கூறப்பட்டது. அந்தணர் என்ற சொல் சுத்தமானவர் களைக் குறிக்கிறது. தூய்மையுடையவர்களே அந்தணர்கள். அவர்கள் வேதத்தை அறிந்தவர்கள். வேதவேள்வி எழுப்பித் தேவர்களிடம் செல்வம், புத்திரப்பேறு, பதவி போன்றவற்றைப் பெறுவதற்கு வழிவகுப்பவர்கள் அந்த அந்தணர்கள் என்பது கருத்து.

அரசர்கள் நீதியுடன் ஆளவும், போரில் வெற்றி பெறவும் அழிந்திருப்பார்கள். நீதியுடன் நாட்டை ஆளவும், போரில் வெற்றிபெறும் மதிநுட்பமும், ஆற்றலும்வேண்டும். இந்தத் தகுதிகள் உள்ளவனே அரசன் என்பது பொருளாகும். சான் றோர்க்குக் கர்வமின்றி வாழ்வதே அணிகலன் என்று கூறப் பட்டது. தங்கநகைகள் அணிகலன்அல்ல; வைர நகைகள் அணிகலன் ஆகாது. நவரத்தின ஆபரணங்களும் அணிகலன் ஆகாது. கர்வமின்றி அடக்கத்துடன் இருப்பதே விலைமதிக்க முடியாத அணிகலனாகும். இந்த அணிகலன் சான்றோர் களிடமே இருப்பது. அற்பர்களிடம் இந்த அணிகலன் இருக் காது. உடல் முழுவதும் தங்கத்தையும், வைரத்தையும் பூட்டி யிருந்தாலும், கர்வமுள்ளவர்கள், தாழ்ந்தவர்களே என்பது கருத்து. கணவனைத் தவிர்த்து வேறு தெய்வங்களை வணங் காது இருப்பவளே கற்புடைய பெண் என்று கூறப்பட்டது. கணவன் மிகவும் முக்கியமானவன் என்பதை உணர்த்த இருப்படிக் கூறியிருக்கலாம். அனைவரையும் படைத்த மூலப் பொருளாகிய இறைவனை போற்ற வேண்டும் என்பதையும் மறக்கக் கூடாது.

அ.பொ.

அந்தண்புலவர்-அந்தணராகிய அறிஞர்கள். மறைஅறிப- வேதங்களை அறிவார்கள்.

பட்டாங்கே பட்டொழுகும் பண்புடையாள் காப்பினும்
பெட்டாங் கொழுகும் பிணையிலி-முட்டினுந்
சென்றாங்கே சென்றொழுகும் காமம் காப்பினுங்
கொன்றான்மேல் நிற்கும் கொலை. 90

விளக்கவுரை

நல்லவன் காவல் இல்லாவிட்டாலும் குலப்பெண் தன் கற்பைக் காப்பாற்றி நிற்பாள். நல்லவனாய் இல்லாதவன்

காவல் இருந்தாலும் நெறிதவறி விடுவாள். இடையூறு வந்தாலும் காதல் தன் வழியே செல்லும். முயன்று மறைத்தாலும் கொலை செய்தவனை காட்டிக்கொடுத்துவிடும் இப்பொருளில் இப்பாடல் உள்ளது.

குலப் பெண்ணானவள் தனக்குக் காவல் எதுவும் இல்லாவிட்டாலும் தன் கற்பைக் காப்பாற்றிக் கொள்வாள். ஏனெனில் கற்புக்கரசிக்கு மிக வலிமை உண்டு. தன் சம்மதமின்றி எந்த ஆணையும் நெருங்க முடியாதபடி செய்ய அவளால் இயலும். ஆகவே, கற்பே அவளுக்குப் பெருங்காவலாக இருக்கும் என்பது கருத்து. அதேபோல் குலப் பெண்ணாக இல்லாமல் சபலபுத்தி கொண்ட பெண்களுக்கு எவ்வளவு காவல் இருந்தாலும் அவள் நெறிதவறிவிடுவாள். ஏனெனில் அவள் கற்புக்கரசி இல்லை. ஊருக்குப் பயந்து நாடகம் போடுபவள். ஆகவே, காவல் அயர்ந்து இருக்கும்போது அறநெறி தவறி நடப்பாள் என்பதாகும். இடையூறு வந்தாலும் காதல் தன் வழியே செல்லும் என்றும் கூறப்பட்டது. காதல் என்றால் அன்பு என்று பொருள்படும். அந்த அன்புக்கு எத்தகைய தடை நேர்ந்தாலும் அது மாறாது. தன் போக்கில் செல்லும். அம்பிகாபதி, அமராவதி, லைலா, மஜ்னு போன்ற காதல் காவியங்கள் இதனை நமக்கு ஏற்கனவே உணர்த்தியிருக்கின்றன. காதல் என்ற அன்பு மிகுந்த சக்தி வாய்ந்தது. அது எல்லாத் தடைகளையும் மீறக்கூடியது என்பது பொருளாகும். கொலை செய்தவன் தடயங்களை எப்படித்தான் மறைத்தாலும் எப்படியும் மாட்டிக் கொள்வான். ஏனெனில் கொலை செய்வது அசுரசக்தி. அதை வெளிப்படுத்து வது தெய்வசக்தி. தெய்வ சக்தியின் முன் அசுரசக்தி வெற்றி காணவே முடியாது. சத்தியத்தை மூடி மறைக்க முடியாது. அது வெளிப்பட்டு விடும் என்பது கருத்து.

அ.பொ.

பட்டாங்கே பட்டொழுகும்-காவல் இல்லாவிட்டாலும். கொன்றான் மேல்நிற்கும் கொலை-கொலை செய்தவனைக் காட்டிக் கொடுத்துவிடும்.

வன்கண் பெருகின் வலிபெருகும் பான் மொழியார்
இன்கண் பெருகின் இனம்பெருகும் சீர்சான்ற
மென்கண் பெருகின் அறம்பெருகும் வன்கட்
கயம் பெருகிற் பாவம் பெரிது. *91*

விளக்கவுரை

அஞ்சாமை பெருகினால் வலிமை பெருகும்; அன்பு பெருகினால் சுற்றத்தார் பெருகுவர்; அருட்குணம் பெருகினால் அறச் செயல் பெருகும்; கொடுமைக் குணம் பெருகினால் தீச் செயல் பெருகும். இப்பொருளில் இப்பாடல் அமைந்துள்ளது.

அஞ்சாமை பெருகினால் வலிமை பெருகும். அன்பு பெருகினால் சுற்றத்தார் பெருகுவர் என்று கூறப்பட்டது. அச்சம் இல்லாமைதான் வலிமைக்கு வித்து. அச்சத்தை அறவே ஒழித்துக்கட்ட வேண்டும். அச்சம் இல்லாதிருத்தலே சுவர்க்கம். அச்சமே மரணம். அச்சமே நாகம். தெய்வத்தின் குழந்தைகளாகிய நமக்கு அச்சம் தேவையற்றது. ஆகவே, அச்சமில்லாமல் வாழ்வது வலிமை பெருகச் செய்யும் என்பதாம். அன்பு பெருகினால் சுற்றத்தார் பெருகுவர். ஏனெனில் அன்பு என்கிற சங்கிலியில் பிடிபடாதவர் எவரும் இருக்க முடியாது. அன்பு என்னும் பிடியில் சிவபெருமான் அகப்படுவான். திருமாலும், பிரம்மாவும் அடிமுடி காணமுடியாத சிவபெருமான் அன்பு வலையில் வெகுவிரைவில் பிடிபடுவான். இறைவனே அன்பு வலையில் விழும்போது சுற்றத்தார் எம் மாத்திரம்? ஆகவே, அன்பு என்னும் அஸ்த்திரத்தால் எல்லா உறவினர்களையும் வசப்படுத்தி வலிமையோடும், பலத்தோடும் வாழ வேண்டும் என்பது கருத்து. அருட்குணம் பெருகினால் அறச்செயல்கள் பெருகும் என்று கூறப்பட்டது. அருட்குணம் என்பது பொறுமை, இரக்கம், கருணை, தெய்வபக்தி, சுயநலமில்லாமை ஆகிய குணங்களைக் குறிப்பதாகும். இந்தக் குணம் நிறைந்திருந்தால் மற்ற உயிர்களுக்குப் பயன்படும் அறச் செயல்கள் பெருகும். மற்ற உயிர்களுக்குப் பயன்படும் அறச் செயல் என்பது அந்த உயிர்களுக்குள் உறையும் இறைவனைக் காணச் செய்வதாகும். எல்லாத் நன்மைகளையும்விட இதுவே தலையாய அறச் செயலாகும். எல்லா தானத்தைவிட ஆன்மிக தானமே தலைசிறந்தது. அருள் குணம் நிறைந்தவர்கள்தான் இதனைச் செய்ய முடியும் என்பது பொருளாகும்.

அ.பொ.

வன்கண் பெருகின்-அஞ்சாமை பெருகினால். வலிபெருகும்-வலிமை பெருகும்.

இளமைப்பருவத்துக் கல்லாமை குற்றம்
வளமிலாப் போழ்தத்து வள்ளன்மை குற்றம்
கிளைஞரில் போழ்தில்சினம் குற்றம் குற்றம்
தமரல்லார் கையகத் தூண். 92

விளக்கவுரை

இளமையில் கல்லாத செயல் எப்போதும் தீமை தரும். வருவாய் இல்லாதபோது ஈகைச் செயல் தீமை தரும். சுற்றத்தார் இல்லாதபோது சினமடைதல் தீமை தரும். அன்பில்லாதவர் வீட்டில் உணவு உண்பது தீமை தரும். இப்பொருளில் இப் பாடல் அமைந்துள்ளது.

இளமையில் கல்வி கற்காதது எப்போதும் தீமையைத் தரும் என்று சொல்லப்பட்டது. இளமைக் காலத்தில்தான் கல்வி ஆழமாகப் பதியும். கல்மேல் எழுதிய எழுத்துப் போல் அக்கல்வி உறுதியாக இருக்கும். முதுமைக் காலத்தில் பல்வேறு பிரச்சனைகளில் சிக்க நேரும். நோய் முதலான தளர்ச்சி தாக்கும். ஆகவே, இளமையில் கல்வி கற்காமல் இருப்பது தீமையை உண்டாக்கும் என்று கூறப் பட்டது. வருவாய் இல்லாதபோது தானதருமங்கள் செய்வது தீமையை உண்டாக்கும் என்று கூறப்பட்டது. வள்ளல் தன்மை தொடர வேண்டுமானால் வருமானம் பெருகிக் கொண்டே இருக்க வேண்டும். வருமானம் இல்லாத நேரத்தில் ஈகைச் செயலில் ஈடுபட்டால் ஒன்றுமே இருக்காது. ஒன்றுமே இல்லாமல் பொருள் ஈட்ட முடியாது. தொடர்ந்து ஈகைச் செயலைச் செய்யவும் முடியாது. ஆகவே, கொடைகூட கால, நேரம் பார்த்துச் செய்யவேண்டும் என்பதாகும். சுற்றத்தார் அருகில் இல்லாதபோது கோபம் கொள்வது தீமையை உண்டாக்கும் எனப்பட்டது. சுற்றத்தார்கூடி இருக்கும்போது சினம்கொண்டு ஒருவரை எச்சரிக்கலாம். அதனால் பகைவர் அச்சம்கொள்வர். தனியாக இருக்கும்போது கோபத்தைக் காட்டினால் எதிரிகளால் தீமை வர வாய்ப்பிருக்கிறது. ஆகவே, கோபம்கூட எச்சரிக்கை உணர்வுடன் காட்டப்படவேண்டும் என்பது கருத்து. அன்பில்லாதவர் வீட்டில் உணவு உண்டது அவமானத்தைத் தரும். ஆகவே, அத்தகையவர் வீட்டில் அமுதமே கிடைத்தாலும் உண்ணக்கூடாது என்பது பொருளாகும்.

அ.பொ.

இளமைப் பருவத்து கல்லாமை-இளமையில் கற்காத செயல். குற்றம்-தீமை தரும்.

எல்லா விடத்தும் கொலைதீது மக்களைக்
கல்லா வளர விடல்தீது நல்லார்
நலந்தீது நாணற்று நிற்பின் குலம்தீது
கொள்கை யழிந்தக் கடை. *93*

விளக்கவுரை

கொலை செய்ய எண்ணுவது கொடியவருக்கும் தீது; பிள்ளைகளைப் படிக்க வைக்காமல் வளர்ப்பது பெற்றோர் களுக்குத் தீது. நாணமில்லாமல் முன்வந்துநிற்பது பெண்களுக் குத் தீது. கொள்கையின்றி நடப்பது குடிப்பெருமைக்கு தீது. இப் பொருளில் இப்பாடல் அமைந்துள்ளது.

கொலை செய்ய நினைப்பது கொடியவர்களுக்குத் தீமையையே உண்டாக்கும் என்று கூறப்பட்டது. கொலை என்பது பஞ்சமா பாதகங்களில் ஒன்று; தொடர்ந்து வரும் பிறவிகளிலெல்லாம் அது துன்பத்தைத் தரும். தெய்வத் தன்மை வெளிப்படாமல் தீயவன் என்ற அவப் பெயரைக் கொடுத்து நரகத்தில் ஆழ்த்தும். ஆகவே, கொலை செய்வதைக் கைவிடவேண்டும் என்பது கருத்து. பிள்ளைகளைப் படிக்க வைக்காமல் இருப்பது பெற்றோர் களுக்குத் தீமை விளைவிக் கும். ஏனெனில் பிள்ளை படித்து முன் னேறினால்தான் அந்தக் குடும்பம் தழைக்கும். இல்லாவிடில் குடிப்பெருமை கெடும்; வறுமை சூழும்; பல தீமைகள் வரும். ஆகவே, பெற்றோர்கள் பிள்ளைகளைப் படிக்க வைக்கவேண்டும் என்பது கருத்து. நாணம் இல்லாமல் பெண் முன்னே வந்து நிற்பது தீமை என்று கூறப்பட்டது. நாணம்தான் பெண்ணுக்கு அணிகலன். அதுவே, அவனுக்கு மரியாதையை வாங்கித் தரும். நாணம் இல்லாதவனை இந்த உலகம் பழிக்கும். கெட்ட பெயர்களை வாங்கிக் கொடுக்கும். ஆகவே, பெண்கள் நாணத்துடன் வாழ்வதே சிறப்பாகும். கொள்கையின்றி நடப்பது குடிப் பெருமைக்குத் தீமை என்று கூறப்பட்டது. கொள்கை என்பது இப்படித்தான் வாழவேண்டும் என்று வகுத்து வாழ்வதாகும். அதாவது, குறிக்கோளை வகுத்து வாழ்வது. குறிக்கோள் இல்லாத வாழ்க்கை துடுப்பு இல்லா படகுபோல் திசைமாறி விடும் என்பது பொருளாகும்.

அ.பொ.

கொலை தீது-கொலை செய்வது தீமை தரும். மக்களைக் கல்லா வளர விடுதல் தீது-பிள்ளைகளைப் படிக்க வைக்காமல் இருப்பது பெற்றோருக்குத் தீமை தரும்.

ஆசாரம் என்பது கல்வி; அறம்சேர்ந்த
போகம் உடைமை பொருள்ஆட்சி; யார்கண்ணும்
கண்ணோட்டம் இன்மை முறைமை; தெரிந்து ஆள்வான்
உள்நாட்டம் இன்மையும் இல். 94

விளக்கவுரை

ஆசாரம் என்பது கல்வியின் பயனாகும். அறத்துடன் சேர்ந்த போகம் என்பது இன்பத்தை அடைவதே ஆகும். செல்வத்தை ஆளும் திறனே அதன் பயனாகும். எவரிடமும் தனிப்பட்ட முறையில் தயவு தாட்சண்யம் காட்டாமல் நடுவு நிலையில் நிற்பதே நீதியாகும். அமைச்சர்களுடன் கூடி ஆலோசனை செய்து, தானும் உண்மையை அறிகின்றவனே சிறந்த ஆட்சியாளன். இப்பொருளில் இப்பாடல் உள்ளது.

ஆசாரம் என்பது (தூய்மை) கல்வியின் பயன் என்று கூறப்பட்டது. தூய்மையைத் தருவதே கல்வி. ஒழுக்கத்தை நிலை நிறுத்துவதே கல்வி. சுயநலத்தைத் துறந்து தியாகம் செய்வதே கல்வி கற்றதன் பயன் ஆகும். இத்தகைய உயர் குணங்களைத் தராத கல்வியைக் கல்வி என்று கூறமுடியாது என்பது இதற்கு அர்த்தமாகும். அறத்துடன் சேர்ந்த போகம் என்பது முறைப்படி தாலி கட்டிய பெண்ணுடன் சேர்ந்து பெறும் இன்பமாகும். வேசிகளுடன் கூடிப் பெறும் இன்பம் அறம் அற்றது என்பது கருத்து. எவரிடமும் தயவு தாட்சண்யம் காட்டாமல் நடுவு நிலையில் நிற்பதே முறைமை நீதியாகும் என்று கூறப்பட்டது. நஞ்சுநீர் அருந்திய பீமன், அருச்சுனன், நகுலன், சகாதேவன் ஆகியோர் மாண்டனர். அங்கு வந்த தருமன் துயரம் அடைகிறான். அப்போது அசரீரி உன் தம்பி களில் ஒருவனைப் பிழைக்க வைக்கிறேன். பெயரைக் கூறுக என்று கேட்கிறது. உடனே தருமபுத்திரன் நகுலன் எழட்டும் என்கிறான். நடக்கப்போகும் யுத்தத்தில் வெற்றிக்குக் காரண மாக இருக்கப்போகும் பீமன், அருச்சுனன் ஆகியோரை எழுப்பாது ஏன் நகுலன் எழட்டும் என்று கேட்கிறாய் என்று அசரீரி கேட்டது. வெற்றிக்குக் காரணம் பீமனோ, அருச் சுனனோ இல்லை. தருமமே வெற்றியை நிர்ணயிக்கிறது. என்

தந்தை பாண்டு மகாராஜாவுக்கு இரு மனைவியர். குந்திதேவி யின் நினைவாக நான் மிஞ்சினேன். என் சிற்றன்னை மாத்திரி தேவி நினைவாக நகுலன் எழட்டும். இதுவே தருமம் என்றான். தருமன் இதுவே நடுநிலைப் பண்பு. இந்தப் பண்பால் எல்லா சகோதரர்களையும் உயிர்ப்பித்துக் கொடுத்தது அசரீரி. எக்காரியமாக இருந்தாலும் அமைச்சர்களுடன் ஆலோசித்து முடிவு எடுப்பவனே சிறந்த அரசன். அவனே வெற்றி அடை வான் என்பது கருத்து.

அ.பொ.

ஆசாரம் என்பது-நல்லொழுக்கம் என்று கூறப்படுவது. அறம் சேர்ந்து-அறத்துடன் சேர்ந்தது.

கள்ளின் இடும்பை களிஅறியும்; நீர்இடும்பை
புள்ளினுள் ஓங்கல் அறியும்; நிரப்புஇடும்பை
பல்பெண்டிர் ஆளன் அறியும்; கரப்பு இடும்பை
கள்வன் அறிந்து விடும். *95*

விளக்கவுரை

கள்கிடைக்காமையால் வரும்துன்பத்தைக் கள்ளுண் பவன் அறிவான். தண்ணீர் இல்லாமையால் வரும் துன்பத்தை வானம்பாடி பறவை அறியும். வறுமையின் துன்பத்தைப் பல பெண்களை மணந்தவன் அறிவான். ஒரு பண்டத்தை ஒளித்து வைப்பதால் வரும் துன்பத்தைத் திருடன் அறிந்துகொள்வான். இப்பொருளில் இந்நான்மணிக்கடிகைப் பாடல் அமைந்துள் ளது.

கள் கிடைக்காத துன்பத்தைக் குடிகாரன் அறிவான். தண்ணீர் இல்லாத துன்பத்தை வானம்பாடி அறியும் என்று கூறப்பட்டது. எப்போதும் குடிமயக்கத்தில் இருப்பவனுக்குக் கள்கிடைக்கவில்லை என்றால் துன்பம் அடைவான். உணவு, தண்ணீர் போன்றவைகளைவிட கள்ளே குடிகாரனுக்குப் பிரதானம் அதேபோல் வானம்பாடி பறவைக்குத் தண்ணீர் இல்லாவிடில் பெரும் துன்பம் அடையும். எல்லா உயிர்களும் தண்ணீர் இல்லாவிட்டால் துன்பம்தான் அடையும். ஆனால், நான்மணிக்கடிகை வானம்பாடி பறவையே அதன் துன்பத்தை அறியும் என்று கூறுகிறது. ஒருவேளை வானம்பாடி தண்ணீ ரையே பிரதான உணவாகக் கருதலாம். அதனால், இப்பாடல் அப்பறவையைக் குறிப்பிடுவதாக இருக்கலாம்.

வறுமையின் துன்பத்தைப் பல பெண்களை மணந்தவன் அறிவான் என்று கூறப்பட்டது. ஒரு மனைவியைக் கொண்டவனே படாதபாடுபட்டுக் குடும்பத்தை நடத்துவான். பல பெண்களை மணந்தவன் வறுமையை நன்குஅறிவான். ஏனெனில் பல பெண்களின் பேச்சுக்களுக்கும், ஏச்சுக்களுக்கும் அவன் ஆளாவான். வறுமை வந்தால் பெண்கள் வரம்பு கடந்து பேசுவார்கள். ஆகவே, வறுமைத் துன்பத்தைப் பல பெண்களை மணந் தவன் அறிவான் என்பது கருத்து. ஒரு பண்டத்தை யாரும் அறியாதவாறு ஒளித்து வைத்தால் திருடன் துன்பம் அடை வான் என்று கூறப்பட்டது. ஏனெனில் எளிதாகத் திருடிச் செல்ல முடியாத நிலைக்கு அவன் தள்ளப்படுவதால் அவன் துன்பம் அடைவான். ஆகவே, உயர்ந்த பொருள்களைத் திருடர்கள் காணாதவாறு ஒளித்து வைப்பது நன்மையே ஆகும். திருடனுக்குத் துன்பம் வருவதில் நமக்கு மகிழ்ச்சி தானே? திருடன் துன்பப்படக்கூடாது என்பதற்காக உயர்ந்த பொருள்களை அவன் கண்களில்படும்படி வைப்பது அறியாமை. இச்சிந்தனைகளைத் தூண்டும்விதத்தில் இப்பாடல் உள்ளது.

அ.பொ.

கள்ளின் இடும்பை-கள்கிடைக்காமையால் வரும் துன்பம்.
களிஅறியும்-கள்ளுண்பவன் அறிவான்.

வடுச்சொல் நயம்இல்லார் வாய்த்தோன்றும்; கற்றார்வாய்ச்
சாயினும் தோன்றா கரப்புச்சொல்; தீய
பரப்புச் சொல் சான்றோர்வாய்த் தோன்றா; கரப்புச் சொல்
கீழ்கள்வாய்த் தோன்றி விடும். 96

விளக்கவுரை

குற்றமுள்ள சொற்கள் அன்பில்லாதவர் வாயிலிருந்து வரும். கற்றவர்கள் வாயிலிருந்து வஞ்சனையுள்ள சொற்கள் தோன்றாது. தீமையை வரவவைக்கும் சொற்கள் சான்றோர்கள் வாயிலிருந்துவராது. உண்மையை மறைக்கும் பொய்மொழிகள் கீழ்மக்கள் வாயில் வந்து விடும். இப்பொருளில் இப்பாடல் உள்ளது.

குற்றமுள்ள சொற்கள் அன்பில்லாதவர் வாயிலிருந்து வராது என்று சொல்லப்பட்டது. அன்பு என்பது தெய்வத்தின் வடிவம்; அன்பு என்பது சுயநலமற்றது. ஆகவே, குற்றமுள்ள சொற்கள் அன்புள்ளவர்களிடமிருந்து வராது என்பது கருத்து.

கற்றவர்கள் வாயிலிருந்து வஞ்சனைச் சொற்கள் வராது என்று சொல்லப்பட்டது. வஞ்சனை என்பது உள்ளொன்று வைத்துப் புறமொன்று பேசுதலைக் குறிக்கும். வஞ்சனை என்பது நடுவுநிலைமை நீங்கி ஒருபக்கம் சாய்தலைக் குறிக்கும். வஞ்சனை என்பது தருமத்தைமீறி அடாவடித்தனமாக நடந்து கொள்ளுதலைக் குறிக்கும். இத்தகைய கெட்ட சொற்கள் கற்றவர்கள் வாயிலிருந்துவராது. அத்தகைய கல்வியைத் தான் கல்வி என்று அழைக்க வேண்டும் என்பதும் பொருளாகும். தீமையை வரவைக்கும் சொற்கள் சான்றோர்கள் வாயிலிருந்து வராது என்று கூறப்பட்டது. தீமைகளைத் திருத்தத்தான் சான்றோகள் முயல்வார்கள் அதை பரவ விடமாட்டார்கள். ஆனால் கீழ்மக்கள் பொய்யைப் பரப்புவார்கள்; கலகம் செய்வார்கள். சகுனியின் பொய்யுரைதான் துரியோதனைச் சாகடித்தது. பாண்டவர்களை நாம் வென்றுவிடலாம் என்று சொன்னவன் சகுனியே. விதுரர், துரோணர், பிஷ்மர் போன்ற சான்றோர்கள் பாண்டவர்களைத் தேவர்களாலும் வெல்ல முடியாது என்று உண்மை உரைத்தார்கள். ஆனால், துரியோ தனன் மூளையில் உண்மையை ஏறவில்லை. கீழோனாகிய சகுனி சொன்னதையே அவன் நம்பினான்; அதனால் அழிந்தான். ஆகவே, சான் றோர்கள் கூறும் அறிவுரையையே நாம் கேட்க வேண்டும். சகுனி போன்ற கீழ்மக்களின் சொற் களை நம்பக்கூடாது என்பது கருத்து.

அ.பொ.

வடுச்சொல்-குற்றமுள்ள சொற்கள். நயம் இல்லாதார் வாய்-அன்பில்லாதவர் சொல்.

வால்இழையார் முன்னர் வனப்புஇலார் பாடுஇலர்;
சாலும் அவைப்படின் கல்லாதான் பாடுஇலன்;
கற்றான் ஒருவனும் பாடுஇலனே; கல்லாதார்;
பேதையார் முன்னர்ப் படின். *97*

விளக்கவுரை

ஒளி பொருந்திய ஆபரணங்களை அணிந்த பெண்கள் முன் அழகில்லாத ஆண்கள் பெருமையடைய மாட்டார்கள். கல்வி கேள்விகளில் நிரம்பிய அவையில் கல்லாதவன் புகுந்தால் பெருமையடைய மாட்டான். கல்வி கற்றவன் ஒருவன் கல்லா தவனுடன் சேர்ந்தால் பெருமை அடைய மாட்டான். அதே கற்றவன் அறிவில்லாதவர்களுடன் சேர்ந்தாலும் பெருமை

யடைய மாட்டான். இப்பொருளில் இப்பாடல் அமைந்துள் ளது.

ஒளி பொருந்திய ஆபரணங்களை அணிந்த பெண்கள் முன் அழகில்லாத ஆண்கள் பெருமையடைய மாட்டார்கள் என்று கூறப்பட்டது. அழகுள்ள பெண்கள் ஆபரணம் அணிந்து மிளிரும்போது அழகற்ற ஆண்கள் அருகில் நின்றால் பெருமை அடைய முடியாது. அதாவது, வெளி அழகில் பெருமை அடைய முடியாது என்பது பொருள். கல்வி கேள்விகளில் சிறந்தவர்கள் கூடியிருக்கும் சபையில் கல்லாதவன் புகுந்தால் அவனுக்குச் சிறப்புக் கிடைக்காது. ஏன்னெனில் உயர்ந்த தத்துவங்களைக் கல்லாதவன் அறியமாட்டான். ஆகவே, அவள் அங்கே செல்லாக் காசாக இருப்பான் என்பது கருத்து. கல்வி கற்றவன் கல்லாதவன் முன் சேர்ந்தால் பெருமையடைய மாட்டான். அதேபோலக் கற்றவன் அறிவில்லாதவர்களுடன் சேர்ந்தாலும் பெருமையடையமாட்டான் என்று கூறப்பட்டது. கல்வியின் உயர்ந்த கருத்துக்களை அறிவில்லாதவர்கள் ஏற்க மாட்டார்கள்; முரண்பாடான கருத்துக்களை வெளிப்படுத்து வார்கள். ஆகையால், கற்றவன் அங்கே பெருமையடைய முடியாது. கல்வி கற்றவர்கள்தான் கல்வியின் சிறப்பை அறிவார்கள். கல்லாதவர்கள் அதனை அறிய முடியாது. ஆகவே, அவர்களிடமிருந்து கல்வி கற்றவள் விலகியிருத்தலே பெருமை என்பது பொருளாகும்.

அ.பொ.

வால்இழையார்முன்-ஒளிபொருந்திய ஆபரணங்களை அணிந்த பெண்கள் முன். வனப்புஇலார்-அழகில்லாத ஆண்கள்.

மாசு படினும் மணிதன்சீர் குன்றாதாம்;
பூசிக் கொளினும் இரும்பின்கண் மாசுஒட்டும்;
பாசத்துள் இட்டு விளக்கினும் கீழ்தன்னை
மாசுடைமை காட்டி விடும். 98

விளக்கவுரை

அழுக்குப் படிந்தாலும் இரத்தினம் தன் சிறந்த ஒளியில் குறையாது; கழுவி எடுத்தாலும் இரும்பிலே மாசு ஒட்டும். (துருப் பிடிக்கும்). கீழ்மக்களை அன்புடன் நடத்தினாலும் தம்அறியாமையை அவர்கள் வெளிப்படுத்துவார்கள் (திருந்த மாட்டார்கள்). கீழ்மக்களை விலங்கிட்டு விளக்கி அவன் குற்றங்களை எடுத்துக்காட்டினாலும் தன் கீழ்மைத் தன்மை

யையே காட்டுவார்கள்.(அதாவது குற்றத்தை ஒப்புக்கொண்டு திருந்த மாட்டார்கள்). இப்பொருளில் இப்பாடல் அமைந் துள்ளது.

அழுக்குப் படிந்தாலும் இரத்தினம் தன் ஒளியில் குறை யாது. பலமுறை கழுவி எடுத்தாலும் இரும்பிலே மாசு ஒட்டும் என்று சொல்லப்பட்டது. அதேபோல் உயர்ந்தோர்கள் எப்போதும் ஒளி வீசிக் கொண்டேதான் இருப்பார்கள். ஆனால், கீழ்மக்கள் அன்புடன் நடத்தப்பட்டாலும்கூட தங்கள் அறியாமையையே வெளிப்படுத்துவார்கள். திருந்த மாட்டார்கள் என்பது பொருளாகும். இரத்தினம் என்பது சான்றோரைக் குறிக்கும். கீழ்மக்களை விலங்கிட்டு அவன் தவறுகளைச் சுட்டிக்காட்டினாலும் தன் குற்றத்தை ஒப்புக் கொள்ளமாட்டான். தான் செய்தது சரி என்று கூறியே தன் கீழ்மைத்தனத்தை வெளிப்படுவத்துவான் என்று கூறப்பட்டது. இந்த நிலை தீவினையால் வருவதாகும். தீவினை மிகுந்தவன் தான் உண்மையை ஒப்புக்கொள்ளமாட்டான். மற்றவர்களால் அவன் இகழ்ச்சியாக நடத்தப்படுவான்; தீவினை என்பது அறிவை மழுக்குகிறது; ஆற்றலை அழிக்கிறது. ஆகவே, தீவினைகளைக் களைய நல்ல செயல்களைக் குவிக்க முயல வேண்டும் என்பது கருத்து.

அ.பொ.

மாசு படினும்-அழுக்குப் படிந்தாலும். மணி-இரத்தினம்.

எண்ஒக்கும் சான்றோர் மரீஇயாரின் தீராமை;
புண்ஒக்கும் போற்றார் உடன்உறைவு-பண்ணிய
யாழ்ஒக்கும் நட்டார் கழறும்சொல்; பாழ்ஒக்கும்
பண்புடையாள் இல்லா மனை. 99

விளக்கவுரை

பெரியவர்களுடன் நீண்டநாள் பழகியதுபோல் நினைத்துப் பிரியாமல் வாழ்தல் அறிவுக்கு ஒப்பான வாழ்க்கையாகும். விரும்பாதவருடன் கூடி வாழ்தல் புண்பட்டது போன்ற துன்பம் தரும். நண்பர் இடித்துரைக்கும் சொல் இசையமைக்கப்பட்ட யாழைப் போல் இன்பம் தரும். நல்ல குணமுடைய பெண் இல்லாத வீடு பாழான வீட்டை ஒத்திருக்கும். இப்பொருளில் இந்நான்மணிக்கடிகைப் பாடல் அமைந்துள்ளது.

பெரியவர்களுடன் நீண்டநாள் பழகியது போல் பிரியாமல் வாழ்வது அறிவுக்கு ஒப்பான வாழ்க்கை என்று கூறப்பட்டது. சான்றோர்களுடன் வாழ்வது சொர்க்கத்தில் திளைப்பது போலாகும். விரும்பாத ஒருவரிடம் கூடி வாழ்தல் புண்பட்ட வாழ்க்கை போலாகும். ஆகவே, சான்றோர்கள் நட்பை உறுதியாகப் பற்றவேண்டும். பாண்டவர்கள் பகவான் கிருஷ்ணரை உறுதியாகப் பற்றிக் கொண்டனர். துரியோதனன் தீயவனான சகுனியைப் பற்றிக் கொண்டான். விளைவு என்ன ஆயிற்று! பாண்டவர்கள் வெற்றி பெற்றார்கள். துரியோதனன் யுத்த களத்தில் அழிந்தான். ஆகவே, விரும்பத்தகாதவர்களுடன் நாம் வாழக்கூடாது என்பது கருத்து. நண்பர் இடித்துரைக்கும் சொல் இசையமைக்கப்பட்ட யாழைப்போல் இன்பம் தரும் என்று சொல்லப்பட்டது. தவறு என்று தெரிந்தால் இடித்துரைக்கும் நண்பனே உண்மையான நண்பன். எது செய்தாலும் கண்டிக்காதவன் நட்புக்கு அருகதையற்றவன். தவறைச் சுட்டிக்காட்டி நல்வழியில் திருப்புபவனே நண்பன். ஆகவே, இசையமைக்கப்பட்ட யாழைப்போல் அந்த நண்பனின் சொற்கள் இன்பம் தரும் என்று சொல்லப்பட்டது. நல்ல குணமுடைய பெண் இல்லாத வீடு பாழான வீட்டை ஒத்திருக்கும் என்று கூறப்பட்டது. குடும்பப் பெண்தான் வீட்டிற்குத் திருவிளக்கு. அந்தப் பெண் குணமற்றவளாக இருந்தால் வீடு பாழ் ஆகும். குலப் பெருமை பாழ் ஆகும். கணவனின் பெயர் பாழாகும் என்பது கருத்து.

அ.பொ.

சான்றோர்-பெரியோர்களுடன். மரீஇயாரின்-நீண்டநாள் பழகியவர்களைப்போல்.

ஏரி சிறிதாயின் நீர்ஊரும்; இல்லத்து
வாரி சிறிதாயின் பெண்ஊரும்; மேலைத்
தவம் சிறிது ஆயின் வினைஊரும்; ஊரும்
உரன்சிறிது ஆயின் பகை. 100

விளக்கவுரை

குளம் சிறியதாக இருந்தால் தண்ணீர் வெளியில் வழிந்து போய்விடும். வீட்டில் வருமானம் குறையுமானால் மனையாள் வரம்பு கடந்து பேசுவாள். முற்பிறப்பிலே செய்த நல்வினை சிறிதாக இருக்குமானால் தீவினைகள் பெருகிவிடும். ஒருவ

னுடைய வலிமை குறையுமானால் பகைவர் அவனைச் சூழ்ந்து கொள்வார்கள். இப்பொருளில் இந்நான்மணிக்கடிகை பாடல் அமைந்துள்ளது.

குளம் சிறியதாக இருந்தால் தண்ணீர் வெளியில் வழிந்துபோய் விடும். வீட்டின் வருமானம் குறையு மானால் மனையாள் வரம்பு கடந்து பேசுவாள் என்று கூறப் பட்டது. குளம் சிறியதாக இருந்தால் போதுமான நீரைச் சேமிக்க முடியாது. அதேபோல் வீட்டின் வருமானம் குறைந்தால் மனைவி வரம்பு கடந்து பேசுவாள். உபரிநீர் தங்காமல் வெளியேறுவதுபோல், வருமானம் குறைந்தால் வரம்பு மீறிய சொற்கள் வெளியே வரும் என்பது கருத்து. நல்வினை குறைவாக இருந்தால் தீவினை பெருகி துன்பத்தைத் தரும் என்று சொல்லப்பட்டது. கடலில் சிறிது விஷத்தைக் கலக் கிறீர்கள். அந்தக் கடல் நீரைக் குடித்தால் மனிதனுக்கு ஒன்றும் ஆவதில்லை. அதே விஷத்தை ஒரு சிறிய டம்ளர் நீரில் கலந்து உண்டால் உயிருக்கு ஆபத்தாகிறது. அதேபோல் நல்வினைகள் கடல்போல் இருந்தால் சிறிய தீவினையின் தாக்கம் பாதிக்காது. நல்வினை குறைந்தால் தீமைகள் வரும்; வலிமை குறையும். எதிரிகள் சூழ்ந்து கொள்வார்கள். ஆகவே, நம் செயல்களே நம் விதியை நிர்ணயம் செய்கின்றன. விதி என்பது நமக்கு நாமே உருவாக்கிக் கொள்வதுதான். தீவினைகளால் துன்பம் வரு கிறது என்றால் நல்வினைகளை மலைபோல் குவித்துத் தீமைகளை நீக்கிவிடவும் நம்மால் முடியும்; தீமைகளை வெல்லும் வழி இதுதான். இச்சிந்தனைகளைத் தூண்டும் விதத்தில் மேலே கூறப்பட்ட பாடல் அமைந்துள்ளது.

அ.பொ.

ஏரி சிறியதாயின்-குளம் சிறியதாக இருந்தால். நீர் ஊரும்-தண்ணீர் வெளியே வழிந்து சென்று விடும்.

வைததனால் ஆகும் வசையே; வணக்கமது
செய்ததனால் ஆகும் செழுங்கிளை; செய்த
பொருளினால் ஆகுமாம் போகம்; நெகிழ்ந்த
அருளினால் ஆகும் அறம். *101*

விளக்கவுரை

பிறரைத் திட்டுவதால் உண்டாவது பழிச் சொல்லே ஆகும். எல்லோருக்கும் வணக்கம் செய்து வாழ்ந்தால் சுற்றத்

தினர் பெருகுவார்கள். தேடிய செல்வத்தின் காரணமாக இன்பம் உண்டாகும். இளகிய இரக்க மனம் இருந்தால் நல்ல அறச் செயல்கள் உருவாகும். இப்பொருளில் இப்பாடல் அமைந்துள்ளது. பிறரைத் திட்டுவதால் உண்டாவது பழிச் சொல்லே ஆகும். எல்லோருக்கும் வணக்கம் செய்து வாழ்ந் தால் சுற்றத் தினர் பெருகுவார்கள் என்று கூறப்பட்டது. பிறரை வசைமாரி பொழிந்து காரியத்தைக் கனிய வைக்க முடியாது. அதனால் பழிச் சொற்களே வரும். எல்லோரையும் மதித்துப் போற்றினால் சுற்றத்தினர் பெருகுவார்கள். அலட்சியப்படுத் தினால் நெருங்கிய உறவினர்கள்கூட விலகிவிடுவார்கள். ஆகவே, இனிமையான மொழி, பணிவு ஆகிய நல்ல பண்பு களே நமக்கு நன்மை தரும் என்பதை அறிய வேண்டும். தேடிய செல்வத்தின் காரணமாக இன்பம் உண்டாகும் என்று கூறப் பட்டது. உழைப்பால் வரும் செல்வம் அமிர்தம் போன்று நமக்கு இன்பத்தைத் தரும்; குறுக்கு வழியில் ஈட்டும் செல்வம் துன்பத்தைத் தரும். ஆகவே, நேர்வழியில் உழைத்துச் செல்வத் தைத் தேடவேண்டும் என்பது பொருளாகும். இளகிய இரக்க மனம் இருந்தால் நல்ல அறச் செயல்கள் உருவாகும். அறச் செயல் என்பது ஒருமனிதனின் தெய்வத் தன்மையை உணர்த்துவதற்குச் செய்யப்படும் முயற்சிகளைக் குறிக்கும். ஒவ்வொரு மனிதனுக்குள்ளும் சிங்கம் உறங்கிக் கொண்டிருக்கிறது. அதைத் தட்டி எழுப்ப வேண்டும். இந்தப் பணிகளைச் செய்பவர்கள்தான் மாபெரும் மனிதர்கள். உள்ளிருக்கும் சக்தி எழுந்துவிட்டால் எல்லா ஆற்றல்களையும் மனிதன் பெறுவான். அதை உணர்த்தும் அறச் செயல்கள் இரக்கமுள்ள மகான் களிடம்தான் தோன்றும்.

அ.பொ.

வைத்ததனால்-பிறரைத் திட்டுவதால். வசையே-பழிச் சொல்லே.

ஒருவன் அறிவானும் எல்லாம்; யாதொன்றும்
ஒருவன் அறியா தவனும்; ஒருவன்
குணன்அடங்கக் குற்றம் உளானும்; ஒருவன்
கணன்அடங்கக் கற்றானும் இல். 102

விளக்கவுரை

எல்லாவற்றையும் அறிந்தவன் ஒருவனும் இல்லை. ஒன்றினையாவது தெரிந்துகொள்ளாதவன் ஒருவனும் இல்லை.

(எல்லோரும் ஏதேனும் ஒன்றை அறிந்தே இருப்பார்கள்). நல்லகுணமே இல்லாத குற்றமுடையவன் ஒருவனும் இல்லை. அறியாமையே இல்லாமல் கற்றறிந்தவனும் எவனுமில்லை. இப்பொருளில் இப்பாடல் அமைந்துள்ளது.

எல்லாவற்றையும் அறிந்தவன் ஒருவனும் இல்லை. ஏதேனும் ஒன்றைத் தெரியாதவன் எவனும் இல்லை என்று கூறப்பட்டது. எல்லாம் தெரிந்தவனும் எவனுமில்லை; ஒன்றேனும் தெரியாதவனம் எவனுமில்லை அறிய வேண்டிய விஷயங்கள் ஏராளமாக உள்ளன. நம் சிற்றறிவுக்கு எட்டிய விஷயங்களைவிட அறிவைத் தாண்டிய விஷயங்கள் ஏராள மாக இருக்கின்றன. ஆனால் அறிவைத் தாண்டிய ஆராய்ச்சிக் குச் செல்ல ஆராய்ச்சியாளர்கள் அஞ்சுகிறார்கள். ஆனால் யோகிகளும், சித்தர்களும், அறிவைத் தாண்டிச் சென்றிருக் கிறார்கள். ஒவ்வொருவருக்குள்ளும் அழியாத ஆத்மா பிரகாசித்துக் கொண்டிருப்பதை அவர்கள் நேருக்குநேர் கண்டார்கள். அந்த அறிவைக் கடந்த விஷயங்களைக் கோடிக் கணக்கான பாமர மக்கள் அறியமாட்டார்கள். அதனால்தான் எல்லாம் அறிந்தவன் ஒருவனும் இல்லை என்று கூறப்பட்டது. ஒரு நல்ல குணம் கூட இல்லாத ஒருவன் இருக்க முடியாது. அதேபோல் அறியாமையே இல்லாதவன் என்றும் எவரும் இருக்க முடியாது என்று சொல்லப்பட்டது. எப்பேற்பட்ட அறிவாளியும் ஏதேனும் ஒரு விஷயத்தில் அறியாமை கொண் டிருப்பான் என்பது பொருளாகும். மொத்தத்தில் அறிய வேண்டிய விஷயங்களை அறியாதவர்கள்தான் இவ்வுலகில் அதிகம் உள்ளனர் என்பதை உணர்த்தும் பாடலாக இப்பாடல் அமைந்துள்ளது.

அ.பொ.

எல்லாம்-எல்லாவற்றையும். அறிவான்-அறிந்தவன்.

மனைக்கு விளக்கம் மடவார்; மடவார்
தமக்குத் தகைசால் புதல்வர்; மனக்குஇனிய
காதல் புதல்வர்க்கு கல்வியே; கல்விக்கும்
ஓதில் புகழ்சால் உணர்வு. *103*

விளக்கவுரை

வீட்டுக்கு ஒளியாக இருப்பவர் பெண்கள். அப்பெண் களுக்கு ஒளி நல்லகுணங்கள் நிறைந்த புதல்வர்கள். பெற்றோர்

மனத்திற்கு உகந்த புதல்வர்களுக்கு ஒளி கல்வி. சொல்லப் போனால் அப்படிப்புக்கு ஒளி என்பது உண்மை அறிவாகும். இப்பொருளில் இப்பாடல் அமைந்துள்ளது.

வீட்டுக்கு ஒளியாக இருப்பவர் பெண்கள். அப்பெண் களுக்கு ஒளி நல்ல குணங்கள் நிறைந்த புதல்வர்கள் என்று கூறப்பட்டது. நல்ல குணம் நிறைந்த பிள்ளைகள் தான் தாய்க்கு ஒளி. மகராசி பெற்ற பிள்ளைகள் என்று உலகத்தவர் சொல்லும்போது மகிழாத தாய் இருக்கமுடியுமா. அதைவிடப் பெருமைப் பேறு உண்டா? ஆகவே, நல்ல பிள்ளைகளைப் பெற்றெடுத்தவளே ஒளி பொருந்திய தாயாகும். பிள்ளை களுக்கு ஒளி என்பது கல்வி. அந்தக் கல்வி என்பது உண்மை அறிவை உணர்த்துவது என்று கூறப்பட்டது. உண்மை அறிவு என்பது நம் உடல் அல்ல; அழியாத ஆத்மா என்பதை அறிவதே ஆகும். அதனை உணர்த்தும் கல்வியே உண்மை யான கல்வி. பிள்ளைகள் கற்க வேண்டிய உண்மையான கல்வி இதுதான். அச்சத்தை அகற்றும் கல்விதான் உண்மையான கல்வி. நமக்கு மரணம் இல்லை என்பதை உணர்த்தும் கல்வியே உண்மையான கல்வி இந்த உலகத்தில் எதையும் சாதிக்க முடியும் என்ற நம்பிக்கை யைத் தரும் கல்வியே உண்மையான கல்வி. அந்த மாபெரும் சக்தி வெளியே மட்டும் இருக்கவில்லை. நம் ஒவ்வொருவருக் குள்ளும் இருக்கிறது என்பதை அறிவுறுத்தும் கல்வியே உண்மையான கல்வி. இந்தக் கல்விதான் பிள்ளைகளுக்கு ஒளி. இச்சிந்தனைகளைத் தூண்டும் விதத்தில் இப்பாடல் அமைந் துள்ளது.

அ.பொ.

மனைக்கு விளக்கம்-வீட்டுக்கு ஒளியாக இருப்பவர். மடவார்-பெண்கள்.

இன்சொலான் ஆகும் கிழமை; இனிப்புஇலா
வன்சொலான் ஆகும் வசைமனம்; மென்சொலின்
நாவினான் ஆகும் அருள்மனம்; அம்மனத்தான்
வீவுஇலா வீடாய் விடும். *104*

விளக்கவுரை

இனிய சொற்களால் ஒருவனுக்கு நட்புத் தன்மை ஏற்படும். இனிமை இல்லாத கடும் சொற்களால் கெட்ட எண்ணமே வரும். மெல்லிய சொற்களைக் கூறும் நாக்கினால் ஒருவனுக்கு

இரக்கமனம் வரும். அந்த இரக்கமனம் காரணமாக அழிவற்ற மோட்சவீடு கிடைத்துவிடும். இப்பொருளில் இந்நான்மணிக் கடிகைப் பாடல் அமைந்துள்ளது. இனிய சொற்களால் ஒருவனுக்கு நட்புத் தன்மை ஏற்படும். இனிமையான சொற்களால் தான் நண்பர்களைப் பெறமுடியும். இன்னா சொற்களால் பகைவர்கள்தான் பெருகுவார்கள் அனுமனின் இனிய சொற்களாலும், சாதுரியமான மதிநுட்பத்தாலும் சுக்ரீவனுக்கு இராமபிரானின் நட்புக் கிடைத்தது. அதனால் அவன் துன்பம் நீங்கி கிஷ்கிந்தைக்கு அரசன் ஆனான். ஆகவே, இனிய சொற்களால் நல்ல நட்புக் கிடைக்கும். நல்ல நட்பு பல நன்மைகளைத் தரும் என்பது கருத்து. மென்மையான சொற்களைச் சொல்பவன் இரக்க மனத்தைப் பெறுவான். இரக்க மனம் வந்தால் அழிவற்ற மோட்ச வீடு கிடைத்து விடும் என்று கூறப் பட்டது. அழிவற்ற மோட்ச வீடு என்றால் என்ன? கோடி கோடியாகச் செல்வம் பெற்றாலும் நிலையான இன்பம் கிட்டாது. உற்றார், உறவினர் போன்ற படைபலத்தாலும் நிலையான இன்பம் கிட்டாது. இரக்க மனம் கொண்டு எல்லா உயிர்களையும் நேசிப்பவனை இறைவன் நேசிக்கிறான். அதன் காரணமாக அவனுக்கு மெய்ஞானத்தை உணர்த்துகிறான். மெய்ஞானம் என்பது நம் அழியும் உடல் அல்ல; அழியாத ஆத்மா என்பதே. இந்த ஆத்ம தரிசனம் தான் அழிவற்ற மோட்ச வீடு. இச்சிந்தனைகளைத் தூண்டும் விதத்தில் இப்பாடல் உள்ளது.

அ.பொ.

இன்சொலன்-இனிய சொற்களால். கிழமை ஆகும்-ஒருவனுக்கு நட்புத் தன்மை உண்டாகும்.

❑ ❑ ❑

திருமதி.அம்சவேணி பெரியண்ணன்

"திருக்குறளை மக்களிடம் பரவலாக எடுத்துச் செல்வதில் புதிய முறையைக் கையாண்டவர். திருக்குறளை ஓலைச்சுவடிபோல் பதிப்பித்தும் திருமணப் பரிசாகவும் நண்பர்களுக்கு அன்பளிப்பாக வழங்கும் பழக்கத்தை அறிமுகப்படுத்தியவர். வாழ்க்கைத் துணைநலம் என்ற வள்ளுவர் பெருந்தகையின் கருத்துக்கு இலக்கணமாக வாழ்ந்தவர் திருமதி.அம்சவேணி பெரியண்ணன்."

– சுதந்திரப் போராளி தோழர்.இரா.நல்லகண்ணு

மூத்த தலைவர், தேசியக் குழு உறுப்பினர், இந்திய கம்யூனிஸ்ட் கட்சி

"நூல்களுக்காக வாழ்ந்தவர் இப்போது நூலாகவே வாழ்கிறார்! அந்தக் காலத்தில் பாடப்புத்தகங்களைத் தாண்டி பல்வேறு துறைகள் சார்ந்த புத்தகங்களை அச்சிட்டு, அனைவரையும் படிக்க வைத்தார். ஒரு பெண்மணி என்றால் நம்ப முடிகிறதா? அந்த சாதனையைப் படைத்தவர்தான் அம்சவேணி பெரியண்ணன். சாதனைப் பெண்மணி அம்சவேணி பெரியண்ணன் பல விஷயங்களில் முதல்வர்."

– மருத்துவர் அன்புமணி இராமதாஸ்

தர்மபுரி நாடாளுமன்ற உறுப்பினர்

"பதிப்பகத்துறையில் முதல் பெண்மணி என்னும் மகுடம் தரித்தவர் திருமதி.அம்சவேணி பெரியண்ணன். ஒரு பெண் பதிப்பாளராக 1000 நூல்களை வெளியிட்டுள்ளார் என்பது வியக்கத்தக்க ஒன்றாகும். பதிப்பகத் துறையில் முதல் பெண்மணி என்னும் மகுடம் தரித்தவர் வனிதா பதிப்பகம் திருமதி.அம்சவேணி பெரியண்ணன் அவர்கள். பெண்ணுலகின் அணிகலனாக ஒளிரும் அம்மையாருக்கு நன்றி!"

– கி.வீரமணி

தலைவர், திராவிடர் கழகம்

"நான் எழுதிய மக்களிசைப் பாடல்கள், பழமொழிக் கதைகள், சிறுவர் பாடல்கள் போன்ற பல்வேறு நூல்களை வெளியிட்டு என்னை எழுத்தாளராக உயர்த்தியவர். என் மனைவி அனிதா குப்புசாமி அவர்களுடன் ஏற்பட்ட நெருங்கிய பழக்கத்தில் அவர்கள் செய்கின்ற சமையல்களைப் பார்த்து 'ஏன் நீங்கள் சமையல் நூல்கள் எழுதக் கூடாது' எனக் கேட்டு உயர்தரமிகு சைவ சமையல், டிபன் சமையல், இனிப்பு வகைகள் போன்ற பல்வேறு நூல்களை வெளியிட்டு பெருமைப்படுத்தியவர். பதிப்புத்துறையில் இவர் செய்த சாதனைகள் எண்ணிலடங்கா."

– கலைமாமணி முனைவர் புஷ்பவனம் குப்புசாமி,

கிராமிய இசைக் கலைஞர்.